விலை ரூபா: 8.00 Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

கள்:- பதினான்கு

த 06 வள்ளுவர் ஆண்டு 2036 சித்திரை 18 ஞாயிற்றுக்கிழமை (01.05.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 133

புதுப் பொலிவுடன் திருநெல்வேலியில்

WESTERN UNION

பணப் பரிமாற்றும்

விரைவானது பாதுகாப்பானது நம்பகமானது

இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் மிக துரிதமாக பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு

♦ பணம் பெறுவதற்கு வங்கிக்குப் போகத் தேவையில்லை
♦ வங்கிக் கணக்கு அவசியமில்லை
♦ நீடிக்கப்பட்ட சேவை நேரம்
♦ 365 நாள் சேவை
♦ 10 (MTCN) இலக்கங்களைப் பெற்றவுடன் எம்மை நாடவும்

THIRUMURUGAN COM NET

T.P. 021 2227310
021 2227555
021 2227560
FAX 021 2227310
E-mail: thirumurugan@eudoramail.com

46, ஆடியபாதம் வீதி, (ப.நோ.கூ.ச. முன்பாக) திருநெல்வேலி யாழ்ப்பாணம்

# தமிழ்த் தேசிய உணர்வெழுச்சியாக யாழ். குடாநாட்டில் இன்று மாபெரும் மேதின நிகழ்வு!

## மக்களை அணிதிரளுமாறு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

உலகத் தொழிலாளர் தினமான மேதினத்தை யாழ்.குடாநாட்டில் இன்று மிகப்பிரமாண்டமான முறையிலும், எழுச்சிபூர்வமாகவும் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இன்று பிற்பகல் 2மணிக்கு நல்லூர்க் கந்தன் ஆலய முன்றலில் இருந்து இம் மாபெரும் மேதினப்பேரணி ஆரம்பமாகும்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## சிவராமின் இறுதிக்கிரியை நாளை மட்டக்களப்பில்

(மட்டக்களப்பு)

கடத்திச் செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர் தர்மரட்ணம் சிவராமின் இறுதிக்கிரியைகள் நாளை திங்கள்கிழமை மட்டக்களப்பில் நடைபெறவுள்ளது. சிவராமின் சொந்த இடமான மட்டக்களப்பில் உள்ள ஆலையடிச்சேனை மயானத்தில் இறுதிக்கிரியைகள் இடம்பெறவுள்ளன.

சிவராமின் பூதவுடல் தற்போது கொழும்பில் உள்ள அவரது இல்லத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. (இ-8)

## சிவராமுக்கு 'மாமனிதர்' விருது

(கிளிநொச்சி)

படுகொலைசெய்யப்பட்ட ஊடகவியலாளர் டி.சிவராமிற்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் 'மாமனிதர்' என்ற அதிஉயர் தேசியவிருதினை வழங்கி கௌரவித்துள்ளார்.

தமிழ் மண்ணையும் தமிழ் மக்களையும் ஆழமாக நேசித்த ஒரு உயர்ந்த மனிதரை தமிழர் தேசம் இன்று இழந்துவிட்டது தமிழீழ மண்ணின் விடிவிற்காகவும் தமிழீழ மக்களின் விடிவிற்காகவும் ஓங்கிஒலித்த ஒரு உரிமைக்குரல் இன்று ஓய்ந்து விட்டது.

எதிரியின் கோழைத்தனமான தாக்குதலுக்கு தலைசிறந்த தமிழ் பத்திரிகையாளர் பலியாகிவிட்டார். தர்மரட்ணம் சிவராம் எளிமையும் நேர்மையும் பொருந்திய ஒரு தனித்துவமான மனிதர். நிறைந்த அறிவு படைத்தவர் எழுத்துத்துறையில் மிகுந்த விற்பன்னர். உலக அரங்கில் மிகவும் பிரபல்யமான பத்திரிகையாளர். இவருக்கு அறிமுகமே தேவையில்லை இவர் தனது எழுத்துக்களால் தமிழரின் தேசியபிரச்சினையினை உலக அரங்கிலே மிகவும் நேர்த்தியான முறையில் தெளிவாக எடுத்து கூறினார்.

சிங்கள (14 ஆம் பக்கம் பார்க்க)

## 'விழி நிமிர்த்திய வீரம்' தலைவர் பிரபா வெளியீடு

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனால் "விழி நிமிர்த்திய வீரம்" ஒலிப்பேழை வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் படையணியின் (14 ஆம் பக்கம் பார்க்க)

## சியாம் சரன்-நிருபமராவ் திருகோணமலைக்கு விஜயம்

(திருகோணமலை)

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இந்திய வெளியுறவு அமைச்சின் செயலாளர் சியாம் சரன், இணைச் செயலாளர் நீலென்றி ஆகியோர் நேற்று திருகோணமலைக்கு விஜயம் செய்தனர்.

திருகோணமலை தொழிநுட்ப கல்லூரிக்கு விஜயம் மேற்கொண்டு 5 மில்லியன் பெறுமதியான, கணணிகள், உபகரணங்கள் மற்றும் வான் ஒன்றையும் கல்லூரி அதிபரிடம் ஒப்படைத்தனர். இந்த வைபவத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான இரா. சம்பந்தன், க. துரைரட்ணசிங்கம், இலங்கைக்கான இந்தியத்தூதுவர் நிருபமராவ் ஆகியோர் கலந்துகொண்டனர். (இ-08)

## எரிக்சொல் – அகாஷி இலங்கை வருகின்றனர்

(கொழும்பு)

இலங்கை அரசாங்கதிற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையே ஏற்படுத்தப் படவிருக்கும் உத்தேச பொதுக்கட்டமைப்பு பற்றிய தற்போதைய நிலைபரம் குறித்து ஆராய்வதற்காக நோர்வே மற்றும் ஜப்பான் நாட்டு விசேடபிரதிநிதிகளான எரிக்சொல்ஹெய்ம் மற்றும் ஜசூசி அகாசி ஆகியோர் அடுத்தவார இறுதியில் இலங்கை வரவுள்ளனர்.

இந்நிலையில் இம் மாதம் 16ம் 17ம் திகதிகளில் இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் கூட்டம் கண்டியில் நடைபெற உள்ளது.

அதற்கு முன்னர் பொதுக்கட்டமைப்பு குறித்து உடன்பாட்டுக்கு இரு தரப்பையும் கொணடுவரும் முயற்சியில் [illegible] காக இவ் விசேடபிரதிநிதிகள் [illegible] வரவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## ருகோணமலைக்கு விஜயம்

(திருகோணமலை)

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இந்திய வெளியுறவு அமைச்சின் செயலாளர் சியாம் சரன், இணைச் செயலாளர் நீலென்ரி ஆகியோர் நேற்று திருகோணமலைக்கு விஜயம் செய்தனர்.

திருகோணமலை தொழிநுட்ப கல்லூரிக்கு விஜயம் மேற்கொண்டு 5 மில்லியன் பெறுமதியான, கணணிகள், உபகரணங்கள் மற்றும் வான் ஒன்றையும் கல்லூரி அதிபரிடம் ஒப்படைத்தனர். இந்த வைபவத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான இரா. சம்பந்தன், க. துரைரட்ணசிங்கம், இலங்கைக்கான இந்தியத்தூதுவர் நிருபமராவ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(இ-08)

## கொழும்பில் இன்று மேதினம் பிரதான கட்சிகள் பங்கேற்பு

(கொழும்பு)

தொழிலாளர் தினத்தை முன்னிட்டு பிரதான அரசியல் கட்சிகளும், தொழில் சங்கங்களும் இன்று கொழும்பிலும் பிற மாவட்டங்களிலும் ஊர்வலங்களையும் கூட்டங்களையும் நடத்தவுள்ளனர்.

இவற்றுள் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணியினதும் ஐக்கிய தேசியக்கட்சியினதும் கூட்டங்கள் முக்கிய இடம் வகிக்கின்றன. 'நாடு முன்னணியில்' எனும் தொனிப்பொருளின்கீழ் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணியின் கூட்டம் காலி முகத்திடலில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்திற்கு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமை தாங்கவுள்ளார். பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளான சமசமாஜக் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, தேசிய ஐக்கிய முன்னணி, கம்யூனிஸ்ட்கட்சி என்பன இக்கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளன. இவர்களின் ஊர்வலம் கெம்பல் மைதானத்தில் இருந்து ஆரம்பமாகும்.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் கூட்டம் அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவின் தலைமையில் கொழும்பு நகரசபை மைதானத்தில் நடைபெறவுள்ளது. இவர்களின் ஊர்வலம் சுகததாஸ விளையாட்டரங்கிற்கு அருகாமையில் இருந்து ஆரம்பிக்கவுள்ளது. (இ-4)

## இலங்கை வருகின்றன

(கொழும்பு)

இலங்கை அரசாங்கதிற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையே ஏற்படுத்தப்படவிருக்கும் உத்தேச பொதுக்கட்டமைப்பு பற்றிய தற்போதைய நிலைபரம் குறித்து ஆராய்வதற்காக நோர்வே மற்றும் ஜப்பான் நாட்டு விசேடபிரதிநிதிகளான எரிக்சொல்ஹெய்ம் மற்றும் ஜசூசி அகாசி ஆகியோர் அடுத்தவார இறுதியில் இலங்கை வரவுள்ளனர்.

பொதுக்கட்டமைப்பினை உருவாக்குவதில் இன்னும் இழுத்தடிப்பு காணப்படுகிறது. இந்நிலையில் இம் மாதம் 16ம் 17ம் திகதிகளில் இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் கூட்டம் கண்டியில் நடை... உள்ளது.

அதற்கு முன்னர் பொதுக்... குறித்து உடன்பாட்டுக்கு இரு... கொணடுவரும் முயற்சியில் ... காக இவ் விசேடபிரதிநிதிகள் ... வரவுள்ளதாக தெரிவிக்கப்படு...

எரிக்சொல்ஹெய்ம் மே ... திகதியும் யசூசிஅகாசி மே ... திகதியும் இலங்கை வரவுள்ளனர்.

## சிவராம் படுகொலைச் சம்பவம் இதுவரை 30 பேரிடம் விசாரணை

ஊடகவியலாளர் சிவராம் கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டமை தொடர்பாக பொலிஸார் இதுவரை 30 பேரிடம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

சிவராம் கடத்தப்பட்டபோது நேரில் கண்டவர்களிடமிருந்தும் தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் கொழும்பு பொலிஸ் குற்றப்பிரிவின் பணிப்பாளர் சரத்லூகொட தெரிவித்துள்ளார்.

இந்த தகவல்களின் அடிப்படையில் கடத்தல் சம்பவத்துடன் பலர் சம்பந்தப்பட்டுள்ளார்கள் என தாம் நம்புவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை சிவராம் பலப்பிட்டியில் உள்ள உணவு வி... ஒன்றில் இருந்து வெளியே வந்தபோ... கடத்தப் பட்டு பாராளுமன்றத்திற்கு அரு... சடலமாக மீட்கப்பட்டார்.

இதன் அடிப்படையில் குறிப்பிட்ட இடத்தில் கைரேகை நிபுணர்களை ஈடுபடுத்தி பரிசோதனைகளை மேற்கொண்டபோதும் எந்தவொரு தடயத்தையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை என சரத்லூகொட தெரிவித்தார்.


SWISS
Mineral Water



Buy Swiss Mineral and win several lakhs worth of prices

Head office
Gbn, Posfach
8026 Zurich, Switzerland,
Tel.+41 243 82 59

Factory
231, Temple Road,
Nallur, Jaffna.
Tel.+94 77 312 69 63

சுவிஸ் மினறலின் யாழ்குடா நாட்டிற்கான ஏக விநியோகஸ்தர்கள் யாழ்மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவு சங்கங்களின் சமாசம். தொலை பேசி : 0094 21 222 ...


நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மற்றோரில் அன்பு கொள்பவன் இறைவனால் நேசிக்கப்படுவான்

உலகத்திலே வாழும் ஒவ்வொருவரும் ஏதோ ஒருதொழிலைச் செய்தே தமது வாழ்க்கையை



நடாத்துகின்றார்கள். தொழிலாளர்களே ஒருநாட்டின் முதுகெலும்புகள். ஆனால் எல்லாத் தொழிலுக்கும் தாய் தொழிலாகவும் முதற் தொழிலாகவும் அமைவது உழவுத் தொழிலே. மண்ணைப் பண்படுத்தி உணவு உணவுப்பொருட்களை உழுபவர்கள். இத்தொழிலை ஒரு பாடு படுத்தியே ஏனைய தொழில்கள் வளர்ந்து தொடங்கின.

தொழிலாளர் உழைத்து முதலாளிகளிடம் கொடுப்பதினால் முதலாளிகள் பெரும் செல்வந்தர்களாக மாறினர் தொழிலாளர்கள் இந்த நிலையிலே இருந்து கஷ்டங்களையும் துன்பங்களையும் அனுபவித்துக் கொண்டு வந்தார்கள்.

தொழிலாளர்களும் வாழ்வு பெறவேண்டும் என உருவாக்கப்பட்ட தினமே உலகத் தொழிலாளர் தினம் மேதின நாள். வேதத்தில் குறிப்பிடப்படுகின்றது "போரடிக்கும் மாட்டின் வாயைக் கட்டாதே" அதேபோல "உழைக்காதவன் உண்ணலாகாது"

## பரமபிதா காட்டியபாதை

### உன் அயலானை நேசி

அடக்கி ஒடுக்கப்படும் பொழுதே மனிதன் சுதந்திரம் பெறத் துடிக்கின்றான். அவனுக்கு உரியவைகள் அவனுக்கு தாராளமாகக் கிடைக்கும் போது அவன் அமைதியாக வாழ முற்படுகின்றான். எனவே "உன்னைப் போல் உன் அயலானையும் நேசி" என்று இயேசு கூறிய வார்த்தை நம் பொருள் தொடக்கும் போது பிரச்சினைகள், பிழவுகள், போராட்டங்கள், வேட்கைகள் உலகில் நின்று அகன்று போகும்.

மாறாக ஆக்கிரமிப்பும், அராஜகமும், அடாவடித்தனங்களும் நிகழ்த்திக் கொண்டு அன்பு வாழ்வுக்கு, அமைதி வாழ்வுக்கு அழைப்பு விடுப்பதால் பயனில்லை. இயேசு சொன்னதைச் செய்தார். செய்ததையே சொல்லிக்காட்டிப் போதனை செய்தார். எமது வாக்குறுதிகள் மக்கள் மத்தியில் போலியானதாக இருக்கும் வரை அது நாட்டிலே அமைதி, சமாதானம் சுபீட்சத்தைக் கொண்டு வரப் போவதில்லை.

### உயிரின் மாண்பை மதி

யூதர்கள் சமாரியரை வெறுத்து ஒதுக்கினார்கள். அவர்களுக்கு இயேசுவின் நற்செய்தி பெரும் பயனளித்தது. ஒதுக்கப்பட்ட மக்களின் பக்கம் ஆள்பவர்களின் பார்வை திரும்பவேண்டும். உரிமை மக்கள் என்று கோசமிடுபவர்கள் சிறுபான்மை மக்களுக்கும் உரிமைகளை அனுபவிக்க வாய்ப்புகள் கொடுக்கவேண்டும். இல்லையேல் போரும் வன்முறைகளுமே வாழ்வியலாக மாற்றம் பெற்றுவிடும்.

உயிர்கள் எல்லாம் ஒன்றே. உரிமைகள் மறுக்கப்பட்டால் உரிமைப்போராட்டங்கள் தவிர்க்கப்பட முடியாதவை. அனைத்தையும் செய்யக் கூடியவன் அன்னியனிடம் அடிபணிந்து இருக்கமாட்டான். பகைவனையும் நேசிக்கும் பக்குவம் வளரும்போதே அன்பு, மன்னிப்பு, கருணை, இரக்கம் எல்லாம் வாழ்வியல் பண்பாக மாறும்.

இயேசுவை பிடிக்க வந்த போர் வீரரின் காதை இயேசுவின் சீடன் ஒருவன் வாளினால் வெட்டிக் காயப்படுத்தினான். இயேசு அவனுக்கு கூறினார் "வாளெடுப்பவன் வாளாலே மடிவான் உன்வாளை உறையிலே போடு" என்று அந்த வேளையிலும் உயிரின் மாண்பை மதித்தார் இயேசு.

### உன்வாழ்வு மற்றவர்க்கு துணைசெய்யும்

உண்மையே நீ கனிவாக நடந்து கொள். நீ பிறரை உயர்த்துவதன் மூலம் நீ உயர்ந்தவனாவாய். எவரையும் புறக்கணிக்காமல் எல்லோருடனும் அன்போடு பழகும் போது நீங்கள் யாருக்கும் வாரி வழங்கும் தேவையில்லை. உங்கள் தோழமையான செயற்பாடு மற்றவர்களின் துன்பங்களையும் போக்க வல்லது. "பிறர் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் விரும்புகின்றீர்களோ அவற்றையே அவர்களுக்கு செய்யுங்கள்" என்றார் இயேசு. இந்தப் பொன்மொழியிலே மதிப்பு, கௌரவம், அனபு, அரவணைப்பு எல்லாம் தங்கியுள்ளது. அநீதி மனப்பான்மையை, வன்சொல்லை, வக்கிரத்தை நீக்கி வாழுங்கள். அன்போடும் மனமகிழ்வோடும் பிறரை உங்களிலும் உயர்வானவராக மதியுங்கள். எல்லாம் நற்தினங்களாகும். எல்லாம் கைகூடும். இறையருளும் நம்மைத் தொடரும். □

**அன்ரனி பீற்றர்**

## இராசிபலன்

**01.05.2005**
**(சித்திரை 18, ஞாயிற்றுக்கிழமை)**
**அட்டமி பின்னிரவு 12.36 மணிவரை**
**திருவோணம் பின்னிரவு 12.09மணிவரை**
**இராகுகாலம் 04.27 - 05.57 மணிவரை**
**சுபநேரம் 08.57-10.27 மணிவரை**
**நடேசர் அபிசேகம்**

- **மேடம்** — நல்ல செய்தி, அதிக பிரயாசை, சுப நிகழ்வு, எடுத்த காரியம் கைகூடும்.
- **இடபம்** — ஆன்றோர் மதிப்பு, உடல் உழைப்பு, வீண் பயம், புதிய திட்டமிடல்.
- **மிதுனம்** — [...] அச்சம், போசன சுகம், எதிர்பார[...] பயம். ஆரோக்கியக் குறைவு, [...]
- **கடகம்** — திடீர் பயணம், அபூர்வ சந்திப்பு, கௌரவமான நிலை, தெய்வ சிந்தை.
- **சிங்கம்** — சுகவாழ்வு, தொழில் நன்மை, தெய்வ தரிசனம், போசன சுகம்.
- **கன்னி** — மனக்கவலை, எடுத்த கருமங்கள் தாமதமாகும், போசன சுகக்குறைவு, அதிக செலவு.
- **துலாம்** — பயந்த சுபாவம், கல்வியில் ஆர்வம், விரும்பாத உறவு, வேலைச் சுமை.
- **விருச்சிகம்** — இனிய அனுபவம், அந்நியர் சந்திப்பு, வாக்கு மேன்மை, பொருள் சேர்க்கை.
- **தனுசு** — மதிப்புக் குறைதல், வீண்வார்த்தை, காரிய தாமதம், பண விரயம்.
- **மகரம்** — நல்ல முயற்சி, சயன சுகம், புதிய தகவல், உறவினர் சந்திப்பு.
- **கும்பம்** — பிதா சிந்தை, கோப்பப்படுதல், காரிய அலைச்சல், தனவிரயம்.
- **மீனம்** — தொழில் சிந்தை, நண்பர்கள் சந்திப்பு, புகழ், எடுத்த காரியம் கைகூடும்.

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது

—வளவன்

## மேதின ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

இடைநிறுத்தப்பட்ட சமாதானப் பேச்சுக்கள் உடனடியாக ஆரம்பிக்கப்படவேண்டும். ஜனாதிபதியினால் தயாரிக்கப்பட்டு அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்ற முதலாம் தர ஆசிரியர்களின் பதவி உயர்வு உள்ளிட்ட இலங்கை ஆசிரியர் சேவை குறிப்பின் திருத்தச் சுற்றறிக்கையினை உடன் வெளியிடவேண்டும் ஆகியன உள்ளிட்ட 20 கோரிக்கைகளை முன்வைத்து கல்விச் சேவையாளர்களின் தொழிற்சங்கக் கூட்டமைப்பு இம்முறை தனது மேதினப் பேரணியினை நடாத்தவுள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கம், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் உள்ளிட்ட 12 சங்கங்களின் கூட்டமைப்பு இதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றன. (ற-4)

## தபால் திணைக்களத்தின் நிர்வாக செயற்பாடுகள் சீர்குலைந்துள்ளன

(கொழும்பு)

தபால் திணைக்களத்தின் நிர்வாகம் சீர்குலைந்துள்ளது. அதில் தற்போது 6 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வெற்றிடங்கள் நிலவுகின்றன. 1994 ஆம் ஆண்டிலிருந்து [...]களத்துக்கு ஊழியர்கள் இணைத்துக் தபால் திணை[...]பால் தொலைத் தொடர்பு கொள்ளப்படவில்லையென த[...] ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

தபால் திணைக்களத்தின் அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்வதில் பாரிய சிரமங்கள் எதிர்நோக்கப்படுவதாக மேற்படி சங்கத்தின் பொதுச் செயலாளர் கே.எஸ்.வீரசேகர தெரிவித்திருக்கிறார்.

அதிகளவிலான எதிர்பார்ப்புக்களின் மத்தியிலேயே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்திற்கு ஆதரவளித்தோம். ஆனால், எமது எதிர்பார்ப்புக்கள் தற்போது சிதறடிக்கப்பட்டு வருகின்றன என்றும் பொதுச் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ந்-5)

## சட்டக்கல்லூரி அனுமதிக்காக மே. 31வரை விண்ணப்பிக்கலாம்

(கொழும்பு)

இலங்கை சட்டக் கல்லூரி 2006 ஆம் கல்வி ஆண்டுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

இந்த விண்ணப்பங்கள் மே மாதம் 31 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சட்டக்கல்லூரி நுழைவுப் பரீட்சைக்குத் தோற்ற ஆர்வமுள்ள தமிழ்மொழி மூல மாணவர்களின் நன்மை கருதி தமிழ் சட்டக்கல்வி வட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு மட்டக்களப்பு மகாஜன கல்லூரியிலும் பிற்பகல் 3.00 மணிக்கு கல்முனை கார்மேல் பாத்திமா கல்லூரியிலும் இலவச வகுப்புகளை நடத்தவுள்ளது.

சட்டக்கல்லூரி நுழைவு தொடர்பான விளக்கங்களும் நுழைவு தொடர்பான வழிகாட்டல்களும் இதன் போது வழங்கப்படும். (ற-9)

## மேதின ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

புதிய ஜனநாயகக் கட்சியின் மேதின ஆர்ப்பாட்ட ஊர்வலம் இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 மணிக்கு திருநெல்வேலிச் சந்தியி[...]லிருந்து ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து மு.ப.11.30 மணிக்[...] யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்[...] மண்டபத்தில் மேதினக் கூட்ட[...] இடம்பெறவுள்ளது.

புதிய ஜனநாயகக் கட்சி[...] வடபிரதேச செயலாளர் [...] கா.கதிர்காமநாதன் தலைமை[...] நடைபெறவுள்ள இக் கூட்ட[...]ல் தோழர்களான புதிய ஜனநா[...]க் கட்சியின் பொதுச் செயல[...]ர் சி.கா.செந்திவேல், அரசியல் [...] உறுப்பினர் சோ.தேவராஜா, [...] கலை இலக்கியப் பேரவை "[...]" ஆசிரியர் க.தணிகாசலம், இ[...] ஆசிரியர் சங்க முன்னாள் [...]வர் மு.தியாகராஜா, நவ[...] தொழிற்சங்க உறுப்பினர் கா[...] லிங்கம் ஆகியோர் உள்[...] தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் உரையாற்றுவர். (ந-2)

## திறைசேரி முறிகள் பகிரங்க சந்தைக்கு...

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கி இவ்வருடம் திறைசேரி முறிகளை [...]கிரங்க சந்தைக்கு விடுவதற்கு [...]மானித்துள்ளது.

பொதுமக்களுக்கான வட்[...]திதங்களைத் தீர்மானிக்க இது உதவும் என்று மத்திய வங்கியின் ஆளுநர் சுனில் மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

தேசிய அழிவுகள் ஏற்படும் போதும் உலக சந்தையில் எண்ணெய் விலைகள் அதிகரிக்கும் போதும் பொருளாதார வீழ்ச்சியேற்படுவதைத் தடுப்பதற்கு மத்திய வங்கியின் விரிவான கட்டமைப்புகள் உதவியுள்ளன என்றும் மெண்டிஸ் தெரிவித்தார். (க-9)

## பொது மக்கள் பாரபட்சம் பாராது வாழப் பழகிக்கொள்ள வேண்டும்

### -ஆளுநர் டிரோன் பெர்னாண்டோ

(திருகோணமலை)

ஆழிப்பேரலையால் அதிகமாகப் பாதிக்கப்பட்ட பிரதேசம் வடக்கு-கிழக்கு மாகாணமாகும். அதனை எவரும் மறைக்கவோ, மறுக்கவோ முடியாது என வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் டிரோன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரியில் கடந்த புதன் கிழமை வடக்கு-கிழக்கு மாகாண பண்பாட்டுத் திணைக்களம் புத்தாண்டு நிகழ்வு ஒன்றினை நடத்தியது. இதில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாணங்களைப் புனரமைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்தபோதும், அதற்கான நிதியுதவிகள் இது வரை வழங்கப்படவில்லை.

அரசாங்கத்தின் இவ்வாறான நடவடிக்கையால் சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்கு- கிழக்கு மக்கள் விசனம் அடைந்துள்ளனர். எனவே, அரசு அதனை உணர்ந்து செயற்படவேண்டும்.

வடக்கு -கிழக்கு வாழ் ம[...]ளைப் பொறுத்தவரை கடல் என்பது[...] யானதொன்றே. இதனை நா[...]த வகையிலும் தவிர்த்து விடமுடியா[...]து.

மனிதர்கள் எவ்வாறு வாழவேண்டும், எப்படிப் பழகவேண்டும் என்பன பற்றி நல்ல பாடங்களை ஆழிப்பேரலை எமக்குப் புகட்டித்தந்துள்ளது.

ஆழிப்பேரலை எமக்கொரு படிப்பினை. மக்கள் தம்மத்தியில் வித்தியாசம் பார்க்காது வாழப்பழகிக் கொள்ளவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ந-4)

## விவாத அரங்கு - 8

விடயம்

நம்மவர்கள் வெளிநாடு சென்றதனால் எமது கலாசாரம்:

✧ சீரழிந்துள்ளது.

✧ சீர்பெற்றுள்ளது.

நடுவர்: சிரேஷ்ட சட்டத்தரணி திரு.சி.சிவநேசன்

உங்கள் வாதங்களை எழுதி அனுப்பி வையுங்கள்.


அனுப்பவேண்டிய முகவரி :
விவாத அரங்கு, வலம்புரி,
இல.15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

# மீள்பார்வை

## பிரியானி விஜேசேகர எழுதிய

# இலங்கையில் பாராளுமன்ற வழக்கம்

## (தமிழாக்கம் : ஆர்.எஸ். வேதநாயகம்) 54



(iii) ஓர் உபகுழுவின் தவிசாளராகப் பணியாற்றும் ஓர் உறுப்பினர் ஒரே சமயத்தில் அத்தகைய ஆலோசனைக் குழுவின் வேறோர் உபகுழுவில் தவிசாளராகப் பணிபுரிதலாகாது.

(iv) பாராளுமன்றச் செயலாளர் நாயகமோ அல்லது அவரால் நியமிக்கப்படும் வேறோர் அலுவலரோ ஒவ்வொருஉபகுழுவினதும் செயலாளராதல் வேண்டும். அத்தகைய ஒவ்வொரு உபகுழுவினதும் கூட்ட அறிக்கைகள் அச்செயலாளரால் தயாரிக்கப்படுதலும் பேணப்படுதலும் வேண்டும்.

(v) ஆலோசனைக் குழு வேறுவிதமாகத் தீர்மானித்தாலொழிய உப குழுக்களின் எல்லாக் கூட்டங்களும் பாராளுமன்றத்திலேயே நடாத்தப்பட வேண்டும்.

*நிலையியற் குழுக்கள் (சட்டவாக்கம்)*

116. நிலையியற் குழுவொன்றின் கடமை. பாராளுமன்றத்தினால் அதற்கு அனுப்பப்படும் சட்டமூலங்கள்/ உத்தேச நியதிச் சட்டங்களை ஆராய்வதற்கு மட்டுப்படுத்தப்படுதல் வேண்டும். அத்துடன் அந்நோக்கத்திற்காக ஆட்களையும், பத்திரங்களையும், பதிவேடுகளையும் வரவழைப்பதற்கு அதற்கு அதிகாரமாயிருத்தல் வேண்டும்.

117. நிலையியற் குழுவுக்கு அனுப்பப்படும் சட்டமூலம் /உத்தேச நியதிச்சட்டம் எதனையும் ஆராய்வாதற்கான குழுவின் முதலாவது கூட்டம் தவிசாளர் நியமிக்கும் அத்தகைய காலத்திலும் இடத்திலும் நடாத்தப்படல் வேண்டும். அதே சட்டமூலத்தை / உத்தேச நியதிச் சட்டத்தை ஆராய்வதற்கான அடுத்தகூட்டங்கள் குழு முடிவு செய்யும் அத்தகைய காலங்களிலும் இடங்களிலும் நடாத்தப்படல் வேண்டும். ஆயின், குழு அவ்வாறு செய்யத்தவறுமிடத்து, தவிசாளர், செயலாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்து், அத்தகைய காலங்களையும் இடங்களையும் நியமித்தல் வேண்டும்.

118.(1) நிலையியற் குழுவொன்றின் தவிசாளருக்கு மூலவாக்கு ஒன்றுண்டு. அத்துடன் வாக்குகள் சமமாகப் பிரிந்திருக்குமிடத்து, அவருக்கு அறுதியிடும் வாக்கொன்றும் உண்டு.

(2) நிலையியற் குழு ஒன்றுக்கு அனுப்பப்படும் சட்டமூலம் ஒன்றுக்குப் பொறுப்பான ஓர் உறுப்பினர், அக்குழுவின் ஓர் உறுப்பினராக இல்லாவிடின், அத்தகைய சட்டமூலம் ஆராயப்படும் கூட்டம் எதற்கும் சமூகமளிக்கவும், அச்சட்டமூலத்தைப் பற்றி உரை நிகழ்த்தவும், அத்தகைய சட்டமூலம் தொடர்பாக எழும் பிரச்சினை குறித்தும் திருத்தங்களைப் பிரேரித்து அக்குழுவின் ஓர் உறுப்பினர் போன்று வாக்களிக்கவும் அவருக்கு உரிமையுண்டு.

119. நிலையியற் குழுக்களின் நடைமுறை. ஏறத்தாள முழுப் பாராளுமன்றத்தையும் கொண்ட குழுக்களின் அதே நடைமுறையாக இருத்தல் வேண்டும். அத்துடன் நிலையியற் குழுவொன்றின் கூட்டக்குறிப்புகள் முழுப் பாராளுமன்றத்தையும் கொண்ட குழுவொன்றின் கூட்டக்குறிப்புகள் பதியப்படுதல் போன்றே பதியப்படுதல் வேண்டும் என்பதுடன், பாராளுமன்றம் விதித்த காலவெல்லை, ஏதுமிருப்பின் அதற்குள் பாராளுமன்றத்திற்கு சட்டமூலத்துடனும் உத்தேச நியதிச் சட்டத்துடனும் அதன் மீதான அறிக்கையுடனும் அறிவிக்கப்படுதல் வேண்டும்.

120. பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டாலும் ஒரு நிலையியற் குழு அதன் கலந்தாராய்வுகளை நடத்தலாம். ஆயின், எவ்வாறாயினும் ஒரு கூட்டத்தொடரின் இறுதியில் நிலையியற் குழுவொன்று அதன் கலந்தாராய்வினை முடித்து அறிக்கையைப் பாராளுமன்றத்துக்கு அளித்திராதவிடத்து, அதன் நிகழ்ச்சிகள் பாராளுமன்றத்தின் அடுத்த கூட்டத்தில் அச்சட்டமூலம் உத்தேச நியதிச் சட்டம் அனுப்பப்படத்தக்க நிலையியற் குழுவுக்கு அனுப் பப்பட்டதான நிலையிலிருக்கும்.

*சிறப்பு நோக்கங்களுக்கான குழுக்கள்*

121.தெரிவுக்குழு - ஒவ்வொரு கூட்டத்தொடரின் ஆரம்பத்தின் போதும், ஆலோசனைக் குழுக்கள், சட்டவாக்க நிலையியற் குழுக்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை, கருமங்கள் (கூட்டநடப்பெண் உட்பட) அவற்றின் அமைப்பு ஆகியவற்றை ஆராய்வதற்கும், அவை பற்றித் தங்கள் கருத்துக்களை மிகவும் கூடிய விரைவில் பாராளு மன்றத்திற்கு அறிக்கையிடுவதற்கும், பாராளுமன்றத்தினால் நியமிக்கப்படும் அத்தகைய ஆலோசனைக் குழுக் களிலும், சட்டவாக்க நிலையியற் குழுக்களிலும் கடமையாற்றக் கூடிய உறுப்பினர்களை நியமிப்பதற்கும், சபைக் குழு நிலையியற் கட்டளைகள் குழு, பாராளுமன்ற அலுவல் பற்றிய குழு, அரசாங்கக் கணக்குக் குழு,சபைக்குழு, நிலையியற் கட்டளைகள் குழு, பாராளுமன்ற அலுவல் பற்றிய குழு, அரசாங்கக் கணக்குக் குழு, அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு, சிறப்புரிமைகள் பற்றிய குழு, பொது மனுக்குழு என்பவற்றில் கடமையாற்ற உறுப்பினர்களை நியமிப்பதற்கும் தெரிவுக்குழு எனப்படும் ஒரு குழு நியமிக்கப்படல் வேண்டும்.

தெரிவுக்குழு சபாநாயகரைத் தவிசாளராகவும் அரசியற் கட்சிகளின் தலைவர்கள் அல்லது ஒவ்வொரு கூட்டத் தொடரிலும் ஆரம்பத்தில் பாராளுமன்றத்தினால் பெயர் குறிக்கப்படும் அவர்களின் நியமித்தவர்கள் ஆகியோருட்பட பதினேழு உறுப்பினர்களையும் கொணடிருத்தல் வேண்டும். பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படினும் குழுக் கூட்டங்கள் நிகழவும், அவ்வப்போது அறிக்கையிடவும், எந்தவொரு குழுவிற்கும் எந்தவொரு உறுப்பினர் நியமிக்கப்படும் போது அது பற்றிப் பாராளுமன்றத்திற்கு அறிவிப்பதற்கும் குழு அனுமதி பெற்றிருக்கும்.

122. சபைக்குழு - சபாநாயகரைத் தவிசாளராகவும் தெரிவுக்குழு நியமிக்கும் ஒன்பது உறுப்பினர்களையும் கொண்ட சபைக்குழு எனப்படும் குழு ஒன்று பாராளுமன்ற உறுப்பினர்களின் சௌகரியம், வசதி ஆகியவற்றுடன் தொடர்புடைய எல்லா விடயங்கள் பற்றியும் பரிசீலித்து ஆலோசனை கூறுவதற்கென இருத்தல் வேண்டும். இக் குழுவின் கூட்ட அறிக்கைகள் உறுப்பினர்கள் அனைவரும் வழங்கப்படல் வேண்டும.

123. நிலையியற் கட்டளைகள் குழு - தவிசாளராகச் சபாநாயகரையும் பிரதிச் சபாநாயகர், குழுக்களின் பிரதித்தவிசாளர், தெரிவுக்குழுவால் நியமிக்கப்படும்.வேறு ஆறு உறுப்பினர்கள் ஆகியோரையும் உள்ளடக்கிய நிலையியற் கட்டளைகள் குழு எனப்படும் குழு ஒன்று இருத்தல் வேண்டும். பாராளுமன்றத்தின் அலுவல் தொடர்பான நடைமுறை, ஒழுங்கு ஆகிய விடயங்களைப் பரிசீலிப்பதும் அவசியமெனக் கருதப்படும் ஏதேனும் திருத்தங்கள் அல்லது சேர்க்கப்பட வேண்டியவை பற்றி விதந்துரைத்தலும் நிலையியற் கட்டளைகள் தொடர்பாகப் பாராளுமன்றத்தால் ஆற்றுப்படுத்தப்படும் எல்லா விடயங்கள் பற்றியும் அறிக்கையிடுதலும் இக் குழுவின் கடமையாதல் வேண்டும்.


124. பாராளுமன்ற அலுவல் பற்றிய குழு - சபாநாயகரைத் தவிசாளராகவும் பிரதிச் சபாநாயகர் குழுக்களின் பிரதிச் சபாநாயகர் குழுக்களின் பிரதித்தவிசாளர், பாராளுமன்றச் சபை முதல்வர், எதிர்க்கட்சித் தலைவர், அரசாங்கக் கட்சியின் முதற்கோலாசான், எதிர்க்கட்சியின் முதற்கோலாசான், தெரிகுழுவால் நியமிக்கப்படும் வேறு எட்டு உறுப்பினர்கள் ஆகியோரையும் உள்ளடக்கிய பாராளுமன்ற அலுவல் பற்றிய குழு எனப்படும் குழுவொன்று இருத்தல் வேண்டும். பாராளுமன்றச் சபை முதல்வருடன் கலந்தாலோசித்ததன் பின்னர் சபாநாயகரால் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படக்கூடிய பாராளுமன்ற அலுவல்களின் ஆலோசனைக்கென ஒதுக்கப்பட வேண்டிய நேரம் மற்றும் விடயங்கள் ஆகியவை சம்பந்தமாகப் பரிசீலனை செய்து முடிவெடுத்தல் குழுவின் கடமையாதல் வேண்டும். இக் குழுவின் கூட்ட அறிக்கைகள் உறுப்பினர்கள் அனைவருக்கும் வழங்கப்படல் வேண்டும்.

125. அரசாங்கக் கணக்குக் குழு - (1) தெரிவுக்குழுவால் நியமிக்கப்படும் (பன்னிரண்டு உறுப்பினர்களை) உள்ளடக்கிய அரசாங்கக் கணக்குக் குழு எனப்படும் குழுவொன்று இருத்தல் வேண்டும்.

(2) அரசாங்கச் செலவுகளை எதிர் நோக்குவதற்காகப் பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட ஒதுக்கீட்டுத் தொகைகளை காட்டுகின்ற கணக்குகளையும் குழு தக்கதெனக் கருதும் பாராளுமன்றத்தின் முன்னிடப்படும் பிற கணக்குகளையும் அவை பற்றிய கணக்குப் பரிசோதகர் தலைமையதிபதியின் அறிக்கைகளுடனும் உள்ளூர் அதிகார சபைகள் பற்றிய கணக்குப் பரிசோதகர் தலைமையதிபதியின் அறிக்கைகளுடனும் பரிசோதித்தல் குழுவின் கடமையாதல் வேண்டும்.

(தொடரும்)

# உள்ளூராட்சி மன்ற அபிவிருத்திக்கு ஜப்பானிய அரசு நிதிவழங்கும்



(சாவகச்சேரி)

ஜப்பானிய அரசின் நிதி உதவியுடன் சில உள்ளூராட்சி மன்றங்கள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. இதற்காக தெரிவு செய்யப்பட்ட நகர சபைகளில் சாவகச்சேரி நகர சபையும் ஒன்றாகும்.

இதன் அபிவிருத்திக்கான தரவுகளைத் திரட்டுவதற்காக முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் தற்போதைய ஜப்பானியஅரசின் நிதி ஆலோசகருமான ஒஸ்ரின் பெர்னாண்டோ தலைமையிலான அபிவிருத்திக் குழுவினர் கடந்த புதன்கிழமை சாவகச்சேரி நகரசபை அலுவலகத்துக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டனர்.

இவர்களை மாநகரசபை செயலாளர் உட்பட உத்தியோகத்தர்கள் மாலை அணிவித்து வரவேற்றனர். அதன்பின் மாநகர சபை மாநாட்டு மண்டபத்தில் செயலாளர் தலைமையில் நகரசபை அபிவிருத்தி தொடர்பான மாநாடு நடைபெற்றது.

இம்மாநாட்டில் ஒஸ்ரின் பெர்னாணடோ மற்றும் யாழ். மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் க.இராசையா, தென்மராட்சி பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன், யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ந. இரவிராஜ், சூழல் முகாமைத்துவ உத்தியோகத்தர், பொதுச் சுகாதார பரிசோதகர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நண்பகல் வரை நடைபெற்ற இம் மாநாட்டில் நகரசபைச் செயலாளராக நகரசபை அபிவிருத்திக்கான தற்போதைய தேவைகளின் விபரங்கள் அடங்கிய மகஜர் கையளிக்கப்பட்டது. (க-7-21-47)

# மேதினப் பேரணிக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

தொழிலாளர் பெருமக்களின் நாயகர்களான விவசாயப் பெருமக்களின் மேதின ஊர்வலத்திலும் எழுச்சிக் கூட்டத்திலும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வலி-கிழக்கு விவசாய சம்மேளனங்களின் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

இது விடயம் குறித்து ஒன்றியம் விடுத்துள்ள அறைகூவலில், எந்தவொரு நாட்டிலும் தொழிலாளர்களின் மேதினக் கோரிக்கைகளும் அழுத்தங்களும் அந்நாட்டின் அரசிடமே கேட்கப்படுகின்றன.

எனவே, சுயநிர்ணய உரிமையை வென்றெடுக்கவும், இடைக்கால தன்னாட்சி முறையின் மூலம் எமது தேசியத்தலைவரின் அரசியல் அத்திவாரங்களின் பலம்மிக்க தன்மையை உலகிற்கு காட்டவும், நிபந்தனையற்ற பேச்சுவார்த்தையை வலியுறுத்தி[illegible] விவசாய நிலங்களை விட்டு இர[illegible]ணுவம் வெளியேற வேண்டுமென்று கோரியும், உயர் பாதுகாப்பு வல[illegible]திற்குள் விவசாயம் செய்ய அனுமதிக்கவேண்டும் என்றும், தமிழர் [illegible]ருப்புநிலங்களையும் விவசாய நிலங்களையும் விட்டு இராணுவ[illegible] வெளியேற வேண்டும் என்று வலியுறுத்தியும் இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ். பல்கலைக் கழக மைதானத்தில் நடைபெற இருக்கும் மாபெரும் பொதுக் கூட்டத்தில் கலந்த கொள்ள அனைத்து விவசாயப் பெருமக்களையும் ஒன்று கூடுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பேரணிகள் நல்லூரில் இருந்து ஆரம்பித்து யாழ். பல்கலைக் [illegible] தில் நிறைவு பெற்று மேதின எழுச்சிக் கூட்டம் நடைபெறும் எனக் [illegible] பட்டுள்ளது.

# சரணாலயங்களுக்கு விலங்குகளை கொண்டு வர நாளை முதல் தடை!

(கொழும்பு)

நாளை திங்கட்கிழமை முதல் சரணாலயங்களுக்கு வெளியிலிருந்து விலங்குகளை கொண்டு வரும் செயற்பாடுகளுக்கு தடைவிதிக்கப்படவுள்ளது.

வெளியிலிருந்து விலங்குகள் கொண்டுவருவதினால் பல்வேறு நெருக்கடிகள் ஏற்படுவதாக சுற்றாடல் இயற்கை வள அமைச்சர் ஏ. எச்.எம் பௌஸி தெரிவித்தார்.

சரணாலயங்களைச் சூழவுள்ள கிராமங்களில் வளர்க்கப்படும் பசுக்களை சரணயங்களுக்குள் கொண்டு வருவதால் அங்கு தற்போது [illegible] கடிகள் தோன்றியுள்ளதாக [illegible] இயற்கை வள அமைச்சர் சு[illegible] னார்.

இதேவேளை சரணால[illegible] இருக்கும் யானைகளுக்கு உ[illegible] தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக[illegible] அவர் கூறினார்.

அதுமட்டுமன்றி பசுக்களை [illegible] கக்காட்சிசாலைகளுக்கு கொண்டு [illegible] வதனால் அதனை சூழவுள்ள [illegible] கள் உடைக்கப்படுவதாகவும் அ[illegible] சர் மேலும் தெரிவித்தார். (க-9)

# தென்கிழக்கு பல்கலைக்கழக பொதுப் பட்டமளிப்பு விழா

(கொழும்பு)

தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் மூன்றாவது பொதுப் பட்டமளிப்பு விழா இம்மாதம் 31ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

உபவேந்தர் கலாநிதி [illegible] ஹுசைன் இஸ்மாயில் தலைமையில் நடைபெறவுள்ள இப் பட்டமளிப்பு விழாவல் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க [illegible] பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (க-9)

# நைஜீரியாவில் விவசாயிகள் மோதல் 120 பேர் பலி; 350 பேர் படுகாயம்

**ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான நைஜீரியாவில் இரு பிரிவைச் சேர்ந்த விவசாயிகளுக்கிடையே கடந்த சில நாட்களாக இடம்பெற்று வரும் மோதலில் இதுவரை 120 பேர் வரை பலியாகியுள்ளதுடன், சுமார் 350 பேர் படுகாயமடைந்துள்ளனர்.**

கிராஸ் என்ற ஆற்றின் கரையில் உள்ள நிலங்களில் விவசாயம் செய்வது தொடர்பாகவே இரு கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகளிடையே தொடர்ந்தும் மோதல் ஏற்பட்டு வருகிறது.

இவ்விவகாரத்தில் இரு தரப்பினரும் பயங்கரமாக மோதிக் கொண்டதில் இதுவரை 100 விவசாயிகள் பலியாகியுள்ளன. 350 பேர் வரை படுகாயமடைந்துள்ளனர். நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர அந்நாட்டுப் பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். (ற)

# ராக்கெட் ஏவும் திட்டம் மீண்டும் தள்ளிவைப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசா எதிர்வரும் 22ஆம் திகதி விண்ணில் செலுத்தப்படுவதாக இருந்த டிஸ்கொவரி ராக்கெட் விண்ணில் ஏவப்படுவது தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 2003 ஆம் ஆண்டு பூமிக்குத் திரும்பி வந்துகொண்டிருந்த கொலம்பிய ராக்கெட் வெடித்துச் சிதறியதால், புதிய ராக்கெட்டான டிஸ்கொவரி தயாரிக்கப்பட்டது.

அப்பணிகள் முழுமையாக நிறைவுபெற்ற சூழ்நிலையில் கென்னடி விமானத்தளத்தில தயார் நிலையிலும் வைக்கப்பட்டது. ஆனால் ராக்கெட்டின் எரிபொருள் கொள்கலனில பனிக் கட்டிகள் உருவாகி இருப்பது கண்டுபிடிக்கபபட்டது. இதனால் ராக்கெட்டை விண்ணில் செலத்துவது மேலும் சில வாரங்களுக்குத் தள்ளிவைக்கப்பட்டுள்ளது. (ற)

# பின்லேடன் உயிருடன் இருக்கிறார் எனினும் விரைவில் இறந்து விடுவார்

## இஸ்லாமிய இணையத்தளம் பரபரப்புத் தகவல்

அல்-கெய்டா இயக்கத்தின் தலைவரான ஒசாமா பின்லேடன் உயிருடன் இருக்கிறார் என்று இஸ்லாமிய இணையத்தளம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

அல்-கெய்டா இயக்கத்தின் தலைவரான ஒசாமா பின்லேடன் தற்போது எங்கே பதுங்கியிருக்கிறார் என்பது மர்மமாக உள்ளது.

2001ஆம் ஆண்டு ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா படை எடுத்தபோது பின்லேடன் இரகசியமாக பாகிஸ்தானுக்குத் தப்பிச் சென்றுவிட்டதாக ஜெர்மனி நாட்டு உளவுப்படையைச் சேர்ந்த அதிகாரி ஆகஸ்ட் ஹானிங் என்பவர் தகவல் தெரிவித்திருந்தார். பின்லேடன் இன்னும் பாகிஸ்தான் எல்லைப் பகுதியில்தான் பதுங்கியிருப்பதாக அவர் கூறியிருந்தார்.

பின்லேடன் ஆப்கானிஸ்தானுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையிலுள்ள மலைகள் நிறைந்த எல்லைப் பகுதியில் பதுங்கி வாழ்வதாக மேற்கு நாட்டு உளவு அமைப்புகள் கருதுகின்றன.

பின்லேடனை தேடிக் கண்டுபிடிக்கும் வேலையில் அமெரிக்காவின் முக்கிய கூட்டாளி யாகச் செயல்படும் பாக்.அதிபா முஷாரப் கூட பின்லேடன் நிலை குறித்து அண்மையில் பி.பி.சி தொலைக்காட்சிக்கு பேட்டியளித திருந்தார். அதில் பின்லேடன் ஆப்கான் -பாக் எல்லைப்பகுதியில் பதுங்கியிருக்க வாய்ப்புள்ளது. பின்லேடனை பிடிக்கும் முயற்சியில் அமெரிக்கா தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது என குறிப்பிட்டு இருந்தார்.

எகிப்து நாட்டைச் சேர்ந்த யாசர் அல்-சிரி என்பவர் இங்கிலாந்தில் இஸ்லாமிய கணகாணிப்பு மையம் ஒன்றை நடத்திவருகிறார். அல்-கெய்டா இயக்கத்துக்கு நெருக்கமான இவர் பின்லேடன் இன்னும் உயிருடன் இருப்பதாகக், கூறி வருகிறார்.

பின்லேடன் தற்போது சிறுநீரகக்கோளாறால் வாடிவருவதாகக் கூறப்படுகிறது. பின்லேடன் உடல்நிலை குறித்து அண்மைக்காலமாக எந்தத் தகவலும் வெளியாகவில்லை. இதனால் பின்லேடன் இறந்துவிட்டதாக ஒரு சாரார் கருதுகிறார்கள். ஆனால், அவ்வப்போது வரும் பின்லேடன் வீடியோக்கள் அந்தக் கருத்தை மாற்றிவருகின்றன. இந்நிலையில், இஸ்லாமிய இணையத்தளம் ஒன்று பின்லேடன் பற்றி தறபோது புதிய செய்தி வெளியிட்டு பரபரப்பை கிளப்பியிருக்கிறது.

பின்லேடன் இறந்துவிட்டதாகக் கூறுவது தவறு. அவர் இன்னும் இறக்கவில்லை ஆனால் அவர் விரைவில் இறக்கப்போகிறார். அவரது மரணத்தை எதிர்கொள்ள இஸ்லாமிய மக்கள் தயாராகவேண்டும் என்று அவ் இணையத்தளத்தில் தகவல் வெளியாகியுள்ளது.

இதனால் பின்லேடன் விவகாரத்தில் மீண்டும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. (ற)

# சங்கரராமன் கொலை வழக்கு மேலும் இருவருக்கு ஜாமீன்

(சென்னை)

சங்கரமட மேலாளர் சங்கரராமன் கொலை வழக்கில் மேலும் 2 பேருக்கு ஜாமீன் வழங்கப்பட்டுள்ளது. சங்கரராமன் கொலை வழக்கில் கைதுசெய்யப்பட்ட 25 பேரில் ரவி சுப்பிரமணியம் அப்ருவர் ஆகிவிட்டார். இருப்பினும் பாதுகாப்புக கருதி தொடர்ந்து அவர் காஞ்சிபுரம் கிளைச் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ளார்.

ஜெயேந்திரர், விஜயேந்திரர் உள்ளிட்ட 5 பேர் ஜாமீனில் விடுதலையாகியுள்ளனர். மற்றவர்களில் 18 பேர் சென்னை சிறையிலும் அப்பு கடலூர் சிறையிலும் அடைக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் மேலும் 2 பேருக்கு சென்னை உயர் நீதிமன்றம் ஜாமீன் அளித்துள்ளது.

போலிக் குற்றவாளியான தேவராஜ் போலிக் குற்றவாளிக்கு பணப் பட்டுவாடா செய்த வில்லிவாக்கம் சேகர் ஆகியோர் தங்களை ஜாமீனில் விடக் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்திருந்தனர்.

இவர்களது மனுக்களை விசாரித்த நிதிபதி தணிகாச்சலம் நேற்று முன்தினம் அவர்களை நிபந்தனை ஜாமீனில் விடுதலை செய்ய உத்தரவிட்டார். அதன்படி இருவரும் செங்கல்பட்டு நீதிமன்றத்தில் தினமும் ஆஜராகி கையெழுத்திட வேண்டும். (ற)

# அமெ. வை கலங்கடிக்கும் சீனா!

(வோஷிங்டன்)

சீனாவிலிருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதியாகும் துணிவகைகள் கடந்த ஆண்டில் மிக அதிகளவு அதிகரித்திருப்பதால் அமெரிகக ஜவுளித்துறையே சரியும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் அனைத்துலக கோட்டா முறைத் திட்டம் விலக்கிக் கொள்ளப்பட்ட பிறகு அமெரிக்காவுக்கு சீனாவிலிருந்து ஏற்றுமதியாகும் துணிவகைகளின் அளவு 10 மடங்கு அதிகரித்துவிட்டதாக அமெரிக்க வர்த்தகத் துறை குற்றஞ்சாட்டியுள்ளது.

இதனால் அமெரிக்கச் சந்தையில் சீனத் துணிவகைகளே பெரிதும் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. இப்பிரச்சினையால் அமெரிக்க ஜவுளித்துறை சந்தித்துவரும் வீழ்ச்சியைத் தடுக்கும் கையில், விசாரணைக்கு அமெரிக்கா உத்தரவிட்டுள்ளது.

சீன ஆடை வகைகளால் இதேபோன்று பாதிக்கப்பட்டுள்ள ஐரோப்பிய ஒன்றியமும் விரிவான விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

# பக்தாத்தில் வெவ்வேறு பகுதிகளில் 9 கார்க்குண்டுத் தாக்குதல்கள்

## 30 பேர் பலி; 120 பேர் படுகாயம்



(பக்தாத்)

**ஈராக் தலைநகர் பக்தாத்தில் வெவ்வேறு பகுதிகளில் நேற்று முன்தினம் ஒன்பது கார் குண்டுகள் வெடித்ததில் 30 பேர் உடல் சிதறிப் பலியானதுடன் சுமார் 120ற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.**

ஈராக்கில் சதாம் ஆதரவு தீவிரவாதிகள் தொடர்ந்து தாக்குதல் நடத்திவருகின்றனர். ஈராக்கில் தேர்தல் நடத்தப்பட்டு பிரதமராக இப்ராகிம் ஜபாரி தேர்ந்தெடுக்கப்பட்டார். ஈராக் பார்லிமெண்ட் வியாழக்கிழமை கூடியது. உறுப்பினர்கள் பெரும்பாலானவர்கள் சபைக்கு வரவிலலை. ஈராக்கில் புதிய அரசு பொறுப்பேற்ற 24மணி நேரத்தில், தலைநகர் பக்தாத்தின் பல பகுதிகளில் நேற்று முன்தினம் காலை தொடர்ந்து கார் வெடிகுண்டுகள் வெடித்தன. குர்திஷ் இன மக்கள் அதிகம் உள்ள அர்பில், ஷியா மக்கள் அதிகம் உள்ள பாஸ்ரா உட்பட பல நகரங்களில் கார் வெடிகுண்டுகள் வெடித்தன.

பக்தாத்தின் இரண்டு மாவட்டங்களில் நேற்று முன்தினம் காலை இந்திய நேரப்படி 9.30மணிக்கு அடுத்தடுத்து நான்கு கார் வெடிகுண்டுகள் வெடித்துச் சிதறின. அதில் இராணுவ வீரர்கள் ஏழு பேர், பொலிசார் இருவர் உட்பட 13 பேர் உடல் சிதறிப் பலியாயினர். ஐம்பது பேர் படுகாயம் அடைந்தனா. அதைத் தொடர்ந்து பக்தாத்தில் இருந்து 30.கி.ம தொலைவில் உள்ள மாடெய்ன் நகரத்தில் மூன்று கார் வெடிகுண்டுகள் வெடித்துச் சிதறின. அதில் 10பேர் பலியாயினர். 14பேர் படுகாயமடைந்தனர்.

பக்தாத்தின் வடக்கு மாவட்டம் அதாமியாவில் பொலிசார் மற்றும் இராணுவத்தினரைக் குறிவைத்து இரண்டு கார்க்குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. அதில் பாதுகாப்புப் படையினர் ஐந்து பேர் பலியானதாகத் தகவல்கள் வெளியாயின.

அதேபோல் கிழக்கு மாவட்டம், சலீக்கில் பொலிஸாரைக் குறிவைத்து இரண்டு கார் குணடுகள் வைக்கப்பட்டன. கார்கள் வெடித்துச் சிதறின. அங்கு சிறுமி ஒருத்தியும், பொலிஸ்காரர் ஒருவரும் பலியாயினர். கார்களை தற்கொலைப்படை தீவிரவாதிகள் ஓட்டிவந்ததாக உள்துறை அமைச்சக அதிகாரிகள் உறுதிப் படுத்தினர்.

பக்தாத்தைச் சற்றிச் சுற்றி அடுத்தடுத்து கார்க் குண்டுகள் வெடித்ததால் பக்தாத்தில் பெரும் பதற்றம் நிலவுகிறது. (ற)

உலக தரிசனம்

# மாவோயிஷ்டுகளின் தடை வாபஸ்

(காத்மண்டு)

நேபாளத்தில் தனியார் பள்ளிகளுக்கு விதித்திருந்த தடையை மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் வாபஸ் பெற்றனர். இதனால், பள்ளிகள் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன.

நேபாளத்தில் உள்ள அனைத்து பள்ளிகளையும் தேசியமயமாக்க வேண்டும் என மாவோயிஸ்ட் தீவரவாதிகள் கோரிக்கை விடுத்தனர். அத்துடன் தனியார் பள்ளிகளை மூடவேண்டும் என்றும் ஏப்ரல் மாத மத்தியில தடையுத்தரவு பிறப்பித்தனர். இந்தத் தடை உத்தரவுக்கு பணியாத சில பள்ளிகள் மீது வெடிகுண்டுகளை வீசித் தாக்குதலும் நடத்தினர். இதனால் நேபாளத்தில் உள்ள 8 ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட தனியார் பள்ளிகள் மூடப்பட்டன.

பள்ளிகள் மூடப்பட்டதை அடுத்து ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட நேபாள மாணவர்கள் இந்திய பள்ளிகளில் இந்த ஆண்டு படிப்பதற்காக சேர்ந்தனர். டார்ஜிலிங், காலிம்பாங், சிலிகுரி, டில்லி மற்றும் தென் இந்தியாவின் பல பகுதிகளிலும் உள்ள பள்ளிகளில் நேபாள மாண்வர்கள் சேர்ந்தனர். இதனால் தனியார் பள்ளிகள் மீதான தடைகளை மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் அகற்றவேண்டும் என பல்வேறு தரப்பில் இருந்தும் கோரிக்கைகள் வந்தன. பெற்றோர்களும், மனித உரிமை அமைப்புகளும வேண்டுகோள் விடுத்தன.

இதையடுத்து மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் தனியார் பள்ளிகள் மீதான தடையை வாபஸ பெற்றனர். இரண்டு வாரங்களுக்கு பிறகு நேற்று முன்தினம் மீண்டும் பள்ளிகள் திறக்கப்பட்டன. (ற)

# அணு ஆயுதத் தொழில்நுட்பம் வடகொரியாவிடம்! -அமெரிக்கா

ஏவுகணைகளில் அணு ஆயுதத்தைப் பொருத்தும் தொழில்நுட்பத்தை வடகொரியா தயார் செய்துவிட்டதாக அமெரிக்க பாதுகாப்பு துறையின் உளவுப் பிரிவுத்தலை வர்லோவெல் ஜாகோபை தெரிவித்துள்ளார்.

இதனால் ஜப்பான் மற்றும் அமெரிக்காவின் மேற்குப்பகுதி வட்டாரங்களுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இவ்விவகாரம் தொடர்பாக சிறப்பு அறிக்கை ஒன்றினைத் தயார்செய்து ஆயுத சேவைக்குழுவுக்கான செனட் சபையில் அவர் தாக்கல் செய்துள்ளதாகவும் தெரியவருகிறது.

வடகொரியாவில் கொடுங்கோல் ஆட்சி நடைபெறுவதால் இவ்விஷயத்தில் உண்மை இருபபதை புறக்கணிப்பதற்கில்லை என அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் கூறியுள்ளார். (ற)

# பெரு நாட்டில் விமான விபத்து 13 பேர் உடல்சிதறிப் பலி

(பெரு)

பெருநாட்டில் ஒரு இராணுவ விமானம் விபததுக்குள்ளானதில் 13 பேர் பலியாயினர். கமிஷாய் என்ற நகரத்தில் உள்ள எண்ணெய் நிலவாயு தொழிற்சாலைக்குச சொந்தமான விமானத்தளத்தில் இராணுவ விமானம் ஒன்று கடந்த வியாழககிழமை தரையிறங்க முயன்றது.

அப்போது கட்டுப்பாட்டை இழந்து 720 அடி உயரத்தில் பறந்துகொண்டிருந்த அவ்விமானம் ஓடுதளத்தில் பயங்கரமாக மோதி நொறுங்கி விழுந்தது.

விழுந்த வேகத்தில் தீப்பிடித்துக் கொண்ட அவ்விமானத்தில் இருந்த எண்ணெய் நிறுவன அதிகாரிகள் 13பேர் உடல் சிதறி தீயில கருகி உயிரிழந்தனர்.

இவ்விபத்துக்குத் தீவிரவாதிகளின் சதி வேலை காரணமா என்பது குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது. (ற)

# பல்லவர் கால கோயில் பொக்கிஷம்!

## அரிய தமிழ் கல்வெட்டு கண்டுபிடிப்பு

(மகாபலிபுரம்)

மகாபலிபுரத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அகழ்வாராய்வில் கி.பி 8ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அரிய தமிழ்க்கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் அங்கு பல்லவர் காலத்தைச் சேர்ந்த கோயில் இருந்தது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த டிசெம்பா 26ஆம் திகதி சுனாமிப் பேரலைகள் தமிழகம் உட்பட தென்னகத்தில் சில மாநிலங்களைத் தாக்கின, அதில் மகாபலிபுரக் கடற்கரை பகுதியும் சேதம் அடைந்தது. அதன்பின் கடந்த பெப்ரவரியில் இருந்து அங்கு தொல்லியல்துறையினர் அகழ்வாய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

மகாபலிபுரத்தில தற்போதுளள கடற்கரைக் கோயிலின் தென்பகுதியில அகழ்வாய்வு தொடர்ந்து மேற்கொள்ளப்படுகிறது. கடந்த பெப்ரவாி, மார்ச் மாதங்களில் கடறகரை கோயிலில் இருந்து சில நூறு மீறறர் தூரத்தில் நிலத்தில் அகழ்ந்த போது சிதிலம் அடைந்த பழங்கால கோயில் கண்டுபிடிக்கபபட்டது. அதன் அருகில் கர்ப்பக்கிரகம் ஒன்றும் சேதம் அடைந்த நிலையில் இருப்பது தெரியவந்தது. கர்ப்பக்கிரகத்தைச் சுற்றிலும் அழகிய சுற்றுச் சுவரும் இருந்தது.

ஆனால் கர்ப்பக்கிரகத்தில் வைக்கப்பட்ட கடவுள் சிலைகள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. நிலத்தில் மேலோட்டமாக அகழ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது. இன்னும் ஆழமாகத் தோண்டினால் கர்பபக் கிரகத்திலிருந்த தெய்வச்சிலைகள் தென்படலாம்.

புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட கோயிலின் உட்பகுதியில் வட கிழக்கு மூலையில் சுடுமண்ணால் செய்யப்பட்ட அழகிய உறை கிணறும் அந்தப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டது. உறை கிணற்றின் நானகு வட்டங்கள் வெளியில் தெரியவந்தன. இன்னும் சில இருக்கலாம் என்று தொல்லியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இந்த உறை கிணறு தமிழகத்தில் பிற அகழ்வாய்வுகளில் கிடைத்துள்ள தொடக்கநிலை வரலாற்றுக் கால கட்டத்தைச் சார்ந்த உறை கிணறுகளின் அமைப்பை ஒத்துள்ளது.

இந்த சுடுமண் உறை கிணறு புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட கோயிலின காலத்தைச் சார்ந்ததா? அதற்கும் முற்பட்ட சங்ககால உறை கிணறா? என்பதை மேலும் ஆய்வு செய்ய வேண்டும் என்று தொல்லியல் துறையினர் கூறுகின்றனர்.

தொடர்ந்து அகழ்வாய்வு மேற்கொண்ட போது கடற்கரை கோயிலின் தென்பகுதியில் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட கற்கோயிலின் உட்பகுதியில் உடைந்த கல் ஒன்றில் தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருப்பது தெரிந்தது.

கல்வெட்டு மிகவும் சிதைந்த நிலையில் உள்ளது. இரு வரிகளுடன் காணப்படும் இக்கல்வெட்டில், 'சிகமல்ல எதீ என்ற பெயர் காணப்படுகிறது. எழுத்தமைதியில் இது கி.பி 8ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்கிறது. கல் உடைந்துள்ளதால், கல்வெட்டின் முன்னும் பின்னும் உள்ள தொடர்ச்சியை அறிய முடியவில்லை. எனினும், இப்புதிய கல்வெட்டின் மூலம் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள கோயிலின் எச்சங்கள் பல்லவர் காலத்தைச் சேர்ந்தவை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

மல்லன் என்ற பெயர் பொதுவாக பல்லவர் காலத்தில் இருந்த பட்டப் பெயர். பல்லவ மன்னர்களுக்கு அந்தப் பெயர் வழங்கப்பட்டது. மல்லன் என்றால் மல்யுத்தத்தில் சிறந்த வீரன் என்றும் வெற்றி கொள்பவன் என்றும் பொருள். முதலாம் மகேந்திரவர்மன் சத்துரு மல்லன் என்ற பட்டத்தைப் பெற்று விளங்கினான். எதிரிகளை வெல்பவன் என்று அந்த மன்னனுக்குப் பட்டப் பெயர் வழங்கபபடடது. இவருக்குப் பின் வந்த பல்லவ மன்னர்கள் பலர். இப்பட்டத்தையே வைத்துக் கொண்டனர். இக்கல்வெட்டின் பிற பகுதிகள் தொடர்ந்து அகழ்வாய்வு மேற்கொள்ளும் போத கிடைத்தால பல்லவர் காலத்தில் மாமல்லபுல கடற்கரை கோயிலுக்கு அருகில் பறிதொரு பல்லவர் கால கடடுமானக கோயில் இருந்ததற்கான சான்றுகள் மேலும் உறுதிப்படும். (ற)

# இனியும் இவ்வாறான படுகொலைகளை தமிழ்ச்சமூகம் பொறுத்துக்கொண்டிராது

## -எம்.கே.சிவாஜிலிங்கம் எம்.பி

மூத்த ஊடகவியலாளா சிவராமின் படுகொலை உறங்கிக்கொண்டிருந்த தமிழர்களின் உணர்வுகளை தட்டியெழுப்புவதாக அமைந்துள்ளது என யாழ்மாவட்டப் பாராளுமன்ற உறுபபினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

நேற்று முறபகல் யாழ்.பஸ் நிலையம் முன்பாக சிவராமின் கொலையைக் கண்டித்து ஊடகவியலாளர்கள் நடாத்திய போராட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தமிழர்களின் உரிமைக்காக போராட ஊடக சுதந்திரத்தைக் கையிலெடுத்த ஒரு உத்தம வீரனை அரசாங்கத்துடன் சேர்ந்து இயங்கும் தமிழ் விரோதக்கும்பல் படுகொலை செய்திருக்கின்றது. அதுவும் ஜனநாயகம மதிக்கப்படும் பாராளுமன்றக் கட்டடத தொகுதிக்கு அண்மையில் வைத்து படுகொலை செய்திருக்கின்றது.

அன்று நிமலராஜனையும், நேற்று நடேசனையும் இன்று சிவராமையும்படுகொலை செயதிருக்கிறார்கள். இப்படியான படுகொலைகளை இனியும் தமிழ்ச்சமூகம் பொறுத்துக்கொண்டிருக்க மாட்டாது. பொங்கியெழும் தருணம வந்துவிட்டது எனவும் அவர் மேலும் கூறினார். (ற-4)

# கோழைத்தனமான இழிவான செயல்

பிரபல தமிழ் ஊடகவியலாளர் தர்மரத்தினம் சிவராமின் படுகொலையை இலங்கை ஊடகவியலாளாகள் வன்மையாகக கண்டித்துள்ளனா்.

சிவராமின் கொலை கோழைத்தனமான இழிவான செயலாகும். அத்துடன் கருத்துக்களை வெளியிட இருக்கும் சுதந்திரத்தை அடக்க முனையும் செயல் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

தமிழ்நெற் இணையத்தள ஆசிரியரான சிவராமின் படுகொலைக்கு ஊடகவியலாளர் சங்கம், சுதந்திர ஊடகவியலாளர் இயக்கம், பத்திரிகை ஆசிரியர் சங்கம், இலங்கை ஊடகவியலாளர் பேரவை எனபன கண்டனம் தெரிவித்துள்ளன.

சிவராம் வியாழக்கிழமை இரவு பப்பலப்பிட்டியில் வைத்து இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டார். நேற்று முன்தினம் காலை நாடாளுமன்றக் கட்டடத்திற்கு அருகே ஜப்பான் நட்புறவுப் பாலத்திற்கருகே அவரது சடலம் கண்டுபிடிக்கப்பட்டது. அவரது குடும்பத்தினரால் அவரது உடல் அடையாளம் காணப்பட்டது. சிவராமிற்கு ஏற்கனவே பல தடவைகள் மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தமையினால் அவர் கடத்தப்படடதையறிந்ததுமே அவரின் குடும்பத்தினர் பெரும் பீதியடைந்திருந்தனர்.

கடந்த ஆண்டு அவரின் வீடு இரு தடவைகள் பொலிஸாரினால் சோதனையிடப்பட்ட போதிலும் அவருக்கு எதிரான எதனையும் அவர்களால் கைபபற்ற முடியாது போனமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ற-8)

# வீட்டில் சேரும் கழிவுகளை உரிய முறையில் அகற்றாதோருக்கு எதிராக கடும் நடவடிக்கை

## எடுப்பது அவசியம் என்கிறார் சிவாஜிலிங்கம் எம்.பி

(சுதுமலை)

வீட்டில் சேரும் கழிவுகளை உரிய முறையில் அகற்றாது காணிகளுக்குள்ளும், வீதிகளிலும் வீசுபவர்கள் மற்றும் கழிவுநீரை பொது மக்களின் இருப்பிடங்களில் சுகாதாரத்திறகுத் தீங்கான முறையில் தேங்க வைத்து சூழல் பாதிப்பை ஏற்படுத்துபவர்களுக்கும் எதிராக உடனடியாக சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு உடனடித்தீர்வு காணுவது மிகவும் அவசியமானது என யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம். கே.சிவாஜிலிங்கம் நல்லூர் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவித்தார்.

கடந்த செவ்வாயன்று நல்லூர் பிரதேச செயலர் திருமதி சு.தெய்வேந்திரம் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் மேலும் தெரிவித்ததாவது,

தற்போது இடையிடையே மழை காரணமாக நுளம்புப் பெருக்கம் அதிகரிதுள்ளது. பொதுமக்களால் சகல வீட்டுக் கழிவுகளும் கண்டபடி வீசப்படுவதற்கு எதிராக எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை என மேற்படி கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதை அடுத்தே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், நுளம்பினால் பரவும் நோய்களான டெங்கு, மலேரியா போன்றவற்றின் தாக்கம், ஈக்களின் பெருக்கம் ஆகியவை அண்மைக்காலமாக அதிகரித்து வருகிறது. ஆதலால் பொதுமக்கள் உரிய முறையில் கழிவுகளை அகற்றுவதற்கு சுகாதாரப் பிரிவினரும் பிரதேச சபையினரும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

அரியாலைப் பகுதிகளில், சட்ட விரோதமாக மண் அகழ்வு தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும், இதனால் பெருமழையின் போது கடல்நீர் கிராமத்துக்குள் வரும் அபாயம் உள்ளதாகவும் இதறகு பெலிஸாரும் பிரதேச செயலரும் நடவடிக்கை எடுப்பது மிகவும் அவசியம் எனவும் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், பிரதான விதிகளில முக்கிய சந்திகளில் இரவு நேர வீதி விளக்குகள் அவசியம் பொருத்தப்படவேண்டும் எனவும் வீதி விளக்குகள் இல்லாமை காரணமாக வதி விபத்துக்களும், திருடர் நடமாட்டங்களும் அதிகரித்து வருவதாகவும் பாராளுமன்ற உறுப்பினருக்கு சுட்டிக்காட்டப்பட்டது.

நந்தாவில் குள வாய்க்கால் விவசாய சம்மேளன உதவியுடனும் அரச சார்பற்ற நிறுவணங்களின் உதவியுடனும் சிறந்த முறையில் துப்புரவு செய்யப்பட்டு வெள்ளம் வழிந்தோடுவதற்கு வழிவகை செய்யப்பட்டிருந்தபோதும் தற்போது அவ்வாய்க்காலினுள் வீட்டுக் கழிவுகள், அதிகமாகக் கொட்டப்படுகிறன.

இத்திட்டத்திற்கு அதிகளவு பணம் செலவு செய்யப்பட்டதெனவும் பிரதேச செயலாளர் கவலை தெரிவித்தார்.

இப்படியான தவறுகளைத் தவிர்ப்பதற்கு பொது மக்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியம் எனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

இக்கூட்டத்தில் கல்வி, சுகாதாரம், மின்சாரம், குடிநீர், கால்நடை, விவசாயம், அரச /அரச சார்பற்ற பொது அமைப்புக்களைச் சேர்ந்த சுமார் 60க்கும் மேற்பட்ட பிரதிநிதிகளும் இப்பிரிவின் கிராம சேவை உத்தியோகஸ்தர்கள், மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகஸ்தர்களும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (க-7-252)

# ஊடகவியலாளர் சிவராமின் படுகொலைக்கு அரசு பதில் சொல்லியே ஆக வேண்டும்

## -மா.க.ஈழவேந்தன்

(யாழ்ப்பாணம்)

ஊடகவியலாளர் சிவராமின் படுகொலைக்கு அரசு பதில் சொல்லித்தான் ஆக வேண்டும். இதனை அரசால் மூடி மறைக்கவும் முடியாது. அதிலிருந்து தப்பவும் முடியாதென யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன் தெரிவித்துள்ளார்.



சிவராமின் கொலையைக் கண்டித்து யாழ்.ஊடகவியலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடாத்தப்பட்ட போராட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அரசு பத்திரிகைச் சுதந்திரத்தை மதிக்காமல் தொடர்ந்தும் துரோகக் கும்பலைக் பயன்டுத்தி படுகொலைகளைச் செய்து வருகிறது. இனியும் தமிழராகிய நாங்கள் பொறுமை காத்துக் கொண்டிருக்க மாட்டோம்.

இவரின் கொலையிணைக் கண்டித்து பாராளுமன்றத்திலும் குரல் கொடுக்கவுள்ளோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ற-4)

# இடமாற்றம்

(சாவகச்சேரி)

யுத்தத்தின் காரணமாக ஏற்பட்ட இடப்பெயர்வினையடுத்து, தற்காலிகமாக கண்டி வீதியில் இயங்கி வந்த அரச கால்நடை வைத்திய நிலையம் கடந்த மாதம் 25ஆம் திகதியிலிருந்து யாழ்.பிரதேச செயலகத்திற்கருகே இராமலிங்கம் வீதியிலுள்ள அரச கால்நடை வைத்திய கட்டடத்தில் இயங்கி வருகின்றது.

யுத்தத்தால் சேதமுற்ற இக்கட்டடம் தற்போது புனரமைக்கப்பட்டு புதுப்பொலிவுடன் விளங்குகிறது. (க-7,21)

# ஊடக சுதந்திரத்திற்கு விடப்பட்ட பெரும் சவால்

## -தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம்

பிரபல பத்திரிகையாளர் சிவராமின் படுகொலையைத் தமிழ்த் தேசிய வழிப்புணர்வுக் கழகம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இத தொடர்பில் தமிழ்த்தேசிய வழிப்புணர்வுக்கழகம் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில், பிரபல பத்திரிகையாளரும் இராணுவ, அரசியல் ஆய்வாளருமான சிவராம் பேரினவாத சத்திகளினால் படுகொலை செய்யப்பட்டுள்ளார். சிறிலங்கா அரசானது சமாதான காலத்திலும் தனது உண்மை முகத்தை மீண்டும் காட்டியுள்ளது.

அன்று பத்திரிகையாளா நிமலராஜன், பத்திகையாளா, நாட்டுப்பற்றாளர் நடேசன் என இன்று பிரபல பத்திரிகையாளர் சிவராம் கொடூரமான முறையில் போனவாத சக்திகளால் படுகொலை செய்யப்பட்டுள்ளமையானது ஊடகத்துறைக்கும் அதன் சுதந்திரத்துக்கும் விடப்பட்ட பெருமசவாலாகவே நாம் கருதுகின்றோம்.

இவ்வாறு பிரபல பத்திரிகையாளர்களைப் படுகொலை செய்வதனூடாக உலகின் கைகளில் உண்மையான செய்திகள் சென்றடைவதை தடுக்க அரசு முயலுகின்றது. காலத்திற்குக் காலம் உண்மையான [illegible]களையும் யதார்த்தமான இராணுவ, அரசியல் ஆய்வுகளையும் பத்[illegible] வாயிலாக எழுதி வந்த சி[illegible] அடிக்கடி ஸ்ரீலங்கா இராணுவ[illegible]னாய்வுத்துறையினராலும் விசா[illegible] பட்டிருந்தமையானது இராணுவ[illegible] அரசுமே இதறகு பொறுப்பு [illegible] சாட்சியாக அமைகின்றது.

# யுத்தம் முடிவுக்கு வருவதற்கு ஐ.தே.கட்சியே காரணமாம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் ஏற்படுத்திய யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் மூலமே யுத்தத்தை முடிவிற்கு கொண்டுவரும் சூழல் நிலை தோன்றியதாக கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹெகலிய றம்புக்வெல தெரிவித்தார்.

இதனால் வீழ்ச்சி கண்ட பொருளாதாரத்தையும் மீண்டும் கட்டியெழுப்ப ஐக்கிய தேசியக் கட்சியினால் முடிந்ததாக அவர் சுட்டிக்காட்டினார்.

இதன் அடிப்படையில் ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தின் [illegible] நம்பிக்கை வைத்த சர்வதேச நி[illegible] வழங்கும் நாடுகள் டோக்கியோ மாநாட்டில் பாரிய நிதியுதவியை வழங்க இணக்கம் தெரிவித்தது என்றார்.


குளியாப்பிட்டி பிரதேசத்தில் இடம்பெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். (க-9)

# சீல் இடப்படாத இறைச்சி விற்பனை செய்தவர் கைது

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறைக் சந்தையில் உள்ள மாட்டிறைச்சிக் கடையொன்றில் சீல் இடப்படாத இறைச்சியை பொதுமக்களுக்கு விற்பனை செய்த நபர் ஒருவரை யாழ்.மாநகரசபை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கைது செய்து யாழ்.மாவட்ட நீதிமன்றத்தில் மாவட்ட நீதிவான் இ.த.விக்னராஜா முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

இதன்போது, நீதிபதியால் இவ[illegible]ரிடம் இருந்து ஆயிரம் ரூபா தண்டப்பணமாக அறவிடப்பட்டது. அத்துடன் 14கிலோகிராம் இறைச்சியை மிருக வைத்திய அதிகாரி[illegible] அறிக்கையுடன் கானான் சிறுவ[illegible] இல்லத்திற்கு வழங்கும் படி உத்தரவிடப்பட்டுள்ளது. (ற-19)




# தனுஷ் நடிக்கும் 'புதுப்பேட்டை'

பல வெற்றிப் படங்களைத் தயாரித்து வெளியிட்ட லக்ஷமி மூவி மேக்கர்ஸ் இந்தியா லிமிடெட், தற்போது ஜெயம் ரவி நடிக்கும் 'தாஸ்', ஸ்ரீகாந்த் நடிக்கும் 'ஒருநாள் ஒரு கனவு' ஆகிய படங்களைத் தயாரித்து வருகிறது. இதையடுத்து இந்த நிறுவனம் சாாபில் கே. முரளிதரன், வி. சுவாமிநாதன், ஜி. வேணுகோபால் ஆகியோர் தயாரிக்கும் மிகப் பிரமாண்டமான படம் 'புதுப்பேட்டை'.

இதில் மாறுபட்ட கதாபாத்திரத்தில் தனுஷ் கதாநாயகனாக நடிக்கிறார். கதாநாயகிகளாக சோனியா அகர்வால், சிநேகா நடிக்கின்றனர். மற்ற நடிகர், நடிகைகள் தேர்வு நடக்கிறது. அரவிந்த் கிருஷ்ணா ஒளிப்பதிவு செய்கிறார். யுவன்சங்கர்ராஜா இசையில் நா. முத்துக்குமார் பாடல்கள் எழுதுகிறார்.

செல்வராகவன் கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்குகிறார். 'துள்ளுவதோ இளமை', 'காதல் கொண்டேன்' ஆகிய வெற்றிப் படங்களுக்குப் பிறகு செல்வராகவன், தனுஷ் இணையும் படம் இது.



# கரீனா கபூரை தமிழில் அறிமுகப்படுத்தும் எஸ்.ஜே.சூர்யா!



எஸ்.ஜே.சூர்யாவின் 'குஷி' படத்தின் ஹிந்தி ரீமேக்கில் நாயகியாக நடித்தவர் கரீனா கபூர்.

அந்த நேரத்தில் பாலிவுட்டில் டவுனாகியிருந்த தனது மார்க்கெட்டைச் சூர்யாவின் குஷி படம் தூக்கி நிறுத்தியது. இதனால் மிகவும் சந்தோஷமான கரீனா கபூர், இதற்கு கைமாறாக நீங்கள் கேட்கும் உதவியை செய்வேன் என்று சூர்யாவிடம் சொன்னார்.

அதற்கான சந்தர்ப்பம் இப்போது கரீனா கபூருக்குக் கிடைத்துள்ளது.

எஸ்.ஜே.சூர்யா நடிக்கும் 'கள்வனின் காதலி' படத்தில் ஒரே ஒரு பாடலுக்கு ஆடிவிட்டுப் போகுமாறு கரீனாவிடம், எஸ்ஜே.சூர்யா கோரிக்கை வைக்க அவரும் சந்தோஷமாக தலையாட்டிவிட்டாராம்.

பாலிவுட்டின் கனவுக்கன்னி கரீனாவை தமிழில் அறிமுகம் செய்யும் வாய்ப்பு தனக்கு அமைந்ததில் எஸ்.ஜே.சூர்யா குஷியில் இருக்கிறார். பரவாயில்லை குஷியில் பிறந்த நட்பு குஷியிலேயே முடிந்திருக்கிறது.




# சூர்யாவின் தம்பியும் நடிக்க வருகிறார்!


நடிகர் சிவகுமாரின் வாரிசும், சூர்யாவின் தம்பியுமான கார்த்திக் சினிமாவில் நடிக்க வருகிறார்..

இயக்குனர் அமீர் இயக்கப்போகும் அடுத்த படத்தில் கார்த்திக்தான் ஹீரோ. அமெரிக்காவில் எம்.எஸ். பட்டப்படிப்பு படித்தவர் கார்த்திக். அங்கேயே ஒரு பெரிய கம்பெனியில் வேலையும் பார்த்து வந்தாராம். கார்த்திக்கின் லட்சியம் சினிமாவில் டைரக்டர் ஆகவேண்டும் என்பதுதான்.

ஆனால், அவரை விடாப்பிடியாக நடிக்க அழைத்து வந்துவிட்டார் இயக்குனர் அமீர். முழு மனசோடு கதவைத் திறந்து வெளியே அனுப்பியதில் அப்பா சிவகுமாருக்கும் பெரும பங்கு உண்டு.

**சரி, இதுபற்றி இயக்குனர் அமீர் என்ன சொல்கிறார்?**

சூர்யா வீட்டிற்குப் போகும் போதெல்லாம் கார்த்தியைப் பார்த்திருக்கிறேன். சூர்யா மாதிரியே அபாரமான திறமையுள்ள இளைஞன். நான் அடுத்து இயக்கப்போகும் 'பருத்தி வீரன்' என்ற படத்திற்கு நான் தேடிய கரக்டர் கார்த்திதான் என என் உள் மனசு சொல்ல சிவகுமார், சூர்யாவிடம் பேசி சம்மதிக்க வைத்தேன். படம் பார்த்தால் நான் சொல்வது புரியும் என்றார்.



# கதாநாயகனாக வ. கவுதமன்

முரளி, சிம்ரன் நடித்த வித்தியாசமான கதை கொண்ட 'கனவே கலையாதே' படத்தை எழுதி இயக்கிய வ.கவுதமன், அடுத்து எழுதி இயக்கும் புதுப்படம் 'மகிழ்ச்சி'. இதில் அவர் கதாநாயகனாக அறிமுகமாக, ஒரு முக்கிய கதாபாத்திரத்தில் பார்த்திபன் நடிக்க ஒப்புக்கொண்டுள்ளார்.

கதாநாயகிகளாக மூவர் நடிக்கின்றனர். இவர்களில் உமா கால்ஷீட் ஒதுக்கிக் கொடுத்துள்ளார். மற்ற இருவரும் புதுமுகங்கள். ஒரு முக்கிய கதாபாத்திரத்தில் நாகேஷ் நடிக்க, தேவா இசையமைப்பில் மாறுபட்ட பாடல்கள் ஒலிப்பதிவு செய்யப்பட்டுள்ளன.

காக்க காக்க கௌதம் இயக்கத்தில், ரோஜா கம்பைன்ஸ் தயாரிப்பில் கமல் நடிக்கும் 'வேட்டையாடு விளையாடு' படத்தில் கமலுக்கு இரட்டை வேடம்! மிகப்பெரிய ஹைடெக் கிரிமினலாக ஒரு கமல். அந்தக் கிரிமினலைக் கண்டுபிடிக்கும் துடிப்பான பொலிஸ் அதிகாரியாக இன்னொரு கமல்.

* * *

'புதுப்பேட்டை' படத்தில் தனுஷிற்கு இரண்டு ஜோடி. சோனியா அகர்வால், சிநேகா! இந்தப் படத்தில் சிநேகாவுக்குத்தான் கதைப்படி அதிக முக்கியத்துவம். இதனால் செல்வராகவன் மீது கோபப் பார்வை வீசுகிறாராம் சோனியா!





தனது மனைவி ஜோதிகாவுடன சே... அங்கு ஜோதிகாவின் நடவடிக்கையில்... கண்டு உதவ வருகிறார் ரஜினி. பிர... மனோதத்துவ டாக்டர் என்பது ச...

இவ்வளவுதான் கதை. ஜமீன், மே... பட்ட பூச்சுவேலைகளைச் செய்து... கட்டியிருக்கிறார் இயக்குனர் பி. வாசு. ... தாழ், கன்னடத்தில் 'ஆப்தமித்ரா' தற்... இருக்கிறது.

நீண்ட, நெடிய இடைவேளைக்... என்பதால் எதிர்பார்ப்பு இருக்கவே ... ஆரம்பித்த சில நிமிடங்களிலேயே, கா... - அடியாட்கள், மோதும் ரஜினி, மா... என்று பழைய வாசனை. ஒரு கட்டத்...

ஊருக்கு வந்து சேர்ந்த பின், ... வேண்டும் என்பதற்காக, ரஜினி - ... யாம்... ஒரே காமநெடி... ரஜினி ... ரஜினியே சில இடங்களில் ஆபாச, ... களை அள்ளி வீசுகிறார்.

தவிர, நாசர், ஷீலா, விஜயகு... குச் சற்றும் தேவையில்... கின்றனர். வில்லியாகக் ...ட்ட மு... படத்தில் எங்கே போனார் என்றே ... கட்டத்தில் காணாமல் போகிறபோ... பற்றிச் சொல்லவும் வேண்டுமா?

இடைவேளை வரை ஊர்ந்து... கதைப் பாம்பு, அதற்குப் பிறகு ... க்ளைமாக்ஸில் ஏதோ ஒரு பரபரப்... அரைமணி நேரத்தில் ரஜினி - ஜோதி... முழுக்க முழுக்க இயக்குனரின் ...

படத்தின் மிகப்பெரிய ப்ளஸ் ... வரும் ஜோதிகாவின் நடிப்புதான். த... துக்கொண்டு, கண்ணை உருட்டி, ... முடியாது.

வேஷ்டி போட்டு ஸ்டைலா... ரஜினிதான் என்று சொல்லத் ...

மாளிகையில் நடக்கும் மர்... யில இருக்கும் மனிதசக்தி யாரென்... ஏற்படுத்தி பார்வையாளர்களைத் ... பதுதான் இயக்குனரின் திட்டம்.

தமிழில் இதற்கு முன் வெ... பார்த்துச் சலித்தவைதான் புதுக்... ஷன், பஞ்ச் டயலாக், சிகரெட் ... விட்டு கதையை மட்டும் நம்பி ரஜி... வேற்கத்தக்க விஷயம்.

ஆனால் க்ளைமாக்ஸைத் த... துணை நடிகர் போல வந்துசெல்வ...

முதன்முறையாக ரஜினி ப... கவலைப்படவில்லை வித்யாசாக... தவிர எதுவுமே உருப்படியில்லை... வாசனை நம்மை ...

இசையமைப்பாளரும், இ... திருந்தால் ரஜினிக்கு கிரீடம் ... பாணியில் ரஜினி பயணித்திருப்பது ... கும் விஷயம்.

சந்திரமுகி -

# இன்று ஒரு தகவல்

## ஆசையும் துன்பமும்

"அன்று ஆசைப்பட்டேன் இன்று அவஸ்தைப்படுகிறேன்" என்ற நினைப்பு ஒருவருக்கு வந்தால் ஆசாமி தேறிவருகிறார். என்று பொருள். ஆசைதான் துன்பத்திற்குக் காரணம் என்ற ஒரு பெரிய உண்மை அவருக்குப் புரிய ஆரம்பித்துவிட்டது என்றுதானே அர்த்தம்.

ஒரு ஆள் சோளக் கொல்லையில் காவல் காத்துக் கொண்டிருந்தான். வழக்கமாக சோளக் கொல்லையில் ஒரு பொம்மையை வைத்து காவல் காப்பதுண்டு. "பொம்மை எதற்கு? நானே போய் அங்கே இருப்போமே என்று நினைத்தான் போனவன் கவனமாக இருந்துவிட்டான். உறக்கம் வரவே உறங்கிவிட்டான்.

அந்த நேரம் பார்த்து அந்தக் கொல்லையில் மேய்வதற்கு நந்தி ஒன்று வந்தது எங்கிருந்து? கைலாயத்திலிருந்து சிவபெருமானிடம் உள்ள நந்தி பூலோக சோளத்தில் அதற்கு அப்படி ஒரு ஆசை வந்தது. இஷ்டத்திற்கு மேய ஆரம்பித்து விட்டது. இவனுக்கு திடீரென விழிப்பு வந்து விட்டது. நந்தியை விரட்டிப் பிடிக்க கிட்டே ஓடினான் நந்தி விருட்டென்று ஆகாயத்தில் பறந்து போய் விட்டது. ஆகா ஏமாந்து போய்விட்டோமே ! என்று நினைத்தான் சரி... இது மீண்டும் இங்கே வரும் அப்போது பார்த்துக் கொள்ளலாம் என்று நினைத்தான்.

மறுநாள் தூங்குவது போல் பாவனை செய்துகொண்டு கிடந்தான் அவன் எதிர்பார்த்தது. போலவே நந்தி வந்தது. இவன்மெதுவாக பாம்பு மாதிரி நெளிந்து நெளிந்து கொண்டே போனான். அருகில் போனதும் நந்தி இவனைப் பார்த்து விட்டது. விருட்டென்று மேலே கிளம்பியது இவன் ஒரே தாவாகத் தாவி அதன் வாலைப் பிடித்துக்கொண்டான்.

நந்தி பறந்து செல்ல இவன் தொங்கிக்கொண்டே செல்கிறான். நேராக கைலாயத்திற்குப் போய் சேர்ந்தான். பார்வதி பரமசிவனைப் பார்த்தார். "உங்கள் நந்தி எனது சோளக் கொல்லையை அழித்து எனக்கு பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தி விட்டதே இது நியாயமா?" என்று கேட்டான். நியாயமில்லை என்று அவர்கள் ஒத்துக்கொண்டு நஷ்டஈடாக ஒரு பைநிறைய தங்கக் கட்டிகளைப் போட்டு அவனிடம் கொடுத்தனர். வாங்கிக் கொண்டான் திரும்பிவந்தான்.

திரும்பிவந்தவன் தங்கத்தைக் கொண்டு சந்தோஷமாக வாழ் வேண்டியது தானே! அதை விட்டு விட்டான். இவ்வளவு தாராளமாக தங்கத்தை அள்ளிக் கொடுத்தார்களே! அது உண்மையிலேயே தங்கம்தானா இல்லை வேறு ஏதாவதா? என்று சந்தேகம் வந்து விட்டது அவனுக்கு. இவன் மனிதன்தானே இயல்பாக வரக்கூடிய சந்தேகம். இங்கேயே யாராவது கொஞ்சம் தாராளமாக தர்மம் செய்தால் நாம் அவன் செய்த செயலைப் பாராட்டுவதில்லை. இப்படி அள்ளி வீசுகிறானே அவன் எங்கே கொள்ளையடித்திருப்பான் என்ற சந்தேகம் நமக்கு வரும் . அப்படித்தான் அவனும் நினைத்தான்.

தங்கக் கட்டியை எடுத்துக்கொண்டு தனது நண்பன் ஒருவனிடம் சென்றான். அவன் இது சம்பந்தமான விபரம் தெரிந்தவன். தங்க நகை வியாபாரம் செய்பவன். "இது உண்மையான தங்கம்தானா என்று பார்த்துச் சொல்" என்றான். அவன் சோதித்துப் பார்த்தான். உண்மையான தங்கம்தான் என்பதை அவன் புரிந்த கொண்டான். இருந்தாலும் அந்த உண்மை இவனிடம் கூறவில்லை "இது தங்கம் இல்லை பித்தளை இப்படி உன்னை ஏமாற்றியது யார்? என்று கேட்டான். மிகவும் தந்திரமாக இவன் அப்பாவித்தனமாக விபரத்தைச் சொன்னான் சரி என்று அவன் போய் விட்டான் மறுபடியும் கடவுளிடம் போய் இது நியாயமா? என்று கேட்பதென்று முடிவு செய்து விட்டான்.

அன்றிரவும் நந்தி வழக்கம் போல் மேய வந்தது. இவன் ஓடிப்போய் அதன் வாலைப்பிடித்துக்கொண்டான். நந்தி பறக்க ஆரம்பித்தது. இவன் வாலைப்பிடித்துக்கொண்டு தொங்குகிறான். காலில் ஏதோ கப்பென்று பிடித்தமாதிரித் தெரிந்தது அவனுக்கு. குனிந்து பார்த்தான் பார்த்தால் அவனது நண்பன் இவனது காலைப் பிடித்து தொங்கிக் கொண்டு வருகிறான். அவனுக்கும் ஆசை வந்து விட்டது. அது தான் தந்திரமாக இப்படிச் செய்திருக்கிறான்.

நடுவானில் நந்திபோய்க்கொண்டிருக்கிறது. காலைப் பிடித்துக்கொண்டிருந்தவன் வாலைப்பிடித்துக் கொண்டிருந்தவனைப் பார்த்துக் கேட்டான் . "அது சரி உனக்கு எவ்வளவு தங்கம் தந்தார்கள்?" என்று கேட்டான். வாலைப் பிடித்திருந்தவன் இதோ இவ்வளவு இருக்கும் " என்று இரண்டு கைகளையும் விரித்துக்காட்டினான். அவ்வளவுதான் அவர்கள் இருவரும் மிக வேகமாக பூலோகத்துக்கு வர ஆரம்பித்துவிட்டனர். நந்தி மேலே போய்விட்டது இவர்கள் பொத் என்று வந்து விழுந்தனர்.

இந்தக் கதை என்ன நீதிக் கதையைச் சொல்கிறது என்றால் வாலைப்பிடித்தவன் உண்மையைச் சந்தேகப் பட்டான். காலைப்பிடித்தவன் பேராசைப்பட்டான் உண்மையைச் சந்தேகப்படுபவர்களுக்கும் பேராசைப் படுபவர்களுக்கும் இதுதான் கதி என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

**"எனக்குப் பேராசையே கிடையாது" என்றார் ஒரு பெண்மணி. "அது எப்படி?" என்று கேட்டேன் "ஒரு நாள் என் கணவர் எனது** மோதிரத்தை விழுங்கி விட்டார். அதற்காக நான் கொஞ்சம் கூடக் கவலைப்படவில்லை " என்றார். எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. "அப்படியா?" என்றேன் .ஆமாம்! அது பித்தளை மோதிரம் என்றார் அவர்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் கடும் வாக்குவாதம்

(கொழும்பு)

பாடசாலை அதிபர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்ட விவகாரம் தொடர்பில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையே கடும் வாக்குவாதம் இடம் பெற்றது.

முதலாம் ஆண்டிற்கு மாணவர்களை சேர்த்துக் கொள்வதில் முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாக ஜனாதிபதி விசாரணைப் பிரிவினால் சுட்டிக்காட்டப்பட்டதை அடுத்து கல்வியமைச்சின் செயலாளரினால் கொழும்பு ஆனந்தா கல்லூரி. டி.எஸ் சேனாநாயக்க மகாவித்தியாலயம் . குருணாகல மலியதேவ கல்லூரி மற்றும் கண்டி கிங்ஸ்வுட் ஆகிய பாடசாலைகளின் அதிபர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டனர்.

இது குறித்து கடந்த வாரம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போதே ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையே 30 நிமிட நேரம் கடும் வாக்குவாதம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதிபர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டமைக்கு அநேகமான மக்கள் எதிர்ப்பு தெரிவிப்பதாகவும் அதிபர்களைத் தண்டிக்கும்போது கடைப்பிடிக்க வேண்டிய சில விதிமுறைகள் இருப்பதாகவும் பிரதமர் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியுள்ளார். கல்வியமைச்சு பின்பற்றும் சில பிழையான செயற்பாடுகளால் ஒட்டுமொத்த தேசிய பாடசாலை அதிபர்களும் அரசாங்கம் தொடர்பாக விரக்தியுற்ற நிலையிலேயே உள்ளனர் எனவும் அவர் அங்கு குறிப்பிட்டுள்ளார்.

பிரதமரின் கூற்றினால் ஆத்திரமடைந்த ஜனாதிபதி மக்களின் அபிப்பிராயம் பற்றி தான் நன்கு அறிவதாகவும் மக்களின் அபிப்பிராயம் குறித்து பிரதமர் தனக்கு எதுவும் கூறத் தேவையில்லை என்று தெரிவித்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-4)

# முல்லை மாவட்டத்தில் காணியற்றோருக்கு ஒரு ஏக்கர் நிலம் வழங்க நடவடிக்கை

(முல்லைத்தீவு)

மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் காணியற்ற அனைவருக்கும் தலா ஒரு ஏக்கர் காணிவீதம் வழங்க துரித காணிச செயலகம் மூலம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது.

இக்காணிப் பிரச்சினைகளை மிகவிரைவாகத் தீர்ப்பதற்கு உதவுமுகமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஐந்து பிரதேச செயலாளர்களையும் உதவிக் காணி ஆணையாளராக வடகிழக்கு மாகாண ஆளுநர் நியமித்துள்ளார்.

1995ஆம் ஆண்டுக்கு முன்பிருந்தே இப்பிரதேசத்தில் அனுமதியின்றி சட்டவிரோதமான முறையில் அரச காணிகளில் குடியிருப்போருக்கும் அக்காணிகளில் ஒரு ஏக்கர் வீதம் வழங்கப்படவுள்ளது.

இப்பிரதேசத்தில் அரச தேவைக்கென பல்வேறு பட்ட திணைக்களங்களால் ஒதுக்கீடு செய்யப்பட்ட காணிகளில் பல ஆண்டு காலமாக குடியிருக்கும் குடியிருப்பாளர்கள் உடனடியாகவே அக்காணிகளில் இருந்து வெளியேறுமாறும் அவர்களுக்கு மாற்றுக்காணிகள் வழங்குவது சம்பந்தமாக பரீசிலணை செய்யப்படுமென்றும் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளரும், உதவிக்காணி ஆணையாளருமான ம.ஜெகூவினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இக்குடியேற்றத்திட்டத்தில் ஏற்கனவே குடியேறியிருந்தும் அவர்களுக்கான அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படாதிருந்தால் அத்திட்டத்துக்கு அமைவாக குறிப்பிட்ட ஏக்கர் காணிக்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் எனவும் பிரதேச செயலாளரால் தெரிவிக்கப்பட்டது.

இப்பிரதேசத்தில் 20 வருடங்களுக்கு மேலாக மத்திய வகுப்புத்திட்ட மூலம் வழங்கப்பட்ட பல ஆயிரம் ஏக்கர் காணிகள் மனித நடமாட்டமேயில்லாமல் வெறுமனே காணப்படுகின்றது.

அக்காணிகள் தொடர்பாகவும் இத் துரித காணிச் செயலணி மூலம் தீர்வுகள் காணப்படும் எனவும் தெரிய வருகின்றது.

இத்திட்டத்தின் பல வருடகாலமாக தீர்வுகள் காணப்படாதிருந்து வருகின்ற பாலைப்பாணி- சிராட்டிகுளம், கரும்புள்ளியான், பூவரசங்குளம், அம்பாள்புரம் கிராம மக்கள் நன்மையடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இக்காணிப்பிரச்சினைகளை தீர்க்கவென சம்பந்தப்பட்ட சகல திணைக்களங்களின் உயர் அதிகாரிகளின் சேவைகளும் பெறப்பட்டுள்ளது. இதற்கான செயலகங்களை , உலக வங்கியே பொறுப்பேற்றுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாந்தை கிழக்குப் பிரதேச செயலாளர் பிரிவிலேயே முதல் முறையாக துரிதகாணிச் செயலகம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. (து-128)

# 5000 ரூபா கொடுப்பனவு யூன் வரை வழங்கப்படும்

(கொழும்பு)

சுனாமியால் பாதிப்படைந்தவர்களுக்காக அரசாங்கத்தினால் மாதாந்தம் வழங்கப்படும் 5ஆயிரம் ரூபா கொடுப்பனவு எதிர்வரும் யூன் மாதம் வரை வழங்கப்படும் என சுனாமி நிவாரண செயலணியின் தலைவரும் மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருமான திலக்ரணவிராஜா தெரிவித்தார்.

ஜனவரி மாதம் தொடக்கம் யூன் மாதம் வரையிலான ஆறுமாத காலத்திற்கு 5 ஆயிரம் ரூபா விசேட கொடுப்பனவினை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதில் இரண்டு மாதங்களுக்குரிய கொடுப்பனவு மட்டுமே தற்போது வழங்கப்பட்டுள்ளது. இதேவேளை இந்த நிதி பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் கிடைத்துள்ளது.

மே மாதம் வழங்க வேண்டிய விசேட கொடுப்பனவுடன் நிலுவைத் தொகையும் முழுமையாக வழங்கப்படுவதற்கான நடவடிக்கையை நிதியமைச்சு எடுத்துள்ளது என்றும் அவர் கூறினார்.

சுனாமி நிவாரண நடவடிக்கைகள் தொடர்பாக ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கும் முகமாக நடத்தப்பட்ட மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் இது பற்றி மேலும் கூறுகையில், யூன் மாதத்திற்கு பின்னர் மாதாந்த விசேட கொடுப்பனவு நிறுத்தப்பட்டு மாற்று வாழ்வியல் ஆதார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

இது வரையில் கிடைத்துள்ள புள்ளி விபரங்களின்படி 38 ஆயிரத்து 500 பேர் சுனாமிக்கு பலியாகியுள்ளதாக தெரியவருகின்றது. இவர்களில் பெரும்பாலானோருக்கு மரணச்சடங்குச் செலவு வழங்கப்பட்டுள்ளது. இதே சமயம் இறந்தவர்களுக்கான நஷ்ட ஈட்டுத்தொகை இதுவரையில் எவருக்கும் வழங்கப்படவில்லை அரசாங்கம் வழங்குவதற்கான நடவடிக்கையினை வெகு விரைவில் மேற்கொள்ளவுள்ளது. எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஈ-5)

# பொறியியல் பீட மாணவர்கள் 48 பேருக்கு விரிவுரைக்குத் தடை

(பேராதனை)

பேராதனை பல்கலைக்கழக பொறியியல் பீட சிரேஷ்ட மாணவர்கள் 48 பேருக்கு விரிவுரைகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்துள்ளது.

மேற்படி தடையானது நேற்று முன்தினம் முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக பேராதனை பல்கலைக்கழக உபவேந்தர் தெரிவித்தார்.

இம்மாதம் 2ஆம் திகதி பேராதனை பல்கலைக்கழக வளாகத்தில் பொறியியல் மற்றும் கலைப்பீடங்களைச் சேர்ந்த மாணவர் குழுக்களிடையே இடம்பெற்ற மோதலில் சம்பந்தப்பட்ட பொறியியல் பீடத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கே மேற்படி தடை விதிக்கப்பட்டுள்ளது.

இத் தடையானது விசாரணைகள் முடியும் வரை நடைமுறையில் இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5,7)

# போக்குவரத்துத்துறை தொடர்பில் அரசிடம் முறையான கொள்கையில்லை

(களுத்துறை)

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் போக்குவரத்து தொடர்பில் பல திட்டங்கள் முன்வைக்கப்பட்டிருந்தன எனினும் ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைத்தமை காரணமாக அந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியாமல் போய்விட்டதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்திடம் போக்குவரத்துத்துறை தொடர்பில் முறையான கொள்கை எதுவும் இல்லை.

இந்த நிலையிலேயே பொல்காவலவில் பாரிய ரயில் -பஸ் விபத்து ஏற்பட்டு பலர் உயிரிழந்திருக்கிறார்கள் இவ்வாறான விபத்துக்களைத் தடுக்க வேண்டுமாயின் போக்குவரத்துத் துறையில் முறையான கொள்கை ஒன்று தேவை என்றும் அவர் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார். (ந-4)

# "ஒன்றுபட்டு உயர்வோம்"

மே முதல் நாள்!

இது தொழிலாளியின் - உழைப்பாளியின்-பாட்டாளியின் பெரு நாள்!

நாள் ஒன்றிற்கு எட்டு மணி நேரமே உழைப்பு, அதற்கு மேல் எனில் எதிர்ப்பு என்பதை முதலாளி வர்க்கத்துக்கு எடுத்துச் சொல்லும் வகையில் கொண்டாடப்படுகின்றது மேதின விழா!

மேதினம் இடதுசாரிகளுக்கு மாத்திரம் சொந்தமல்ல. இத் தினம் உலகில் இன, மொழி, கட்சி பேதமின்றிக் கொண்டாடப்படுகின்றது. தங்கள் உரிமைகளுக்காக - விடுதலைக்காக - சுதந்திரமான வாழ்க்கைக்காக.

தொழிலாளர்கள் நாளொன்றுக்கு எட்டு மணிநேரமே உடல் உழைப்பு என்ற கோரிக்கையை வைத்து முதன் முதலாக 1886 ஆம் ஆண்டு சிகாகோ நகரில் போராட்டம் நடத்தினர். அப் போராட்டத்தின் போது தொழிலாளர் பலர் சுட்டுக் கொல்லப்பட்டனர். எனினும் தொடர்ந்து நடந்த போராட்டங்களின் பயனாக எட்டு மணிநேர வேலை என்ற கோரிக்கையை வென்றெடுத்தனர். உலகத் தொழிலாளர் அந்த மகிழ்ச்சியைக் கொண்டாடினர். அதன் அடையாளமாக மே முதல் நாளை தொழிலாளர் தினமாகக் கொண்டாடி வந்தனர்.

1889 ஆம் ஆண்டு பாரிஸ் நகரில் நடைபெற்ற சர்வதேச சமதர்ம மாநாட்டில் மே முதல் நாள் உலகத் தொழிலாளரின் விடுமுறை நாளாகப் பிரகடனம் செய்யப்பட்டது. அன்று முதல் உலக நாடுகளிலெல்லாம் மே முதல் நாள் உழைப்பாளிகளின் விடுமுறை நாளாக இருந்து வருகின்றது.

அக்காலத்தில் ருஷ்ய நாட்டில் ஜார் மன்னனின் பயங்கர ஆட்சி நிலவியது. அடக்குமுறை இருந்தும் கூட அங்கே மேதின ஊர்வலம் நடைபெற்றது. ஜார் ஆட்சியை அகற்றலெனின் மேதினத்தைப் பயன்படுத்தினார். பொலிஸ் தடியடிக்கும் இராணுவத்தின் துப்பாக்கிக் குண்டுக்கும் மக்கள் இலக்காயினர்.

ஜார் ஆட்சி கவிழ்க்கப்பட்டு தொழிலாளரின் ஆட்சி பிறந்த பின்னர் 1917 இல் மேதின விழா, சோவியத் ருஷ்யாவில் சுதந்திரமாகக் கொண்டாடப்பட்டது.

ஒவ்வொரு நாட்டிலும் தொழிலாளர்கள் தங்கள் பிரச்சினைகளை மேதினக் கொண்டாட்டத்தின்போது முன்வைக்கிறார்கள். கூலி உயர்வு, விலைவாசி, தொழிலாளர் நலன்கள், மனித உரிமை, அரசியல், ஜனநாயகம் முதலியனவற்றை ஆராய்கிறார்கள். தீர்மானங்கள் நிறைவேற்றுகிறார்கள்.

அடிமைப்பட்ட நாடுகளில் மக்கள் விடுதலை பெற, சுதந்திர வாழ்வும் வளமும் பெற, அநீதியை எதிர்த்து முழக்கமிட மேதினம் பயன்படுகின்றது.

எங்கள் நாட்டில் தொன்று தொட்டு வாழும் இரு பெரும் இனங்கள் மேதின விழாவின் போது முன்வைக்கும் கோரிக்கைகளில் பெரியதொரு வேறுபாடு உண்டு. சிங்கள இனத்துக்கு முதலாளி தொழிலாளி பிரச்சினை, வேதன உயர்வு முதலியன. தமிழினத்துக்கு இன்றுள்ள பிரச்சினை ஒட்டுமொத்தமாக சுயநிர்ணய உரிமை.

தமிழினம் இந்த நாட்டில் அரசியல், பொருளாதார, பண்பாட்டு விடுதலையை முன்வைத்து மேதினத்தைக் கொண்டாடுகின்றது. அதனால் மற்றெவருக்கும் இல்லாத சிறப்பு தமிழ் இனத்துக்கு இருக்கின்றது.

தமிழ் மண்ணில் மேதின விழாக் கொண்டாடும் அனைவரினதும் சிந்தனையெல்லாம் ஒன்றே ஒன்றுதான். தமிழின விடுதலை தான்!

இந்த இலட்சியத்தை வென்றெடுக்க நாங்கள் மேன்மேலும் எவ்வாறு திறமையாகச் செயல்படவேண்டும் என்று ஆராய்ந்து முடிவு செய்வதே எங்கள் நோக்கம்.

உரிமை! தமிழ் பேசும் மக்கள் இந்த நாட்டில் உரிமையுடைய தனியொரு இனமாக வாழவேண்டுமெனில் ஆளும் இனத்தின் ஒற்றையாட்சி முறை அகற்றப்பட வேண்டும - கூட்டாட்சி அமைக்கப் படவேண்டும். இனிமேலும் பொறுமை காப்பதிலும் பேச்சு நடத்துவதிலும் காலம் விரயமாகுமே யன்றி பயன் விளையப் போவதில்லை.

•இனிமேலும் நான் பெரியவன் நீ கற்றுக்குட்டி என்று சொல்லிக் கொண்டிருந்தால் நிலைமை மோசமாகிவிடும்.

அனைத்துத் தமிழர்களையும் ஒன்றிணைக்கவும் ஒரே குரலில் பேசவும் முடியவில்லையென்றால் என்ன பயன்? மாறுபட்ட கருத்துக்களை வெளியிட்டுக் கொண்டிருப்பது எதிரிக்குச் சாதகமான பலனைத் தரும்.

தமிழினத்தின் ஒற்றுமையே இன்றைய தேவை.

ஆட்சியாளர் பக்கம் சேர்ந்து தற்காலிக வாழ்க்கை வசதிகளை அனுபவிப்பவர்களும் அவற்றை விட்டு வந்து ஒன்றிணைய முடியுமெனில், குறிக்கோளை அடைவது சுலபம். அந்தப் பொற்காலம் பிறக்கட்டும் என்று இந்த மேதின விழாவில் முழங்குவோம். □

**எஸ்.பி.கிருஷ்ணன்**

## "உழைப்போரின் உரிமை மீட்ட உன்னத நாள்"

ஏதினி அடிமை வர்க்கம்
எனக்குரல் உயர்த்தி வந்த
"மேதினம்" வாழ்க! மண்ணில்
மேலவர் கீழோர் தம்மை
ஆதிக்கம் செய்து வந்த
ஆணவம் அழிந்த தென்நாள்?
மேதினி போற்றி வாழ்த்தும்
"மே" நாளே அந்நாள் அன்றோ?

வியர்வையின் துளிகளே! உம்
விழாநாளே மேநாள்; கைகள்
உயர் வினை உரத்துக் கூறும்
ஒப்பற்ற நாளே இந்நாள்
அயர்வின்றி உழைப்போனுக்கே
ஆயிரம் உரிமை மீட்ட
உயர்வான "மேல்நாள் மேநாள்"!
ஒப்பிலா அந்நாள் வாழ்க!

விழலுக்கு நீரைப் பாய்ச்சும்
வேதனை ஒழிய வேண்டும்
உழைப்பவன் உயர வேண்டும்
ஒற்றுமை தழைக்க வேண்டும்
நாட்டினில் சமுதாயத்தில்
நலநீதி கிடைப்பதற்குத்
தீட்டிடும் திட்டம் வேண்டும்
சிந்தனை மாற வேண்டும்

மதுரகவி. காரை. எம்.பி.அருளானந்தன்

# யாழ்.நகரில் நடாத்தப்பட்ட கண்டனப் போராட்டத்திலிருந்து...























# சந்திரமுகி

## திரை விமர்சனம்

ஆர்ப்பாட்டம் அமர்களத் தைக் கைவிட்டு ரஜினி இந்த முறை ஏறியிருப்பது துப்பறியும் குதிரையில்...

• ஜமீனுக்குச் சொந்தமான பா டைந்து கிடக்கும் அரண் மனையை விலைக்கு வாங்கி,
காவுடன சேர்ந்து குடியேறுகிறார் பிரபு.
டவடிக்கையில் ஏற்படும் மாற்றங்களைக்
ர் ரஜினி. பிரபுவின் நண்பர் என்பதோடு,
என்பது கூடுதல் விஷயம்.

த. ஜமீன், பேய், சாமியாட்டம் என்று ஏகப்
ாச் செய்து 'சந்திரமுகி' மண்டபததைக்
னர் பி.வாசு. மலையாளத்தில் 'மண'சித்ர
தமித்ரா' தற்போது தமிழில் சந்திரமுகியாகி

இடைவேளைக்குப் பின்வந்த ரஜினி படம்
இருக்கவே செய்கிறது. ஆனால் படம்
ளிலேயே, காண்டிராக்ட் தோல்வி, வில்லன
ரஜினி, மாட்டுவண்டியில் ஒரு பாடடு...
ஒரு கட்டத்தில் எரிச்சல் வந்துசேர்கிறது.
சேர்ந்த பின், இடைவேளை வரை நகர்தத
ரஜினி - வடிவேலு கூட்டணி காமெடி
... ரஜினி படத்திலா இப்படி! என்றால்
ில் ஆபாச, இரட்டை அர்த்த வசனங்
ார்.

லா, விஜயகுமார், நயன்தாரா என்று கதைச்
ஜன் பேர்கள் வந்துசெல்
காட்ட மு த்திருக்கும் ஷீலா பாதிப
ார் என்றே தெரியவில்லை. ரஜினியே ஒரு
போகிறபோது... மற்றவர்கள் நிலையைப்
வேண்டுமா?

ரை ஊர்ந்து, நெளிந்து செல்லும் திரைக்
துப் பிறகு 'ஜெட்' வேகம் எடுக்கின்றது.
ஒரு பரபரப்பு பற்றிக்கொள்கிறது. கடைசி
ி - ஜோதிகா கூட்டணி கலக்கியிருப்பது
னரின் அனுபவம் பளிச்சிடுகிறது.
ரிய ப்ளஸ் என்றால், அது சந்திரமுகியாக
ப்புதான். தன்னை, சந்திரமுகியாகப் பாவித்
உருட்டி, மிரட்டும் 'ஜோ'வை மறக்க



சந்திரமுகி
ரஜினி - நயன்தாரா

ி ஸ்டைலாக நடித்து வரும்போது ரஜினி,
சால்லத் தோன்றுகிறது.
க்கும் மர்ம காரியங்களுக்கும் பின்னணி
தி யாரென்ற சந்தேகத்தை எல்லோர் மீதும்
ர்களைத் திகைக்கவைக்கவேண்டும் என்
திட்டம். ஆனால், சரியான சொதப்பல்.
முன் வெளிவந்த பல திகில் படங்களைப
ன் புதுக்கோலம் போட்டிருக்கிறது. அக்
கரெட் இவைகளுக்கு விடுதலை தந்து
ரஜினி களத்தில் குதித்திருப்பது வர

தவிர, ஏனோ தானோவென்று ஒரு
ரஜினிக்கு திலலான விஷயமதான.
ரஜினி படத்துக்கு இசையமைப்பதைப் பற்றி
'கொஞ்ச நேரம்' பாடலைத்
படத்திலும் தெலுங்கு
கிறது.
இயக்குனரும் இன்னும் உழைத்
கிரீடம் சூட்டியிருக்கலாம். வித்தியாசமான
திருப்பது தமிழ் சினிமாவுக்கு ஆறுதலளிக்

ரமுகி - பிறைநிலா

---

இளையராஜாவின் அண்ணன் ஆர்.டி. பாஸ்கரின் மகன் ஹரிபாஸ்கர் 'வியூகம்' படம் மூலம் கதாநாயகனாக அறிமுகமாகிறார்.


* * *

'சிவகாசி' படத்தில் விஜய்யின் தங்கையாக 'ராமகிருஷ்ணா' பட நாயகி ஸ்ரீதேவிகா நடிக்கிறார்.

* * *

சின்னா படத்தைத் தொடர்ந்து அர்ஜுன் இயக்கும் 'மதராஸி' படத்திலும் சிநேகாவுக்கு கதாநாயகி வாய்ப்பு வந்திருக்கிறது.

## சினிமாச் சிதறல்



'செல்வம்'
நந்தா - உமா

மன்மதன் படத்தின் டைரக்டர் ஏ.ஜே.முருஹனின் பக்கம் அதிஷ்டக் காற்று வீசுகிறது. தானே கதாநாயகனாக நடிக்கும் 'சைக்கோ' படத்தின் ஏற்பாடுகள் ஒரு பக்கம் கூடி வந்திருக்கிறது. இந்தப் படத்தை முருஹனின் நண்பர் ஒருவரும், சேது கந்தசாமியும் சோந்து தயாரிக்கிறார்கள். படத்தில் முருஹன் ஒரு ஹீரோ, சேது கந்தசாமி கைகாட்டும் ஒரு புதுமுக இளைஞர் இன்னொரு ஹீரோ.

## பிரான்சிலிருந்து ஒரு இசையமைப்பாளர்! மனசை உலுக்கிய 'சுனாமி' குறும்படம்!



அப்பளம் போல நொறுங்கிக் கிடக்கின்றன கடற்கரைக் கிராமங்கள். அரை வினாடியில் அனாதைகளாகிவிட்ட சிறுவர்கள், தாங்கள் இழந்த சொர்க்கத்தை நினைத்து இன்னமும் அழுதபடி இருக்கிறார்கள். அழுத்தமான வடுக்களை ஒவ்வொருத்தரின் மனசிலும் குத்திவிட்டுப் போன அந்த ஞாயிற்றுக்கிழமை இனி வரவே கூடாது என்பதுதான் எல்லாருடைய பிரார்த்தனையுமாக இருக்கிறது.

படைப்பாளிகள் இதையும் ஒரு கல்வெட்டாகச் செதுக்கத்தான் ஆசைப்படுவார்கள். இரத்தமும் சதையுமாக ஒரு கல்வெட்டை செதுக்கியிருக்கிறார் கவிஞர் அறிவுமதி. 'நீலம்' என்ற தலைப்பில் சுனாமியின் சீற்றத்தைக் குறும்படமாக எடுத்திருக்கிறார்.

படத்தில் நடித்திருப்பது அலைகளும், மணற்பரப்பும், பரந்து விரிந்த கடலும், அவைகளுடன் அரவிந்த் பச்சானும்! இந்த அரவிந்த் பச்சான், தங்கர் பச்சானின் வாரிசு. 'அழகி'யில் நந்திதாதாசின் மகனான வருவாரே, அவர்தான்.

தங்கர்பச்சானின் ஒளிப்பதிவுடன் இணைந்து படத்தின் ஜீவநாடியாக அமைந்திருக்கிறது பின்னணி இசை.

இந்தக் குறும்படத்திற்கு இசையமைத்த நிர்மலனுக்கு பூர்வீகம் இலங்கை. ஓயாத வேட்டுச் சத்தத்திற்கு இடையில் எதர்வீட்டு தவில் சத்தத்திற்கு அடிமையானார் நிரு. ஆமாம், இவா வீட்டின் எதிர்வீட்டில் குடியிருந்தது பிரபல தவில் வித்வான் தட்சிணாமூர்த்தி. இசைக்கு அங்கே அடிமையானார் நிரு. பின் இவரின் குடும்பம் பிரான்சிற்குக் குடிபெயர்ந்தது. சோறூட்டும் போதே தமிழும் ஊட்டினார் நிருவின் அம்மா. தாய்மொழியில் சாதிக்கவேண்டும் என்ற வெறியில் இருந்த நிரு, 'ஒரு பார்வை', 'மூங்கில் நிலா', 'செல்ல நாதம்' என்ற இசை அல்பங்களை வெளியிட்டார். பிரெஞ்ச் மொழியில் 'பூஷிபா' என்ற அல்பத்தையும் வெளியிட்டார்.

பிரெஞ்ச் சிறையில் மனநிலை பாதிக்கப்பட்ட கைதிகளுகது உதவிக்கரம் நீட்ட முடிவுசெய்த ரெட்கிராஸ் அமைப்பு ஒரு அல்பம் தயாரித்தது. அதற்கு இசையமைத்ததும் நிருதான். முறைப்படி கர்நாடக இசையைக் கற்றுக்கொள்ள நினைதத இவர், சென்னை சென்று அது சம்பந்தமான நிறையப் புத்தகங்கள் வாங்கிக்கொண்டு பிரான்ஸ் திரும்பினார். ஏட்டுச் சுரைக்காய் இசைக்கு உதவியது. இன்று கர்நாடக சங்கீதத்திலும் கரைகண்டு இருக்கிறார் நிரு.

இவரின் தற்போதைய தாகம் என்ன? தமிழ்ப்படங்களுக்கு இசையமைக்க வேண்டும்! அதுதான். முதல் முயற்சியாக பிரபல இயக்குனர் ஒருவரின் வீட்டுக் கதவைத் தட்டியிருக்கிறாராம். அவரும் நிருவின் இசை ஆர்வத்தை உணர்ந்து கொண்டு, வாய்ப்பளிக்க முழு சம்மதம் தெரிவித்திருக்கிறாராம.




அறிந்தும் அறியாமலும்
நவ்தீப் - சமிக்ஷா

## நான் கவர்ச்சியாக நடிக்கவில்லை – சிநேகா

'சின்னா' படத்தில் ஒரு பாடல் காடசியல் எனது உ களை சிறிது கவர்ச்சியாகத் தெரியும். என்னால் சிம்ரன், ஜோதிகா போல் கிளாமராக நடிக்க முடியாது. நான் ஹோம்லியாகத் நடிக்க முடியும். நான் கவர்ச்சியாக நடிக்கவில்லை என் 'சின்னா' படம் வந்தபிறகு நீங்களே புரிந்துகொள்வீர்கள.

இதேபோல் நான் தமிழை வீட்டுவிட்டு தெலுங்குப் பக் கவனம் செலுத்துவதாக சொல்கிறார்கள். தமிழில் எனக் கேற்ற கரக்டர்கள் அமைய பட்சத்தில்தான் தெலுங்கில கவனம் செலுத்து றேன். இதுதான் உண்மை என கதை அள கிறார் சிநேகா.



காட்பாதர்
அஜீத் - அசின்

\- - - - - - - - - - - - - - - -

சந்தியா மிக சந்தோஷத்தில் இரு கிறார். அவர் நடித்த 'ஆலிஸ் இன் ஒன்டர் லேண்ட்' மலையாளப் படம் சந்தியாவுக்கு பெரிய பெயரைப் பெற்றுத் தந்திருக்கிறதாம்.

திருமணமாகி ஒதுங்கியதால் மஞ்சுவாரி யாரின் இடம் மலையாளத்தில் நிரப்பப்படாம இருக்கறது. அந்த இடத்தைச் சந்தியா நிரப்புவார் என டைரக்டர் சிபிமலயில் சொ துதான் சந்தியாவின் சந்தோஷத்திற்குக் ணம்.

# மேதினத்தில் அணி திரள்க!

## மாவை.சோ. சேனாதிராசா எம்.பி

'மே' 1ஆம் நாள் மேதினியெங்கும் உழைக்கும் வர்க்கம் தமது உரிமைகளைப் பேணும் பொருட்டு விழா எடுக்கும் நாள்.

அதேநேரத்தில, தொழிலாளர் வர்க்கம் தாங்கள் பெற்றுள்ள உரிமைகளை இழந்துவரும் அபாயமும் உலகமயமாக்கல் - சந்தைப் பொருளாதாரம் - தனியார்மயமாக்கல் எனும் புதிய பொருளாதாரக் கொள்கைகளினால் ஏற்பட்டு வருகின்றது.

தொழிலாளர் வர்க்கம் மட்டுமில்லாமல் வறிய நாடுகளும், அபிவிருத்தியில் வளர்முக நாடுகளும் பெரும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றன. இந்நாடுகள், வளர்ந்து, பொருளாதார வல்லாண்மை நாடுகளுடன் உற்பத்தியிலும், சந்தைப்படுத்தலிலும் போட்டியிட முடியாமல் பெரும் நெருக்கடி நிலையையும் வீழ்ச்சியையும் அனுபவிக்கின்றன.

மே நாள் கொண்டாட்டங்களை நாடுகளின் அரசுகளும் அரசியல் கட்சிகளும் விடுதலைக்குப் போராடும் மக்களும் தங்கள் பலத்தை நிருபிக்கும் வகையிலும போராட்டங்களுக்கான அறைகூவலை விடுப்பதற்கும் மே நாள் கூட்டங்களை எழுச்சியாகவும் உணர்வுபூர்வமாகவும் நடாத்துகின்றன.

இலங்கையைப் பொறுத்தவரை தொழிலாளர் வாக்க அமைப்புக்கள் இனவாத அடிப்படையில் பிளவுபட்டு நிற்பது மட்டுமல்லாமல் சிங்கள தேசப் பேரினவாத சித்தாந்தத்தைப் பற்றிநின்று தமிழ்த் தேசிய இனத்தினதும், தமிழ்த் தொழிலாளர் வர்க்கத்தினதும் அரசியல் உரிமைகளையும் அடிப்படை மனித உரிமைகளைக் கூட அடககி ஒடுககுவதற்கும், தமிழத் தேசிய இன அடையாளத்தையே அழித்துவிடுவதற்கும் இராணுவ ஆக்கிரமிப்புக் கொள்கையைக் கடைப்பிடிப்பதைக கடந்த கால வரலாற்றில் கண்டுவந்துள்ளோம்.

இத்தகைய பேரினவாத நவ பாஸிச வாத அரசுகளுக்கும், இராணுவ ஆக்கிரமிப்புக்கும எதிராக தமிழ்த் தேசிய இனம் தொடர்ந்து தனது எதிர்ப்பையும், போராட்டத்தையும் நடத்தவேண்டியது வரலாற்றுக் கடமையும் அவசியமுமாகும்.

பேரினவாத இராணுவ ஆக்கிரமிப்புக்கெதிராக, தமிழ்த் தேசிய இனத்தின் பாதுகாப்புக்காக, தமிழ்த் தேசத்தின் விடுதலைக்காக ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்துப் பல சாதனைகளைப் புரிந்த தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பும் சிங்கள தேச அரசும் போர்நிறுத்த உடனபடிக்கையைச செய்ததன் மூலம் சர்வதேசமும் தமிழத் தேசத்தின் போராட்டத்தை அங்கீகரித்துள்ளமையும் தமிழ்த் தேசியப் போராட்ட வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தைத் திறந்துள்ளது எனலாம்.

இதன்மூலம் தமிழ்த் தேச மக்களின் தன்னாட்சியுரிமையும் அதன் ஆள்புலமும் இனப்பிரச்சினைத் தீவுக்கு இவ்வாறு ஒரு திடமான அரசியல் தீர்வுக்கான சந்தர்ப்பம் அல்லது தன்னாட்சியை நிறுவுவதற்கான சூழ்நிலை ஏற்பட்டுவருவதைப் பொறுத்துக்கொள்ளாத பேரினவாத சக்திகளும் அவர்கள் கையில் வேலை செய்யும் தமிழ்த் தேசியத்திற்கு விரோதமானதும், கொள்கை மாறிப் போனதுமான தமிழ் எனும் பெயரில் விலைபோன குழுக்களும், தமிழ்த் தேசத்தைப் பிளவுபடுத்தவும், இராணுவ பலத்தையும், ஒன்றுபட்டு நிற்கின்ற ஜனநாயக அரசியல் சக்திகளையும் சீர்குலைக்கவும் பல நடவடிக்கைகளில் ஈடுபடுவதை யாவரும் அறிவர்.

இச் சக்திகள் அரசியல் தீர்வை எட்டுவதற்கு முன் அரங்காக இடைக்காலத் 'தன்னாட்சி அதிகார சபை'யையோ, சுனாமிப் பேரவையால் பாதிக்கப்பட்ட தமிழ்த் தேசத்தையும் மக்களையும் மீளக்கட்டியெழுப்பவும், புனரமைக்கவும் தேவையான பொதுக்கட்டமைப்பையோ உருவாக்க எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

மனிதாபிமான உதவிகள் கூடத் தமிழ்த் தேசத்திற்குக் கிடைப்பதை இச்சக்திகள் தடுத்து வருகின்றன. எம்மக்களைப் பட்டினிபோட்டு அடிபணிய வைக்க அரசுகளும் முயற்சிக்கின்றன.

தமிழ்த் தேசத்திலிருந்து இலட்சக்கணக்கான மக்களைக் கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலாக வெளியேற்றிவிட்டு இராணுவம், உயர்பாதுகாப்பு வலயமெனப் பிரகடனப்படுத்தி ஆக்கிரமித்து நிற்கின்றது.

தமிழ்த்தேச மக்களின் குடியிருப்புக்களிலிருந்து பேரினவாத இராணுவத்தை வெளியேற்றவும் தமிழ் மக்களை தம் சொந்த இடங்களில் குடியேற்றவேண்டிய நடவடிக்கைகளை நாம் முன்னெடுக்க வேண்டியுள்ளோம். சர்வதேசம் இந்நடவடிக்கைக்கு ஆதரவு தரவேண்டும். எம்முன்னுள்ள முன்னிலைப்படுத்த வேண்டிய போராட்டம் இன்று இதுதான்.

மூன்றாண்டுகள் கடந்தும் போர் நிறுத்தம் நீடிக்கிறது. ஆனால் இயல்பு வாழ்க்கை திரும்பவில்லை. மனிதாபிமான அடிப்படையில் சர்வதேச நாடுகள் சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதை எதிர்த்து நிற்கும் சிங்கள பௌத்த பேரினவாதம் முன்னெப்பொழுதையும் விடத் தற்போது தீவிரமடைந்து நிற்கின்றது.

இந்நிலையில், சர்வதேசத்தின் அனுதாபம் தமிழ்த் தேச மக்களின் பக்கம் திரும்பி வருகின்றது. இதனை மிகுந்த பக்குவத்துடன் அணுகி தமிழ்த் தேசத்தின் தன்னாட்சிக் கட்டமைப்பை மேலும் கட்டியெழுப்ப நாம் அனைவரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும்.

தொழிலாள மக்களினதும், உழைக்கும் வர்க்கத்தினதும், சமூகக் கட்டமைப்புக்குள் வீழ்ந்துகிடப்போரினதும் அடிப்படை உரிமைகளும், அரசியல் உரிமைகளும், சிங்கள பேரினவாத ஆட்சிக்கெதிரான, தமிழ்த் தேசத்தின் போராட்டத்தின் வெற்றியிலேயே தங்கியிருக்கின்றன.

இந்நிலையில் 'மே' திருநாளில் நாம் அனைவரும் மிகுந்த நிதானத்துடன் ஒன்றுபட்டு நின்று தமிழ்த் தேசத்தின் தன்னாட்சி கட்டமைப்பை பலப்படுத்தவும் சர்வதேசத்தின் ஆதரவைப் பெற்றிடவும் உழைப்போம் என உறுதிபூணுவோம்.

## யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

தமிழ்த்தேசிய உழைப்பாளர் உரிமை உயர ஒருங்கிணைவோம் என்ற தொனிப்பொருளில் முன்னெடுக்கப்படவுள்ள மே நாளானது தமிழ்த் தேசியத்தின் வெளிப்பாட்டினை முன்நிறுத்தவுள்ளது.

எனவே தமிழ்த் தேசியத்தின் பலத்தை வெளிக்காட்டுவதற்கு மக்கள் அனைவரும் பேரணியில் திரண்டு கலந்துகொள்ள வேண்டியது தார்மீக கடமையாகும்.

அதேவேளை, பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள, பனை தென்னை வள கூடடுறவுச் சங்கங்கள், கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஏனைய கூட்டுறவு சங்கங்களின அங்கத்தவர்கள், நெறியாளர்கள், பணியாளர்கள், கூட்டுறவாளர்கள் அனைவரும் கலந்துகொண்டு எமது உரிமையை உலகிற்கு உணர்ததுமாறு கூட்டுறவு சமாச தலைவர் ப.கனகலிங்கம் மேதினத்தையொட்டி அறைகூவல் விடுத்துள்ளார்.

## சுரேஷ் பிறேமச்சந்திரன் எம்.பி

மே 1 தொழிலாளர் இரத்தம் சிந்தி தமது உரிமைகளைப் பெற்ற தினம். உலகம் முழுவதும் உள்ள தொழிலாளர்கள் இத் தினத்தை மிகவும் எழுசசியுடன கொண்டாடுகின்றார்கள்.

இந்தவகையில் வடக்கு -கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் அனைவரும் அரச உத்தியோகத்தாகளாக, தினக் கூலிகளாக, கடற்தொழிலாளராக, விவசாயிகளாக எவ்வாறு இருப்பினும், சகல எல்லைகளையும் கடந்து, சிங்கள பௌத்த பெருந்தேசியவாத அடக்குமுறையின கோரப்பிடியில் இருந்து விடுபட தமிழர் அனைவரும் எழுச்சியுறும் நாளே இந்த மே தினமாகும்.

யுத்தத்தினால் சீரழிந்து போன பொருளாதார வளங்களும், வாழ்விடங்களும் ஒரு பக்கம், சுனாமியால் சீரழிந்து போன பொருளாதார வளங்களும், வாழ்விடங்களும் இன்னொரு பக்கம். இவற்றைச் சீர்செய்ய தமிழர் தரப்புடன் இணைந்து செயலாற்ற மறுக்கும் அரசும், சிங்கள இனவாதக் குழுக்களும் தீரமுடன் செயற்படும் ஒரு காலகட்டத்திலேயே மே தினமும் வருகின்றது.

இவை தவிர, அரசபடைகளின் அடாவடித்தனங்கள், கொலைக் கலாசாரத்தின் மூலம் மக்களை அடக்கியாளலாம் என்ற சிந்தனை, தமிழ் மக்களை சினங்கொள்ளச் செய்து புலிகளை வலிந்து யுத்தத்திற்கு இழுககும் செயற்பாடு, இவை இன்னொரு புறம் நடைபெற்றுக்கொண்டே இருக்கின்றது.

இப்படியான ஓர் காலகட்டத்தில் நாம் ஒருமித்து இருக்கின்றோம், ஒரே குரலில் பேசுகின்றோம். யுத்தத்திற்கெதிராக இருக்கிறோம். அதேசமயம் கௌரவமான ஓர் தீர்வை எதிர்பார்த்திருககின்றோம், என்ற செய்திகளை வெளியுலகுக்கு உணர்ததுமுகமாக எமது மே தின நிகழ்வுகள் அமைய இருக்கின்றன. எழுச்சி பொங்கும் இப் புரட்சித் திருநாளில் நடைபெறும் மே தின ஊர்வலங்களுக்கு ஆயிரமாயிரமாக திரளுமாறு மக்களை அன்புடன் அழைக்கின்றோம்.

## யாழ்.மாவட்டக் கல்வி மேம்பாட்டுப் பேரவை

தமிழர் கல்வியின் அடிப்படை உரிமைகள் பறிக்கபபட்ட எழுபதுகளில் அவற்றை மீட்டெடுக்க ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் இன்று தேசிய இன விடுதலைப் போராட்டமாக உருவெடுத்திருக்கின்றது.

கடந்த மூனறு ஆண்டுகளாக சமாதான வழியை எதிர்பார்த்துக் காததிருந்தும், புரிந்துணர்வில் புரிந்துகொள்ளப்பட்டவை எவையும் நிறைவேற்றப்படவில்லை.

ஆக்கிரமிக்கப்பட்ட த்மிழர் தாயக மண்ணிலிருந்து ஸ்ரீலங்காப்படையினர் முற்றாக வெளியேற வேண்டும். உயர்பாதுகாப்புப் பகுதியென்ற போர்வையில் ஆக்கிரமிக்கப்பட்ட மண்ணில், சிதைந்துள்ள புகழ் பூத்த அனைத்துப் பாடசாலைகளும் மீண்டும் ஆரம்பிக்க வழிசெய்யப்பட வேண்டும். அம் மண்ணுக்குரியவர்கள் அம் மண்ணிலேயே வாழ வேண்டும்.

இன்றைய அவலநிலை தீரவும், சகல மக்களும் அமைதியாகவும் சமாதானமாகவும் வாழ வழிவகுக்க வேண்டும். இதற்கான ஒரே வழி இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையை விடுதலைப்புலிகளிடம் கையளிப்பதாகும்.

இவைகளை வலியுறுத்தியே மே தின நாளில் கல்விசார் சமூகம், மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வி உயர் அதிகாரிகள் அனைவரும் ஒன்றாக அணிதிரண்டு, அரசையும், சர்வதேச சமூகத்தையும் கேட்டுக்கொள்வோம்.

இன்றைய தினம் பிற்பகல் 2.30 மணிக்கு நல்லூரில் ஆரம்பித்து யாழ்.பல்கலைக்கழகத்தில் நிறைவடையும் கல்விசார் புலத்தினரின் மே தின ஊர்வலத்தில் கலந்துகொண்டு எமது இனத்தின் உரிமைகளை நிலைநிறுத்த அணிதிரளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்

'மே தினம்' உலகில் ஒவ்வொரு தொழிலாளியையும் நினைவுபடுத்துகின்ற தொழிலாளர் தினமாகும்.

தொழிலாளியின் உணர்வை அரசும், ஆட்சியாளரும் மதிக்கவேண்டும் என்பதற்காகவும் தொழிலாளியின் உழைப்பே உயர்ந்ததென்பதையும் உணர்த்துவதற்காகவும் கொண்டாடப்படுகின்ற தினமாகும்.

தமிழ் மக்களாகிய நாம் படும் துயரங்களையும், கொடுமைகளையும், உரிமையிழந்திருக்கும எண்ணங்களையும் பிரதிபலிக்கும் விதத்தில் தொழிலாளா தினத்தை நினைவு கோருகின்றோம் என்பதில் யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரிய சங்கமும் பங்கெடுத்துக் கொள்வதில் பெருமை அடைகின்றது.

அடக்குமுறைக்குள் அகப்பட்டிருக்கும் தமிழ் மக்கள் தொழிலாளர் என்ற உரிமையை மட்டுமல்ல வாழ்வுரிமையை, அரசியல் உரிமையை, மொழியுரிமையை இழந்தவர்கள். அரசின் அடக்குமுறையின் கீழ் தொழிலாளர் என்ற தரத்தில் மதிக்கப்படாதவர்களாக வீதி, வீதியாக நிறுத்தப்பட்டு இரண்டாம்தரப் பிரஜைகளாக விசாரிக்கப்பட்டவர்கள்.

அத்தகைய அரச விரோதச் செயல்களின் போதெல்லாம் கிளர்ந்தெழ முடியாதவர்களாகவும், போராடமுடியாதவர்களாகவும் துப்பாக்கி முனைகளில் சிறைப்படுத்தப்பட்டிருந்தோம். சமாதான காலம் அதன் சூழலில் சிறிய தளர்வை சாத்தியப்படுத்தி இருக்கின்றதேயன்றி முழுமையான மாற்றங்கள் இன்னும் ஏற்படுத்தவில்லை. எங்கள் மக்களின் தொழில் நிலங்களைப் பறித்து அரச இராணுவம் ஆக்கிரமித்து வைத்துள்ளது. நூற்றுக்கும் மேற்பட்ட சிறிய, பாரிய கைத்தொழில் நிலைகளை இயங்க முடியாத நிலைக்குள் இராணுவத் தாக்குதலால் அழித்ததுடன் மீண்டும் அப்பிரதேசங்களை சூறையாடி இராணுவ முகாங்களையும், காவலரண்களையும் கட்டி வைத்திருக்கிறது.

அது மட்டுமன்றி உற்பத்திக்கான நிலத்தையும் வாழ்வடங்களையும் வெடிபொருட்களாலும், கொடுமையான பாதிப்பினை விளைவிக்கும் ஆயுத தளபாடங்களாலும் அழித்துவைத்துள்ளது.

தமிழனின் தொழில் வாய்ப்பினை கல்வி ரீதியாக ஒடுக்கிய அரசு நிலத்தை தொழில் செய்ய முடியாது ஆக்கிரமித்து வைத்துள்ளது. கடலைப் பல கட்டுப்பாடுகளை விதித்து தொழில் செய்யமுடியாதளவுக்கு சட்டங்களையும், தடைகளையும் ஏற்படுத்திவருகிறது. மீனவனுக்கான உழைப்பை சுனாமி அழிக்க முன்பே அரசும் அரசின் படைகளும் அழிவுக்குள்ளாக்கி விட்டன.

பாதுகாப்பு என்ற போர்வையில் தமிழ் மீனவரின் நிலத்தினைக் கடற்படையும், இராணுவமும் முற்றாகவே முடக்கிவிட்டன. சுனாமி என்ற இயற்கை கொடுமையைப் பயன்படுத்தி மேலும் அரச படைகள் தமிழ் மீனவரின் வாழ்வை நிர்க்கதியாக்கிவருகிறது.

மொத்தத்தில் கல்வியை இழந்து உற்பத்திக்கான நிலங்களைப் பறிகொடுத்து மீன் வளங்களையும், மீனவத் தொழிலையும் இழந்து அடிமைகளாக கையேந்தும் நிலைக்கு தமிழர்களை அரசு தள்ளியுள்ளது.

இத்தகைய அடக்குமுறைக்கு எதிராக தமிழ் மக்கள் ஒன்றுதிரண்டு போராடுவதுடன் புதிய சமூகத்தையும், புதிய உலகத்தையும் உருவாக்கும் பலம் தமிழ் மக்களிடமே உண்டு. அதனை மே தினத்தில் உணர்ந்து அரசின் அடக்குமுறைக்கு எதிராகக் குரல் கொடுப்போம்.

## யாழ். மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம்

இவ்வுலகம் முழுவதும் உழைத்து, உலகின் திசையெங்கும் இயங்கவும் உயரவும் காரணர்களாய் விளங்குகின்ற தொழிலாளர்கள் என்றும் நன்றியுடன் போற்றுதற்குரியவர்கள். அன்று தொடக்கம் இந்த நிமிடம வரை உலகத்தின் ஆக்கத் தொழிற்பாட்டில் உயிரூட்டும் சக்திகளாய் இருப்பவர்கள் இவர்கள்தான்.

பலம்வாய்ந்தோரென தம்மைத்தாமே கருதி இருந்த மூலதன உடமையாளர்களை அவர்களது இயங்கும் பலம் தாமே என உணரவைத்தவர்கள் தொழிலாளர்கள்.

தொழிலாளர்களின் சக்தி உலகின் மாபெரும் சக்தி என அனைவரையும் உணரவைக்கும் ஒரு தினமே 'உலகத் தொழிலாளர் தினம்' ஆகிய மேதினமாகும்.

உழைக்கும் சக்தி ஒன்றுபடும்போது அதன் பலம் பன்மடங்காகிறது. தொழிலாளர்கள் இல்லையெனில் உலகில் ஆக்கமெனும் கிரியை நடைபெற முடியாது. அந்த ஆக்கத்தின் உந்துசக்தியாய் ஆக்கத்தின் அடிப்படையாய் விளங்குகின்ற தொழிலாளர்களின் மேன்மையே தொழிலின் மேன்மைக்கு அடிப்படையாகிறது.

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்ய சிரம் தாழ்த்துபவன் அந்த உழவையும் தொழிலையும இயக்குகின்ற கர்த்தாவாய் நிற்பவர்களையே வந்தனை செய்கிறான்.

வயிறார சோறுண்டு நீட்டி நிமிர்ந்து படுத்துறங்குகின்றோமே இந்த நிம்மதியின் பின்புலம் என விளங்குபவர்கள் யாரென எப்போதாவது நினைத்துப் பார்ப்பதுண்டா?

எமது பசியாற உணவும் நாம் வாழ்ந்திருக்க ஒரு வீடும் உருவாக ஆதாரமானவர்களான தொழிலாளர்கள இல்லையெனில், அவர்களின் மனமார்ந்த உழைப்பு இல்லையெனில் நாம் தேடியிருக்கும் சௌகரியங்கள் எதுவும் உருவாகி இருக்க முடியாது. இதனை நன்றியுடன் நினைத்துப் பார்க்க வேண்டிய கடப்பாடு நம் ஒவ்வொருவருக்கும் உண்டு.

ஈழத்தமிழ் மண்ணின் மைந்தர்களாகிய கடப்பாடோ இரட்டிப்பாகிறது. பொருளின் உருவாக்கத்திற்கு ஆதாரமான தொழிலாளர்களாய் விளங்கும் உழைப்பாளிகளை மாத்திரமல்ல எமது இனத்தின் விடுதலைக்காக, விடிவிற்காக உழைப்பினை வழங்கி உயிரையும் ஈர்ந்தார்களே எமது மண்ணின் முதல்வர்கள். அவர்களின் தன்னலம் நினையா பெருங்கொடைப் பண்புக்கு எமது சிரம் தாழ்த்தி வணக்கம் சொல்லும் பெருங்கடமை நமதாகிறது.

தற்கால வாழ்வைத் தக்கவைத்துக்கொள்ள மட்டுமன்றி எக்காலத்திற்குமாய் ஒரு விடுதலைப் பெருவாழ்வு விளங்குமாறு தமது வீரத்தை களமாக்கி விடுதலையை விளைவிக்க சித்தம் கொண்டவர்களை நாம் இன்றைய நாளில் எண்ணிப்பார்த்து போற்றும் கடப்பாடு உடையவர் ஆவோம்.

ஓங்கட்டும் உழைப்போர் பெருமை. நின்று நிலைக்கட்டும் சுதந்திர பெருவாழ்வை நிறுவுதற்காய உழைத்த உழைக்கும் எமது தாயகத்தின் புதல்வர்களின் மேன்மை.

(ந)

# 1600 ஆண்டு காலத் தவம்



டில்லியல் 1600 ஆண்டுகளாக நிற்கும் இரும்புத்தூண் 'குதுப்மினார்', துருப்பிடிக்காமல் இருப்பதன் இரகசியத்தைச் சென்னை கல்பாக்கம் அணு ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். டில்லியில காணவேண்டிய ஏராளமான வரலாறறுச் சின்னங்கள், நினைவுச் சின்னங்கள, சுற்றுலா இடங்களல் குதுப்மனார் இரும்புத்தூணும் ஒன்று.

கிபி 4ஆம் நூற்றாண்டில் 1,600 ஆண்டுகளுக்கு முன்பு இது நிறுவப்பட்டது. சுற்றுலாப் பயணிகளில் ஆயிரக்கணக்கானோர் தினமும் இதைப் பார்த்துச் செல்கின்றனர்.

1600 ஆண்டுகளாக இந்த இரும்புத்தூண் துருப்பிடிக்காமல் இருப்பதுதான் அதிசயம். இதனால் இதைப் பார்க்கும் சுற்றுலாப் பயணிகள் வியப்படைகின்றனர். இத்தனை ஆண்டுகளாக இந்தத் தூண் துருப்பிடிக்காமல் இருப்பது எப்படி? என்பது பொதுமக்களுக்கு மட்டுமல்ல விஞ்ஞானிகளுக்கும் புரியாத புதிராக இருந்தது.

டில்லியின் மிதமான வெப்பநிலை காரணமாகவே குதுப்மினார் துருப்பிடிக்காமல் இருக்கிறது என சில விஞ்ஞானிகள் கூறினார்கள். சுத்தமான இரும்புக் கலவையால செய்யப்பட்டதால்தான் அது துருப்பிடிக்கவில்லை என்று சில விஞ்ஞானிகள் கூறினார்கள்.

ஆனால் அதன் முழுமையான காரணத்தை ஆராயும் பணியில் இந்திராகாந்தி அணு ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள், குதுப்மினாரின் இரும்புத்தூண் துருப்பிடிக்காத இரகசியததைச் கண்டறியும் ஆராய்ச்சியில் ஈடுபட்டனர். அவர்களுடன் கான்பூரில் இந்திய தொழில்நுட்பக் கழக உலோகவியல்துறை விஞ்ஞானிகளும் இந்த ஆராய்ச்சியில் இறங்கி உண்மையைக் கண்டறிந்துள்ளனர்.

# மனஉளைச்சலைக் குறைக்க சினத்தைக் கட்டுப்படுத்துங்கள்

வீடு, பள்ளிக்கூடம் மற்றும் பணி இடம் போன்ற இடங்களில் நாம் அனைவரும் மன உளைச்சலை அனுபவிககினறோம். நமக்குள் ஏற்படுகின்ற மன உளைச்சல் கோபத்தின் மூலமாகத்தான் வெளிப்படும். கட்டுக்கடங்காத சினம் அழிவுத்தன்மையை ஏற்படுத்தக்கூடியது.

கோபமாக இருக்கும்போது கடைப்பிடிக்க வேண்டியவைகள்:-

*தன் நிலை இழந்து சினம் உண்டாக்குவது போல் சூழ்நிலை இருந்தால் அவ்விடத்தைவிட்டு உடனே விலகிச்சென்று விடுங்கள்.

*மன உளைச்சலைச் சமாளிக்க இயலாவிடில் நம்பிக்கைக்குரிய நபரிடம் மனம் திறந்து பேசுவது நல்லது.

*தான் எதற்காகக் கோபப்படுகிறோம் என்று அறிந்து, அப்பிரச்சினைக்குத் தீர்வுக்காண முயலுங்கள்.

*போதுமான நேரம் தூங்கவேண்டும்.

*கோபமான நேரத்திலும், ஆக்கபூர்வமாகச் சிந்திக்கப் பழகுங்கள்.

*கோபமான நேரத்தில், விருப்பமிக்க செல்களில் ஈடுபடுங்கள்.

*தினமும் உடல்பயிற்சியை மேற்கொள்ளுங்கள்.

*குடும்பத்தோடு சுற்றுலாத்தளத்திற்குச் சென்று மகிழ்ச்சிகரமாக விடுமுறையைக் கழயுங்கள்.

மன உளைச்சலைச் சமாளித்து, வாழ்நாள் முழுவதும் குடும்பத்தோடு ஆரோககியமாக வாழக கற்றுக்கொள்ளுங்கள்.

# வெறி நாய் கடி!

கோடைகாலத்திலதான் நாய் கடியால் பாதிக்கப்பட்டவர்கள் மருத்துவமனைகளில் நிரம்பி வழிவர். இதற்கு இந்தச் சீசனில், 'ராபிஸ்' எனப்படும் நோயால் நாய்கள் பாதிக்கப்படுவதே காரணம்.

ஒரு நுண்ணுயிரியால் நாயின் மூளையும், முதுகெலும்பும் பாதிக்கப்படுகிறது. இந்த நோய் முற்றிவிட்டால் 5 நாட்களிலேயே நாய் இறந்துவிடும். இந்த நோய் வெளிப்பட ஆறு வார காலமாகும். இந்த நோய்க்கிருமிகள் மனிதர்கள், பசுக்கள், பூனைகள், வவ்வாலகளையும் தாக்கும். மனிதனுக்கு இந்த நோய் வந்துவிட்டால் தண்ணீரைக் கண்டாலே பயப்படுவர். 'ஹைட்ரோ போபியா' என்ற நோய் வரும் வெறிநாய் கடிபட்ட மனிதன் மூன்று நாட்களுக்குள்ளேயே தடுப்பு ஊசி போட்டுக்கொள்ள வேண்டும். இல்லையெனில் நாய் குரைப்பது போலவே குரைத்து இறந்துவிடுவர்.

# எளிய மருத்துவம்

## மூக்கடைப்பு நீங்க

சைனஸ் நோய் உள்ளவர்களுக்கு மூக்கடைப்பு ஏற்படும் சமயம், இரண்டு சொட்டு நலலெண்ணெய் மூக்கில் விட்டால், அடைப்பு நீங்கிவிடும்.

## சளி மறைய

நல்ல மிளகைப் பால் விட்டு அரைத்துக் கொதிக்க வைத்து, அதை நெற்றியிலும தொண்டையிலும் தடவினால், சளி உடனே குறைந்து முழுமையாகக் குணமடைந்துவிடும்.

## சீதபேதிக்கு

சீத பேதியால் அவதிப்பட்டால், சிறிதளவு கறிவேப்பிலையை அம்மியில் வைதது நன்றாக அரைத்து, நெல்லிக்காய் அளவு உருட்டி உருண்டை செய்து, ஒரு டம்ளர் தயிரில் ஓர் உருண்டையைப் போட்டு கரைத்து காலையில் வெறும் வயிற்றில் ஒரு டம்ளர் தயிர் சாப்பிட்டால் சீதபேதி குணமாகும்.

## கண் நோய், தலைவலிக்கு

சீரகத்தை நல்லெண்ணெயில் இட்டுக் காய்ச்சித் தலை முழுகினால் கண்நோய் நீங்கும; தலைவலி அகலும்; மந்தம் மடியும்.


## மூலநோய் குணமாக

மூலநோய் இருந்தால், மணத்தக்காளியும் வெங்காயமும் சேர்த்துச் சம்பல் செய்து சாப்பிடலாம்.

## இரத்த அழுத்தம்

பிளட் பிரஷர் என்று கூறப்படும் இரத்த அழுத்த நோய்க்குத் துளசி மிக நல்ல மருந்து. துளசி இலைகளை ஒரு கைப்பிடி அளவு எடுத்து, தண்ணீரில் அலசி, பின் ஒரு பாத்திரத்தில் நீர்விட்டு, அதனைப் போட்டு வைக்க வேண்டும். பின் இந்த நீரைத் தினமும் காலையில் 1/4 டம்ளர் வீதம் குடித்து வந்தால், அது அடைபட்டிருக்கும் இரத்தக்குழாய்களை அகலப்படுத்தி, இரத்த ஓட்டத்தைத் தடையின்றி ஓடச் செய்யும்.

# குறுக்கெழுத்துப் போட்டி இல-57



*அனுப்ப வேண்டிய முகவரி-*

**குறுக்கெழுத்துப் போட்டி இல - 57**
**'வலம்புரி - சங்குநாதம்'**
**இல:- 15, வெள்ளாந்தெரு,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

*முழுப் பெயர்* :- ..........................................
*முகவரி* :- ..........................................
..........................................
..........................................

*இங்கே வெட்டுக* ------------------------------ ✂

***மேலுள்ள கூப்பனில் விடைகளை நிரப்பி எதிர்வரும் 05ஆம் த்கதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.***

## இடமிருந்து வலம்

(1)ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்று. (4)ஐவகை நிலங்களில் ஒன்று (திரும்பியுள்ளது). (6)அதிகப் பிரசங்கித்தனமாக பேசும் சிறுவர்களை இப்படி பழுத்தது என்பார்கள் (திரும்பியுள்ளது). (8)ஆட்டோ மானின் பேரரசின் கீழ் இருந்த நாடு. (9)மலரை இப்படியும் சொல்வார்கள். (10)வீட்டை அழகுபடுத்த பூக்களை இதில் வைப்பார்கள் (திரும்பியிருக்கிறது). (13)பாதை (திரும்பியிருக்கிறது). (14)தமிழகத்தில் அல்வாவிற்கு மிகவும் புகழ்பெற்ற ஊர்.

## மேலிருந்து கீழ்

(1)ஒரிசாவில் ஆடப்படும் ஒரு நடனம். (2)கியூபா நாட்டின் ஜனாதிபதியின் பெயரில் முதல் பாதி (குழம்பி வருகிறது). (3)கோவில்களில் காணலாம். (5)பானை பிடித்தவள் இவள் என்பார்கள். (7)இரத்தம் - ஒத்த சொல். (11) ஒரு இனத்தை பொதுவாக இப்படி அழைப்பார்கள். (12)பசும்பாலின் உபயத்தில் இது கிடைக்கும் (கீ.மே). (13)படித்தவர்களும் படிக்காதவர்களும் இதை தேடத்தானே வேண்டும்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல.55 இன் விடைகள்

**இடமிருந்து வலம்**

1.கோமேதகம் 5.தீ 6.குதர்க்கம் 8.குமுதம் 10.அவா 11.மது 12.மன்னன் 14.ஊதல் 15.திகில் 17.சிசு 18.மல்லி

**மேலிருந்து கீழ்**

1.கோகுலம் 2.மேதகு 3.கக்குவான் 4.முகம் 7.மதம் 9.தும்மல் 10.அனல் 12.சுதன் 13.மதில் 14.ஊசி 16.கிலி

## பரிசு பெற்றோர் பெயர் விபரம்

**முதற் பரிசு** :- N.நர்மதா
யாழ்.பருத்தித்துறை வீதி,
ஆவரங்கால்.

**இரண்டாம் பரிசு** :- வே. இராஜேந்திரன்
கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

**மூன்றாம் பரிசு** :- எஸ்.ஆர்.சண்முகரத்தினம்
958/8 கே.கே.எஸ். வீதி.
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

**போட்டியில் கலந்துகொண்டு பாராட்டுபபெறும் அதிஷ்டசாலிகளின் பெயர் விபரம்**

வி.செல்வநாயம், புத்தூர். சி.சிந்துஜா, திருநெல்வேலி, வ.மன்னர் அன்ரனி, குருநகர். தே.கார்த்திவன், கரவெட்டி. வி.தெபோ, குருநகர். K.கனகசபாபதி, தம்பசிட்டி. ச.ரஜனிமாலா, உரும்பிராய. ப.சிவசூரியர், சங்கானை. சு.மதுசன், சண்டிலிப்பாய். கே.இராஜகோபால், வட்டுக்கோட்டை.

# உயர் பாதுகாப்பு வலயத்துள் இடம்பெற்ற படுகொலைக்கு அரசாங்கமே பொறுப்பு

## -தமிழீழ விடுதலைப்புலிகள்

தமிழினத்தின் மிகச் சிறந்த ஊடக வியளாலரான தராக்கி டி.சிவராம் கொழுமபில் கடத்திக் கொல்லப்பட்டுள்ளாா.

சிறிலங்கா அரசின் இராணுவப் புலனாய்வுப் பிரிவும் அவர்களோடு சேர்ந்து இயங்கும் தமிழ் விரோதக் குழுக்களுமே இக்கொலைக்கு காரணமாகும். சிவராமின் இந்த கொலைச் சம்பவம் தமிழ்மக்களிடத்திலும் ஊடகவியலாளர்கள் மத்தியிலும் மிகப் பெரும் அதிர்ச்சியையும கோபத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது என தமிழீழ விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

தராக்கி என்றும், டி.சிவராம் என்றும் நன்கறியப்பட்ட தர்மரத்தினம் சிவராம் மிகத் துணிச்சலானதொரு ஊடகவியலாளர். எவ்வகையான நெருக்கடிச் சூழ் நிலைகளிலும் எதற்கும் அஞ்சாது துணிச்சலாக செய்திகளையும் கருத்துக்களையும் முன்வைத்து வந்தவா.

கடந்த இரண்டு தசாப்த காலத்தில் சர்வதேசம் நன்கறிந்த சிறந்த தமிழ ஊடகவியலாளராகச் செயற்பட்டு தமிழ் மக்களின் பிரச்சனைகளை வெளி உலகிற்கு எடுத்துச் சொன்னவர். தனது ஊடகப் பணியினூடாக தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை வெளி உலகத்துக்குத் தெரியப்படுத்த முனைந்து உழைத்தவர்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்துடன் தன்னை நீண்ட காலமாகவே தெளிவாகவும் உறுதியாகவும் பிணைத்திருந்தவர் சிவராம். சிங்களப் பேரினவாத அடக்கு முறைக்கு எதிரான போராட்டத்தில் எண்பதுகளின் தொடக்கத்திலிருந்து இணைந்து செயற்பட்டவர்.

அன்றிலிருந்து தனது இறுதிக் கணம் வரையிலும் தமிழின விடுதலையை நெஞ்சார விரும்பி தனது சிந்தனையையும் எழுத்தையும் முன்வைத்து வந்தவர்.

சிங்களப் பேரினவாதிகளிடமிருந்து தமிழரின் இனப் பிரச்சினைக்கான எத்தகைய தீர்வையும் ஒரு போதும் எதிர்பார்க்க முடியாது என்ற வலுவான கருத்தை தனது அனுபவத்தின் வழியாக வலியுறுத்தி வந்தவர் சிவராம். அத்துடன் தமிழ்த் தேசயத்தை கூர்மைப்படுத்த வேண்டும், அதனைப் பலப்படுதத வேண்டும் என்னும் உயரிய நோக்கோடு வாழ்ந்தவர்.

தமிழ்த் தேசியம் பலத்தோடு வளர்தது்ச் செல்லப்பட வேண்டும் எனக்கூறி தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரனன் தலைமையை ஆதரித்தவர் டி. சிவ ராம்.

சமாதானப் பேச்சுவார்த்தை குறித்து தெளிவற்ற முறையில் கற்பிதங்களை மக்களிடம் உருவாக்கும் போக்கு தமிழ் ஊடகத்துறையின் தவறாகும் எனச் சுட்டிக்காட்டியவா.

அதேவேளையில் சமாதானத்தை தமிழர்களுக்கு ஒரு பொறியாக மாற்ற முனையும் சந்தர்ப்பங்களை அம்பலப்படுத்த வேண்டும; அதுவே தமிழ் ஊடகங்களின் இன்றைய பணி என்றும் சொல்லிவந்தவர்.

தமிழ் ஊடகவியலாளர்கள் தம்மை நவீன தகவல் தொழில் நுட்பத்திலும் தொடர்பாடலிலும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று சிவராம் தமிழ் ஊடகவியலாளர்கள் மத்தியில் வலியுறுத்தி வந்தார்.

தமிழ் ஊடகவியலாளர்களைப் பொறுத்தவரையில் சிவராம் ஒரு நல்ல தோழமையாளனாக பத்திரிகைத் துறையில் பலருக்கும் முன்னோடியாளனாக இருந்து ஊடகத்துறையின வளர்ச்சிக்காகப் பாடுபட்டிருக்கிறார்.

எப்போதும் பக்கச் சார்புகள் இல்லாமல் தனது விமர்சனங்களை முன்வைத்து வந்த நல்லதொரு பணபாளர் சிவராம்.

கொழும்பில் கொலை மிரட்டல்கள், குடியிருப் பதிற்கான அச்சுறுத்தல்கள் எனத் தொல்லைகள் தொடர்ந்தபோதும் அவற்றைக் கண்டு பின்வாங்காமல் சிங்களப் பேரினவாதத்தை அம் பலப்படுத்தி வந்தவர்.

நிமலராஜனையோ, நடேசனையோ, தன்னையோ கொல்வதன் மூலம் தமிழ் மக்களின் போராட்டக் கருத்தினை மழுங்கடித்து விட முடியாது என்பதை கொலையாளர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று, தனக்கு வரக்கூடிய அபாயத்தை ஏற்கனவே உணர்ந்து கூறி வந்தவர். ஆனாலும், தனது கருத்துக்களையோ நிலைப்பாட்டினையோ தளர்வேதுமில்லாமலே இறுதி வரை உறுதியுடன் தொடர்ந்து வந்தார்.

தனது குடும்பம், தனது சுய பாதுகாப்பு என்பவற்றைக்கூட பொதெனக் கருதாமல் ஒரு நல்ல புகழ் வாய்ந்த தமிழ் ஊடகவியலாளராக உழைத்து வந்தவர் சிவராம்.

ஊடகவியலாளர் சிவராம் ஏற்கனவே பல தடவைகள் சிறிலங்கா இராணுவப் புலனாய்வுத்துறையின் கொலை மிரட்டல்களை எதிர்நோக்கியுள்ளார்.

அவரது கொழும்பு இல்லமும் சோதனைக்குள்ளாகீயது. இக் கொலையானது கொழும்பின் உயர் பாதுகாப்பு பகுதியுள் நடைபெற்றுள்ளது. எனவே, இக்கொலைக்கு சிறிலங்கா அரசும் அதன் படைகளுமே பொறுப்பாகின்றன.

சிவராமின் உறுதியையும் அவருடைய கருத்து நிலைப்பாட்டினையும் அவருடைய விரிந்த செயல்களையும் பொறுத்துக் கொள்ள முடியாத சக்திகள் இன்று அவரைக் கடத்திக் கொன்றிருக்கின்றன.

படுகொலையில் சிவராமை இழந்து நிற்கும் அவரது மனைவி, பிள்ளைகள், மற்றும் குடும்பத்தினருக்கு எமது ஆறுதலைத் தெரிவிக்கிறோம்; அவர்களுடைய துயரில் நாமும் பங்கெடுத்துக் கொள்கிறோம் என விடுதலைப்புலிகள் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ற-4)

# வியாழனிரவு கணவருடன் தொடர்பு கொள்ள முயன்றேன் ஆனால் தொ.பேசி இணைப்பு துண்டிக்கப்பட்டுவிட்டது

## -சிவராமின் மனைவி விபரிப்பு

(கொழும்பு)

வியாழக்கிழமை இரவு கணவருடன் தொடர்பு கொள்ள முயன்றேன் ஆனால் தொலைபேசி இணைப்பு துண்டிக்கப்பட்டு விட்டது என்று படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் சிவராமனின் மனைவி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியாளர் சிவராம் சம்பவதினம் மாலை 4.45 மணியளவில் வீட்டில் இருந்து புறப்பட்டுச் சென்றதாக அவரது மனைவி திருமதி யோகராணி சிவராம் தெரிவித்துள்ளார்.

தனது கணவன் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக ஊடகவியலாளருக்கு அவர் தெரிவிக்கையில், சம்பவதினம் இரவு 11.00 மணியளவில் எமக்கு அறிமுகமான ஒருவர் தொலை பேசியில் தொடர்பு கொண்டு வீட்டில் ஏதாவது பரச்சினையா? என்று கேட்டார்.

அப்படி எதுவும் இல்லை என்றேன. இதனையடுத்து எனது கணவரின் கையடக்கத் தொலைபேசிக்கு ஓரிரு தடவைகள் தொடர்பு கொள்ள முயன்ற போது மணி ஒலித்தது.

ஆனால் தொலைபேசி தொடர்பு கிடைத்தவுடன் அது துண்டிக்கப்பட்டு விட்டது. பின்னர் ஏற்கனவே தொலைபேசியில் தொடர்பு கொண்டவருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது இப்படி ஒரு சம்பவம் அதாவது கடத்தப்பட்டுள்ளார் என்று அறிந்ததாகவும் எதற்கும் பொலிசில் முறைப்பாடொன்றைச் செய்யுமாறும் தெரிவித்தார்.

நள்ளிரவு எனது சகோதரனுடன் பம்பலப்பிட்டி பொலிஸநகுச் சென்று முறைப்பாடு செய்தேன்.

வெள்ளிக்கிழமை காலை பாராளுமன்றத்தை அண்மித்த பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் சடலமொன்று கிடப்பதாக தகவல் கிடைத்தது. அங்கு சென்று பார்த்த போது எனது கணவர் இறந்து கிடந்தார் என்றார்.

இதேவேளை படுகொலை செய்யபபட்ட ஊடகவியலாளர் சிவராம் வெள்ளிக்கிழமை.இரவு மட்டக்களப்பிற்கு புறப்படவிருந்ததாக அவரது சக ஊடகவியலாளர் களின் தகவல்கள் மூலம் அறியக் கூடியதாக உள்ளது.

அவரால் 1980 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மட்டக்களப்பு வாசகர் வட்டத்தின் 25 ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கருத்தரங்கொன்றில் "காலனித்துவ ஆட்சியில் மட்டக்களப்பு'' என்ற தலைப்பில் இவர் உரையாற்றுவதற்கு இருந்தார்.

இது ஒரு புறமிருக்க இப் படுகொலை தொடர்பான விசாரணைக்கு விசேட அதிரடிப் படையினரின் ஒத்துழைப்பும் பெறப்பட்டுள்ளதாக பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னான்டோ தெரிவித்தார். படு கொலை செய்யப்பட்ட சிவராம் அவரது நண்பர்களும் கடைசியாக உணவருந்திய விருந்தகத்தில் பணியாற்றிய 20 பேரின் வாக்கு மூலங்கள் பெறப்பட்டுள்ளன.

இதனை வைத்து கடத்தப் பட்ட வாகனம் தொடர்பான விபரங்களை அறிந்து கொள்ளக் கூடியதாக விருக்கும் என்று நம்பப்படுகிறது. (ற-4)

# கொலைக்கான பொறுப்பை அரசே ஏற்க வேண்டும்

## -பாராளுமன்ற உறுப்பினர்கள்

ஊடகவியலாளர் சிவராமின் படுகொலை தொடர்பாக மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரம், டெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் ஆகியோரும் கண்டித்துள்ளனர்.

டெலோ இயக்கத் தலைவர் அடைக்கலநாதன் மற்றும் ரவிராஜ் எம்.பி ஆகியோர் இது பற்றி வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில், பாதுகாப்பு மிக்க பிரதேசமொன்றில் ஊடகவியலாளர் கடத்தப்பட்டு அதியுயர் பாதுகாப்பு மிக்க பிரதேசத்தில் சடலமாக வீசப்பட்டுள்ளார்.

இதற்கான பொறுப்பை அரசாங்கமும் பாதுகாப்பு அமைச்சிற்கு பொறுப்பான சந்திரிக்கா குமாரதுங்கவுமே ஏற்க வேண்டும் இச்சம்பவமானது தமிழ்த் தேசியத்திற்காக குரல் எழுப்பும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் பாதுகாப்பு இல்லாத நிலைமையையே தோற்றுவிக்கும் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. (ற-4)

# சிவராமின் இழப்பு வேதனைக்குரியது

## -அமெரிக்கப் பிரதிநிதி

ஊடகவியலாளர் சிவராமின் இழப்பு மிக்வும் வேதனைக்குரியதொரு விடயமென அமெரிக்கத் திட்டமிடல் மற்றும் சர்வதேசக் கற்கை நெறிகள் அமைப்பின் தென்னாசியப் பிராந்திய இயக்குனரான திருவாட்டி ரெறிசிரா ஸாபர் தெரிவித்துள்ளார். இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராகவும் கடமையாற்றிய திருவாட்டி ரெறிசிரா ஸாபர் தமிழ்நெற் இணையத்தளத்திற்கு அனுப்பிவைத்துள்ள கவலைக்குறிப்பில், இலங்கையிலுள்ள தலைசிறந்த அரசியல் ஆய்வாளர்களில் ஒருவரான சிவராமை நான் நன்கு அறிவேன்.

தனது சுயாதீனக் கருத்துக்களிற்காக போராடி வந்ததுடன் அவற்றை செயற்படுத்தியும் வந்த ஒரு ஊடகவியலாளன் சிவராம்.

தமிழ்ச் சமுதாயத்திற்கும் இலங்கைத் தீவிற்கும் சிவராமைப் போன்றோரே தேவை சிவராமின் இழப்பானது மிகவும் வேதனைக் குரியது என்பதோடு, அவரைக் கொன்றவர்கள் சமூகத்திற்கும் நாட்டிற்கும் பாரிய தீங்கை இழைத்திருக்கிறார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ற-4)

# ஊடக சுதந்திரத்திற்கு பலத்த அடி

## -வன்னி ஊடகவியாலாளர் சங்கம்

செய்தியாளர் சிவராம் கடத்தி படுகொலை செய்யப்பட்டதை வன்னி ஊடகவியலாளர் சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது. நாட்டின் ஊடகச் சுதந்திரத்திற்கும், பேச்சுச் சுதந்திரத்திற்கும் இக்கொலைச் சம்பவம் பலத்த அடியாக விழுந்துள்ளது என்றுவன்னி ஊடகவியலாளர் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

செய்தியாளர் தர்மரத்தினம் சிவராம் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டார் என்பதை அறிந்து அதிர்ச்சியடைந்தோம். இக்கொலையை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். டெய்லி மிரர், வீரகேசரி ஆகிய பத்திரிகைகளின் கட்டுரையாளராகிய சிவராம் தமிழ்நெற் இணையத்தள ஆசிரிய குழு உறுப்பினருமாவார். அவர் துணிகரமாகக் கருத்துக்களை வெளியிட்டு வந்தார். ஆழிப்பேரலை பேரழிவின் பின்னர் நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி நிலைமையின்போது இக்கொலை இடம்பெற்றுள்ளதன் மூலம், இந்த நாட்டின் ஊடக சுதந்திரத்திற்கும் பேச்சுச் சுதந்திரத்திற்கும் பெரிய அடி விழுந்துள்ளது. சிவராமைக் கொலை செய்தவர்களை சட்டத்தின் முன்கொண்டு வருவதற்கு அரசாங்கமும் அதன்பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகளும் உடன் நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம் என்று அவ்வறிக்கையில் மேலும் சுட்டிக் காட்டப்பட் டுள்ளது. (ற-4)

# சிவராம் படுகொலைச் சம்பவம் நீதிக்குக் கிடைத்த சாவுமணி

## -எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பு

பிரான்ஸ் நாட்டை தளமாகக் கொண்ட சர்வதேச ஊடகவியலாளர்களின பலம் வாய்ந்த எல்லைகள் அற்ற ஊடகவியலாளர் அமைப்பு, ஊடகவியலாளர் சிவராமின் படுகொலையை வன்மையாகக் கண்டித் துள்ளது.

கொழும்பு பொலிஸ் நிலையத்திற்கு முன்பாகக் கடத்தப்பட்டு, பின்னர் படுகொலை செய்யப்பட்ட சிவராம், மிகத் துணிச்சலான ஊடகவியலாளர். அவரது பாரபட்சமற்ற அரசியல் மற்றும் இராணுவ எழுத்துப் பணியே அவரது படுகொலைக்குக் காரணம் என்று தாம் நம்புவதாக இந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த 2004 ஆம் ஆண்டு மே மாதம், இந்த சர்வதேச அமைப்பிடமும் தனக்கு எழுந்துள்ள உயிராபத்தை சிவராம் சுட்டிக் காட்டியதாகக் குறிப்பிட்டுள்ள மேற்படி அமைப்பு அவரது வீட்டை சிறிலங்கா பொலிஸார் சல்லடை போட்டுத் தேடியபின்னர், அவரது உயிருக்கு எந்த உறுதியும் இல்லை என்று அவர் நேரடியாகவே தங்களிடம் முறையிட்டதாகவும் குறிப்பிட்டுள்ளது. விடுதலைப்புலிகளால் விலத்தப்பட்ட கருணா குழுவினரை, சிறிலங்கா அரச உளவுப்படையினர், தங்களுடன் இணைத்துக்கொண்டு செயற்பட ஆரம்பித்தபோது, தனது துணிச்சலான எழுத்துக்களால் அரசியல் மற்றும் இராணுவ இரகசியங்களை நேர்மையாக வெளிக் கொணர்ந்த ஒரு எழுத்தாளர் சிவராம் என்று சுட்டிக்காட்டியுள்ள அந்த அறிக்கையில், தனது நாட்டின் எழுத்தாளர்களைப் பாதுகாக்கத் தவறிய அரசின் பாராமுகத்தையும் உதாசீனத்தையும் கண்டித்துள்ளது. சிறிலங்கா அரசு, தனக்கு சார்பான ஊடகவியலாளர்களுக்கு மட்டும் உரிய பாதுகாப்பு வழங்குவதுடன், அவர்களது நியாயமற்ற செயற்பாடுகளையும் மறைத்தும் தவிர்த்தும் வருகின்ற அதேவேளை, துணிந்து உண்மையை எழுதுகின்ற பல ஊடகவியலாளர்களை திட்டமிட்டு அழிக்கும் நடவடிக்கைகளையும் தொடர்ந்து முன்னெடுத்து வருவதாக அந்த அறிக்கை சுட்டிக் காட்டுகிறது.

எழுத்தாளர் சிவராமின் கொலை ஒரு திட்ட மிட்டு முன்னெடுக்கப்பட்ட அப்பட்டமான படுகொலையாகும். இது நீதிக்குக் கிடைத்து ஒரு சாவுமணி என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. சிவராம் ஒரு மிகச் சிறந்த ஊடகவியலாளர் என்பதால் அவர் படுகொலை செய்யப்பட்டார் என்றே தாம் நம்புவதாகவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிககப்பட்டுள்ளதோடு, தங்களது ஆழ்ந்த அனுதாபங்களையும் அவரது குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் ஊடக உலகத்திற்கும் தெரிவித்துள்ளது. (ற-4,8)

# சிவராமின் படுகொலை குறித்து விரைவில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்

## சர்வதேச ஊடகவியலாளர் சங்கம்

ஒரு ஊடகவியலாளன் அவனது ஊடகப்பணிக்காகக் கொலை செய்யப்பட்டுள்ளமை, மிக வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டிய ஒன்று என்று சர்வதேச ஊடகவியலாளர் சங்கம் தனது கண்டன அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

தங்களது சங்கத்தில் தராக்கி ஒரு உறுப்பினர் அல்ல எனினும், ஒரு சர்வதேச மட்டத்தில் மதிக்கப்பட்ட சிறந்த ஊடகவியலாளர் என்ற வகையிலும, அவரது ஊடகத்துறை சார்ந்த பணிக்காகவே அவர் கொல்லப்பட்டுளளார் என்பது உறுதிபடத் தெரிகின்ற வகையிலும், தங்களது சங்கம் இந்தப்படுகொலையை மிக வன்மையாகக் கண்டிப்பதாக அந்த அறிக்கை மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. துப்பாக்கி அல்லது வேறு எந்தவொரு ஆயுதமும ஏந்தாது சாதாரண மாக நடமாடிய ஒரு மனிதனை, படுகொலை செய்வது மிகவும் கோழைத் தனமானது, வெட்கத்திற்குரியது என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக் காட் டப்பட்டுள்ளது. ஊடகவிய லாளர்கள தாக்கப்படுவதையும் கொல்லப் படுவதையும் அனைத்துத் தரப்பினரும் உடனடியாக நிறுத்த வேண்டு மென்றும், தராக்கியின் படு கொலை குறித்து உரிய விசாரணைகள விரை வாக நடாத்தப்பட வேண்டு மென்றும், நீதி நிலை நிறுத்தப்பட வேண்டுமென் றும, தமது சங்கத்தின் சார்பில் கேட்டு நிற்பதாக இச் சங்கத்தின் தலைவர் சைமன் கார்டினர் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார். (ற-4,8)

கருமம் செய ஒருவன் கைதூவேன் என்னும்
பெருமையின் பீடுடையது இல் - குறள்.

வலம்புரி

# இன்று தொழிலாளர் உரிமைத்தினம்

உழைக்கும் வர்க்கம் உய்வுபெற்ற தினம் இன்றாகும். உலகம் முழுவதும் இத்தினத்தை தொழிலாளர் தினமாக கொண்டாடுகிறது ஊழியச்சுரண் டலுக்கு எதிராக போர்கொடி தூக்கிய உழைப்பாளர்கள் தம்வியர்வை சிந்தும் நேரத்திற்கு முற்றுப் புள்ளி வைத்தநாள்.

அடக்கப்பட்ட-ஒடுக்கப்பட்ட சுரண்டப்பட்ட தொழிலாளர்கள் ஒருவரை ஒருவர் பார்த்து பெருமூச்சு விட்டகாலம் மாறி, நாமின்றி சுரண்டும் முதலாளி வர்க்கம் உயிர்வாழ முடியாது என்ற உண்மையை உணர்ந்து போர்க்கொடிதூக்கி வெற்றிகண்ட நாளும் இன்றே.

உழைப்பாளர்கள் ஒன்று சேர்ந்தார்கள், செங்குருதி சிந்தினர், உரிமை பிறந்தது, உழைப்பாளருக்கு ஓய்வு கிடைத்தது. அன்று தொழிலாளர்கள் தூக்கிய செங்கொடியால் இன்று தொழிலாளர் வர்க்கம் உழைப்பில் சுதந்திரத்தை அனுபவிக்கின்றனர். இஃது வெறுமனே தொழிலாளர்களுக்கு மட்டும் பொருத்துடையதல்ல.

அடக்கப்படும்- ஒடுக்கப்படும் ஓர் இனத்திற்கும் வழிகாட்டியாக அமைந்துள்ளது. சொந்த உரிமைகண்ணெதிரே பறிபோகும்போது அதனைப்பார்த்துக் கொண்டிருப்பதை விடப் பாதகம் இவ்வுலகில் வேறு ஒன்றும் இருக்கமுடியாது. உரிமை என்பது இனத் தாலோ, அன்றி மொழியாலோ, மதத்தாலோ நிர்ணயிக்கப்பட முடியாது.

ஓர் இனம் இன்னோர் இனத்தை கட்டுப்படுத்த முனையுமாயின் அதுவே அடக்கு முறை அடிமைத்தனம் எனக் கூறப்படுகிறது. ஓர் இனத்தை இன்னோர் இனம் அடக்குகிறது. உரிமையை அனுபவிக்கத் தடைபோடுகிறது என கண்டறியப்பட்ட பின்பும் ஒருவன் மௌனமாக இருப்பானாயின் அதனை விட முட்டாள்தனம் இந்த உலகில் எதுவும் இருக்க முடியாது.

உலகில் பிறந்த ஒவ்வொருவனுக்கும் வாழும் உரிமைஉண்டு. சுதந்திரக்காற்றை சுவாசிப்பதற்காகப் பாடுபடும் கடமையும் அவனுக்கு உண்டு. இதை எவரும் மறந்துவிட முடியாது.

உரிமைகள் மறுக்கப்பட்டபோது கிளர்ந்தெழுந்த தொழிலாளர்களினால் எவ்வாறு உரிமைகள் பெறப்பட்டதோ அதேபோன்று உரிமை இழந்து நிற்கும் இனங்களும் தமது உரிமைக்காக பாடுபடுவது கட்டாயமாகும்.

அடக்கப்பட்ட தொழிலாளர்கள் ஒன்றுதிரண்டு ஓர் அணியில் நின்று தமது எதிர்ப்பை வெளிக்காட்டியபோது முதலாளித்துவ வர்க்கம் எவ்வாறு அடி பணிந்து தொழிலாளர்களின் உரிமைகளை வழங்கியதோ அதேபோன்று அடக்கப்பட்ட இனங்கள் தமது எதிர்ப்பை போராட்ட வடிவில் வெளிப்படுத்தி சுதந்திரம் பெற்றதாக வரலாறு உண்டு.

அத்தகையதோர் வரலாறு ஈழத்தமிழர்களின் விடயத்தில் ஏற்படும் காலம் மிகதொலைவில் இல்லை என்பதை இன்றைய மேதினம் எடுத்தியம்புகின்றது.

அதற்காக தமிழர்கள் எல்லோரும் ஓர் அணியில் ஓர் தலைமையின் கீழ் ஒன்று திரளும் காலம் வந்து விட்டது

## கைது, படகு பறிப்பைத் தவிர்க்க
# இந்திய-இலங்கை மீனவர்களுக்கு லைசென்ஸ் வழங்குவதற்கு ஆய்வு
## -இந்திய வெளியுறவு இணை அமைச்சர்

(புதுடில்லி)

இந்திய-இலங்கை கடல் பகுதியில் மீன் பிடிக்கும் மீனவர் களுக்கு லைசென்ஸ் வழங்குவதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளனவா என்பது குறித்து இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுநடாத்தி வருவதாக இந்திய வெளியுறவு இணை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்திய லோக்சபாவில் நேற்று முன்தினம் கேள்வி நேரத் தின் போது தமிழகத்தைச் சேர்ந்த எம்.பி. பெல்லார்மின் .

இந்திய மீனவர்கள் தவறுதலாக சர்வதேச எல்லைக்கு மீன் பிடிக்கச் சென்று விடுகின்றனர். இவர்கள் அண்டை நாடான இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுகின்றனர். இந்தப் பிரச்சினைக்கு முடிவு கட்ட வேண்டும். அதற்காக தூதரக அளவில் ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா? என்று கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதில் அளித்துப் பேசிய போதே வெளியுறவு இணை அமைச்சர் அகமது இவ்வாறு தெரிவித்தார்.

இது விடயம் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியா மற்றும் இலங்கை அரசுகள் இணைந்து இதற்காக ஒரு குழுவை ஏற்படுத்தியுள்ளன. இந்தக் குழுவின் முதல் கூட்டம் கடந்த 21 ஆம் திகதி நடந்தது. அந்தக் கூட்டத்தில் சர்வதேச எல்லையில் வழி தவறி வரும் மீனவர்களை கைதுசெய்யாமல் இருக்கவும், அவர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்படும் படகுகளை உடனடியாகத் திருப்பி ஒப்படைக்கவும் மீனவர்களை மனித நேயத்தோடு நடத்துவது மற்றும் அவர்களுக்கு லைசென்ஸ் வழங்குவது உள்ளிட்ட பல்வேறு சாத்தியக்கூறுகள் குறித்தும் ஆய்வு செய்யப்பட்டன.



இலங்கை நாட்டு கடற்படையினரால் கைது செய்யப்படும் மீனவர்களை அரசு தூதரக அளவில் பேச்சுவார்த்தைகள் நடத்தி விடுவித்து வருகிறது. இந்த ஆண்டுபாகிஸ்தான் கடற்படையிடம் சிக்கிய இந்திய மீனவர்கள் 800 பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இந் நிலையில் இந்திய மீனவர்கள் அனைவரையும் சுனாமி பேரழிவுக்குப் பின் இலங்கை விடுதலை செய் தது. இந்திய மீனவர்கள் பாகிஸ்தானில் 300 பேரும் வங்க தேச சிறையில் 738 பேரும் உள்ளனர். அவர்கள் விரைவில் விடுவிக்கப்படுவர் என்றார்.

(ற)

# ஜே.வி.பியின் கூட்டு இன்றி ஆட்சியமைத்திருந்தால் புலிகளிடம் இடைக்கால நிர்வாகத்தை வழங்கியிருப்பேன்
## ஜனாதிபதி தெரிவிப்பு

(பிலியந்தலை)

சுனாமியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் புனரமைப்பதற்கே விடுதலைப்புலிகள் பொதுக்கட்டமைப்பினைக் கோரியுள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்துள்ளார்.

பிலியந்தலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்த கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

சுனாமிக்கு பிந்திய புனரமைப்பு நடவடிக் கைகளை மேற்கொள்ளவே விடுதலைப்புலிகள் பொதுக் கட்டமைப்பினைக் கோருகின்றனர். இது தொடர்பாக நோர்வே ஊடாகவோ, வேறுதரப்பு ஊடாக வோ பேச்சுவார்த்தையை விரைவில் நடத்தவுள்ளோம் பொதுக்கட்டமைப்பு ஏற்றுக் கொள்ளக்கூடிய சாதாரண கோரிக்கை இதனை வழங்க முடியாவிட்டால் அரசாங்கத்துக்கு சமாதானத்தைப் பற்றிப் பேசமுடியாது.

தனிநாடு கோரி வந்த விடுதலைப்புலிகள் இன்று இடைக்காலத்தன்னாட்சி வரை இறங்கி வந்துள்ளனர். பல்வேறு காரணங்களுக்காக விடுதலைப்புலிகளின் தனிநாட்டுக் கோரிக்கையினை அரசாங்கம் எதிர்த்த போதிலும் இடைக்கால நிர்வாக யோசனைக்கு இணங்கமுடியும்.

இதற்கு கூட்டமைப்பு அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் 9 கட்சிகளில் 8 கட்சிகள் இணங்கிய போதும், ஜே.வி.பி மாத்திரம் எதிர்ப்பத் தெரிவித்து வருகின்றத.

அவர்களின் இந்தக் கடுமையான போக்கின் காரணத்தினால் தான் என்னால் சமாதானப் பேச்சுவார்த்தை என்ற ஏணிப்படியில் ஏற முடியாமல் உள்ளது.

ஜே.வி.பியுடன் கூட்டுச்சேராமல் நான் ஆட்சியைக் கைப்பற்றியிருப்பேனாயின், இடைக்கால நிர்வாகத்தை விடுதலைப்புலிகளிடம் கையளித்து நாட்டினை முன்னேற்றப் பாதைக்கு இட்டுச் சென்றிருப்பேன்.

அரசாங்கம் எதனைச் செய்தாலும் ஐக்கிய தேசியக் கட்சி எதிர்த்து வருகிறது ஆனால் இன்னும் சிலர் வாய்யாலத்தின் மூலம் எமக்கு கத்தியை நீட்டுகிறார்கள். அது எமக்கு எவ்வித பாதிப்பினையோ பயத்தினையோ ஏற்படுத்தப்படமாட்டாது எனவும் குறிப்பிட்டார்.

(..47)

# உதவிவழங்கும் நாடுகளின் மாநாட்டிற்கும் பொதுக்கட்டமைப்புக்கும் எதுவித சம்பந்தமுமில்லை
## நிதியமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசுக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் உருவாக்கப்படவிருக்கும் பொதுக்கட்டமைப்புக்கும், அடுத்த மாதம் கண்டியில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டிற்கும் இடையே எவ்வித தொடர்பும் கிடையாது என நிதியமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

அடுத்த மாதம் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகள் கலந்த கொள்ளும் மாநாடு கண்டியில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தின் போது பிரதிநிதிகள் பொதுக்கட்ட மைப்பின் அவசியம் குறித்து வலியுறுத்தினால் என்ன நிலை? எனக் கேட்கப்பட்ட வினாவிற்கே நிதியமைச்சின் செயலாளர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் இது தொடர்பில் மேலும் கருத்துரைக்கையில்,

இம் மாநாடானது இலங்கையின் அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு நடத்தப்படும் ஒன்றென்பதால் பொதுக் கட்டமைப்பு மற்றும் சமாதான விடயங்கள் தொடர்பில் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் எவ்வித அழுத்தங்களையும் இலங்கை அரசு மீது பிரயோகிக்கமாட்டாது.

எனினும், இது தொடர்பில் அரசாங்கம் எதுவித பதில்களையும் அளிக்க மாட்டாது எனத் தெரிவித்தார்.

பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்துவதா இல்லையா? என்பதை உதவி வழங்கும் நாடுகளோ சர்வதேச நாடுகளோ தீர்மானிககமாட்டாது. அதனை அரசியல் வாதிகளேதீர்மானிப்பார்கள்

பொதுக்கட்டமைப்பு இல்லாவிட்டாலும் வடக்கு கிழக்கிற்கான அபிவிருக்கி நடவடிக்கைகள் கொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும்.

எனவே, உதவி வழங்கும் நாடுகளினால் வழங்கப்படும் நிதிகள் வடக்கு-கிழக்கிற்குப் பகிர்ந்தளிக்கப்படும். அதில் எவ்வித வேறுபாடுகளும் காட்டப்படாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ந-1)

## தினசரி தியானம்
# விவேகச் சிந்தனைகள்

பிரமத்தைத் தவிர குருவேறானவர் அல்ல. இது இரண்டு முறையும் சத்தியம். ஒருவன் செய்யும் ஜபம், தவம், விரதம், தீர்த்தம், யாகம், தானம் ஆகியவை குரு தத்துவத்தை அறிந்து கொள்ளாவிட்டால் வீணாகிவிடும். ஆகையால் எல்லா வகையிலும் முயற்சி செய்து குருவை ஆராதனை செய்.

சுவாமி விவேகானந்தர்

# சிவராம் படுகொலையைக் கண்டித்து யாழ். பஸ் நிலையம் முன் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

மூத்த ஊடகவியலாளர் தர்மரட்ணம் சிவராமின் படுகொலையைக் கண்டித்து யாழ். ஊடகவியலாளர் சங்கத்தினர் நேற்று முற்பகல் யாழ். பஸ் நிலையத்திற்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

முற்பகல் 11 மணியளவில் ஆரம்பமான இப்போராட்டம் மதியம் 12 மணிவரை இடம்பெற்றது. இப்போராட்டத்தில் யாழ். ஊடகவியலாளர் சங்கத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் கலந்துகொண்டனர்.

இதேவேளை இப்போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களான மா.க.ஈழவேந்தன், மாவை சேனாதிராஜா, சிவாஜிலிங்கம், பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

பஸ்நிலையம் முன்பாக வீதியினை மறித்து இடம்பெற்ற இப்போராட்டத்தினால் சுமார் அரைமணித்தியாலம்வரை போக்குவரத்து தடைப்பட்டது.

கலந்துகொண்ட அனைவரும் ஆர்ப்பாட்டக் கோஷங்களை எழுப்பிய வண்ணம் போராட்டத்தில் ஈடுபட்டனர். இப்போராட்ட முடிவில் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது கண்டனங்களைத் தெரிவித்து உரையாற்றினர்.

(இ-4,19)

# புலிகளின் குற்றச்சாட்டை மறுக்கின்றது இராணுவம்

(கொழும்பு)

மூத்த ஊடகவியலாளர் சிவராமின் படுகொலை இலங்கை இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவும் தமிழீழ விடுதலைப் புலிகளினால் வெளியேற்றப்பட்ட கருணா அணியினரும் இணைந்து நடாத்திய செயல் என தமிழீழ விடுதலைப் புலிகள் தெரிவித்த கருத்து உண்மைக்குப் புறம்பானதாகும். அதனை நாம் முற்றாக மறுப்பதாக இராணுவப் பேச்சாளர் தயாரட்ணாயக்க தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் எம் மீது குற்றஞ்சாட்டுவது இது புதிதானதொன்றல்ல. இது வழமையானதொன்றாகிவிட்டது. எனவே விடுதலைப் புலிகளின் குற்றச்சாட்டினை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் மேலும் தெரிவித்தார்.

(இ-04)

# வட - கிழக்கை மீளக்கட்டியெழுப்ப ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவி

## உடன்படிக்கை கைச்சாத்து

(கொழும்பு)

கடந்த இரு தசாப்த கால யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாண மக்களின் இயல்பு வாழ்க்கையினைக் கட்டியெழுப்புவதற்கும், இரண்டாம் கட்ட அபிவிருத்திப் பணிகளுக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவி வழங்கியுள்ளது.

இத் திட்டங்களுக்கான 14 மில்லியன் அமெரிக்க டொலர்களை மானியமாகவும், 16 மில்லியன் அமெரிக்க டொலர்களை கடனுதவியாகவும் இலங்கைக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கியுள்ளதாக வெளியுறவு வழங்கல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவற்றைவிட ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட பிரதேசத்தின் மீள்கட்டமைப்புத் திட்டத்துக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கி 150 மில்லியன் அமெரிக்க டொலர்களை மானியமாகவும் 7 மில்லியன் அமெரிக்க டொலர்களை கடன் உதவியாகவும் வழங்கியுள்ளது.

இவற்றுக்கான உடன்படிக்கைகளில் நிதியமைச்சின் செயலாளர் பி.வி. ஜயசுந்தரவும், ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் அலன்ஸோ பியோவும் கைச்சாத்திட்டுள்ளனர். (ற-4)

# யாழ். குடாநாட்டில்...

இப்பேரணி அரசடிச் சந்தியூடாக கந்தர் மடம் சந்தியை அடைந்து அங்கிருந்து, பலாலி வீதியூடாக திருநெல்வேலிச் சந்தியை அடைந்து ஆடியபாதம் வீதியூடாக யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தைச் சென்றடையும்.

பின்னர் அங்கு பொதுக்கூட்டம் இடம்பெறும். இதில் பாராளுமன்ற உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளென முக்கிய பிரமுகர்கள் உரையாற்றவுள்ளனர்.

இம்மேதினப் பேரணியில் கலந்துகொள்வதற்கு மக்களை அணிதிரளுமாறு யாழ். மாவட்டப் பொது அமைப்புக்களின் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

இப்பேரணியில் கலந்துகொள்ளும் பொதுமக்களுக்கு இலவச போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இப்பேரணியில் கலந்துகொள்ளும் பொது அமைப்புக்கள், தொழிற்சங்கங்கள், வர்த்தக சங்கங்கள், பொதுமக்கள் அனைவரையும் உரிய நேரத்துக்கு பேரணி ஆரம்பமாகும் நல்லூர் கந்தன் ஆலய முன்றலுக்கு வருமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

அத்துடன் ஊர்திகளை குறித்த நேரத்திற்கு முன்னதாகவே கொண்டுவந்து சேர்க்குமாறும் ஏற்பாட்டாளர்கள் ஊர்தி செலுத்துபவர்களைக் கேட்டுள்ளனர். (இ-4)

# எரிபொருள் விலை அடுத்த வாரம் உயரும்?

(கொழும்பு)

எரிபொருளின் விலை அடுத்தவாரம் முதல் அதிகரிக்கப்படக்கூடிய சாத்தியக் கூறுகள் இருப்பதாக நிதியமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

கலையகெதிர்வில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற பொதுக் கூட்டமொன்றில் கருத்துரைக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பெற்றோல் மற்றும் டீசல்களின் விலைகள் அதிகரிக்கப்படவுள்ள அதேவேளை மண்ணெண்ணெயின் விலை அதிகரிக்கப்படமாட்டாதென தெரிவித்தார். (இ-4)

# மேதின நிகழ்வு

சர்வதேச மார்க்ஸிஸ குழுவின் மேதின நிகழ்வு இன்று மாலை 4 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ற)

# விழி நிமிர்த்திய...

முதல் தளபதியான மேஜர் சோதியாவின் 15 ஆம் ஆண்டு நினைவு நாளினையொட்டி ஒலிப்பேழை வெளியிட்டு வைக்கப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் ஒலிப்பேழையினை வெளியிட்டு வைக்க, மாலதி படையணியின் சிறப்புத் தளபதி கேணல் யாழினி ஒலிப்பேழையை பெற்றுக்கொண்டார்.

"விழி நிமிர்த்திய வீரம்" ஒலிப்பேழையின் அறிமுக விழா போர் பயிற்சிக் கல்லூரியில் நடைபெற்ற ஆனையிறவு மீட்பு தீச்சுவாலை முறியடிப்பு வெற்றிவிழாவில் நடைபெற்றது.

வடமுனைக் கட்டளைத் தளபதி கேணல தீபன் ஒலிப்பேழையினை அறிமுகம் செய்து வைக்க மேஜர் சோதியாவின் தாயார் ஒலிப்பேழையினை பெற்றுக்கொண்டார்.

(இ-04)

# சிவராமுக்கு "மாமனிதர்" விருது...

அரசு மேற்கொண்டு வருகின்ற அப்பட்டமான பொய்ப்பரப்புரைகளை சர்வதேச சமூகத்திற்கும், இராஜதந்திர சமூகத்திற்கு மிகசாதுரியமாக்வும் சாமர்த்தியமாகவும் அம்பலப்படுத்தினார். சிங்களப் பேரினவாதத்தின் கோட்டையில் நின்றுகொண்டே தமிழர் தேசத்திற்கு எதிராக புரிகின்ற அநீதிகளையும் அக்கிரமங்களையும் உலகிற்கு உறுதியாக எடுத்துக்கூறினார்.

ஆபத்துக்களையும் அச்சுறுத்தல்களையும் எதிர்கொண்டபோது அஞ்சா நெஞ்சுடன் அநீதியினை எதிர்த்து நின்றார். எல்லாவற்றிற்கும் மேலாக எம்மக்களுக்கு ஓயாது அரசியல் விழிப்புணர்வூட்டி தமிழ் தேசியத்தை தொடர்ந்து வலுப்படுத்தினார்.

இவர் ஆற்றிய அரும்பணி என்றுமே போற்றுதற்குரியது. தர்மரட்ணம் சிவராமின் இனப்பற்றுக்கும் விடுதலைப்பற்றிற்கும் மதிப்பளித்து அவரது நற்பணியை கௌரவிக்கும் முகமாக மாமனிதர் என்ற அதி உயர் தேசிய விருதினை அவருக்கு வழங்குவதில் நான் பெருமையடைகிறேன்.

உன்னத இலட்சியத்திற்காக வாழ்ந்த உயர்ந்த மனிதர்களை சாவு அழித்து விடுவதில்லை.

எமது தேசத்தின் வரலாற்றில் அவர்களுக்கு என்றும் அழியாத இடமுண்டென தமிழீழ தேசியத் தலைவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

(இ-4)

நிர்மலாஸ்
சங்கானை
தனுஷ், ஸ்ரீ தேவி, கருணாஸ்
மற்றும் பலர் நடித்த

தேவதையைக்கண்டேன்
கா.நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)

நாதன்ஸ் சினிமா
குளிரூட்டப்பட்டது யாழ்ப்பாணம்
யுவராஜ், அங்கிதா,
விவேக் நடித்த
நதிமித்ரா
கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
02.05.2005 முதல்
ஜெய்ஆகாஷ், ராஜ்கிரண், மிஷா, செந்தில்,
ராதாரவி நடித்த செவ்வேல்

மனோகரா
யாழ்ப்பாணம்
புத்தாண்டு வெளியீடு
இளைய தளபதி விஜய்,
ஹரினி, பிபிசாபாசு,
வடிவேல் நடித்த

சச்சின்
கா.நேரம்: 9.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

பிறந்திருக்கும் புத்தாண்டில் அதிரடி விலைக்கழிவு
மொபிரெல், டயலொக் மேசைத் தொலைபேசிகள் இணைப்புடன் எப்பிரதேசத்திற்கும் பொருத்தித் தரப்படும்
10 500/=
13 500/
தொடர்புகளுக்கு
பவர் செலுலர் டிரேடிங் கம்பனி
OFFICE : 185, 1ஆம் மாடி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் SHOP : 205/01 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
உத்தரவாதம் உண்டு உள்வரும் அழைப்பு முற்றிலும் இலவசம்
TEL/FAX: 021 - 222 7070 MOBILE: 0712 - 399220, 0714 - 182500, 0714 - 182501
இச்சலுகை கையிருப்புமுடியும்வரை மட்டுமே
கையடக்கத் தொலைபேசிகள் லொக் உடைத்துக் கொடுக்கப்படும்

EXPOAIR
your friend in the skies...
யாழ் – கொழும்பு
விமான பயணத்திற்கு அழையுங்கள்:
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891/6297, 0772 2349999/8888
கொழும்பில் - 011 2372952/3, வெள்ளவத்தையில் - 011 2360290/91
Email- jaffna@expoavi.com, reservations@expoavi.com
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.05.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.